# வருடாந்த அறிக்கை-2017



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

# தூர நோக்கு

## நோக்கு

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் அறிவுப்புலமை முதலான துறைகளில் முதன் நிலை வகிக்கும் ஒரு முக்கிய நிலையமாகத் திகழ்வதே எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நோக்காகும்

**பணிக்கூற்று**

**பணிக்கூற்று**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
பணிக்கூற்றானது வட இலங்கையின் சமூக,
பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தேவைகளுக்குச்
சிறப்பாக முக்கியத்துவமளித்து தேசிய மற்றும்
அனைத்து உலக சமூகத்தில் வெளிப்பட்டுத்
தோன்றிவரும் தேவைகளைச் சமாளிக்கக்
கூடியதாக அறிவுத்திறன், தொழில் தகுதி மற்றும்
செய்திறன் ஆற்றலுள்ள பட்டதாரிகளை
உருவாக்கும் முக்கியமான சிறந்த நிலையமாகத்
திகழ்வதாகும்.

## துணைவேந்தரின் அறிக்கை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்டறிக்கையினை 2017ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகளை சிறப்பம்சங்களாகவும் அத்தோடு சாதனைகள் மற்றும் பொது முன்னேற்றங்களையும் உள்ளடக்கி சமர்ப்பிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்ட சமூக மற்றும் பொருளாதார குழப்ப நிலைகளின் பின்னர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தனது அபிவிருத்தி மற்றும் விரிவாக்க திசையில் விரைவாகப் பயணித்து தனது தொலைநோக்கினை அடைய முயற்சித்து வருகின்றது. 2017ஆம் ஆண்டில் பல்கலைக்கழகமானது கலாநிதி, முதுதத்துவமாணி, முதுமாணி, கல்வியியல் முதுமாணி மற்றும் கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா என்பவற்றை உள்ளடக்கி 287 பட்ட மேற் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. மேலும் 2244 இளங்கலைப் பட்டதாரிகளில் 1804 உள்வாரிப் பட்டதாரிகளையும் 440 வெளிவாரிப் பட்டதாரிகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது.

தொழில்நுட்ப பீடமானது, ஏற்கனவே காணப்படுகின்ற ஒன்பது பீடங்களுடன் புதிதாக இணைந்து கொண்டுள்ளதுடன் அதனது கல்வி நடவடிக்கைகள் 218 மாணவர்களுடன் பொறியியல் தொழில்நுட்ப விஞ்ஞான இளமாணி பட்டம் மற்றும் உயிர் முறைமை தொழில்நுட்ப விஞ்ஞான இளமாணி பட்டம் ஆகிய இரு பட்டங்களுடன் 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், சமுத்திரவியல் விஞ்ஞானங்கள் மற்றும் நீரியல்வள தொழில்நுட்ப பீடம், இந்து கற்கைகள் பீடம், சேர் பொன். இராமநாதன் அரங்கக் கலைகள் மற்றும் கற்புலக் கலைகள் நிறுவனம், மற்றும் சித்த மருத்துவ நிறுவனம் போன்ற மேலும் மூன்று பீடங்களையும், இரண்டு நிறுவனங்களையும் தாபிப்பதற்கான நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொழில் நுட்ப பீடத்திற்கான புதிய கட்டிடங்கள், ஆய்வுகூடம் மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்றன பல்கலைக்கழகத்திற்கு அமைக்கப்பட்டு அதன் வாயிலாக உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் மேம்படுத்தல்கள் மற்றும் வசதிகள் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் தரமான ஆராய்ச்சிகள் மற்றும் கற்றல் சூழலின் முன்னேற்றம் மற்றும் கல்விசாரா மேலதிக நடவடிக்கைகள் போன்றவற்றின் எதிர்கால முன்னேற்றத்தில் ஒரு பலமான தாக்கத்தினை ஏற்படுத்துமென நம்புகின்றேன்.

ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் சாதனைகள், கல்விசார் நடவடிக்கைகளில் மாத்திரம் அல்லாது, கல்விசாரா மேலதிக நடவடிக்கைகள், சமூக நடவடிக்கைகள் போன்றவற்றிலும் அறிக்கையிடப்படுகின்றது. வர்ண இரவு நவம்பர் 2017ல் இடம்பெற்றது. பல மாணவர்கள் உள்ளக மற்றும் வெளியக நிகழ்வுகளில் பங்குபற்றி பரிசில்களை பெற்றுக்கொண்டனர். பல்வேறு ஊழிய உறுப்பினர்கள் ஜனாதிபதி விருது, சிறந்த ஆய்வுக்கட்டுரை விருது மற்றும் சிறந்த ஆராய்ச்சி விருது போன்றவற்றால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுச் செயல்பாட்டின் அடிப்படையில் பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடனும் ஏனைய நிறுவனங்களுடனும் இணைந்து உயர்கல்வியின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் வசதிகளை ஏற்படுத்துவதாக இருவழி ஊழியர் மற்றும் மாணவர் பரிமாற்றம் மற்றும் மேம்படுத்தல்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இவை கல்விசார், ஆராய்ச்சி மற்றும் ஏனைய செயற்பாடுகள் சாதகமான பிரதிபலிப்புகளை காட்டுவதுடன், அவை சிறந்த கல்விசார் சூழலையும் ஏற்படுத்தும். மேலும், ஊழியர்கள் மற்றும் மாணவர்களில் பலர் மதிப்பார்ந்த சர்வதேச புலமைப்பரிசில்கள் மற்றும் தொழில் மேம்பாட்டுக்கான சந்தர்ப்பங்களையும் பெற்றுக்கொண்டனர். நாட்டின் அபிவிருத்தியினை மேம்படுத்தவும், ஆராய்ச்சி கலாசாரத்தை தீவிரப்படுத்தவும் என பீடங்களால் சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளும் நடாத்தப்பட்டன.

இச் சந்தர்ப்பத்தில் பேரவை, மூதவை, பதிவாளர், சகல பீடாதிபதிகள், நிதியாளர், துறைத் தலைவர்கள், ஏனைய ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் அனைத்து பங்குதாரர்களின் தொடர்ச்சியான ஆதரவிற்கும் எமது வெற்றிக்கான அவர்களது உறுதிப்பாட்டிற்கும் ஈடுபாட்டிற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன்
துணைவேந்தர்

**சிறப்பம்சங்கள் - 2017**

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூலோபாய திட்டம் (2017 – 2021) மற்றும் செயல் திட்டம் 2017 ஆகியன தயாரிக்கப்பட்டு 2016 திசெம்பர் 17ஆம் திகதி இடம்பற்ற பேரவையின் விசேட கூட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டது.

- விவசாய பீடத்தினது விலங்கு விஞ்ஞான பிரிவின் கால்நடை மற்றும் கோழிப் பண்ணைத் திறப்பு விழா 2017 ஜனவரி 01ஆம் திகதி இடம்பெற்றது.

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 32ஆவது பொது பட்டமளிப்பு விழா 2017 ஜனவரி 10 மற்றும் 11ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்று, பட்டங்களும் டிப்ளோமாக்களும் வழங்கிவைக்கப்பட்டன.

- 03.01.2017 அன்று தொழில்நுட்ப பீடத்தின் முதலாவது அணியினது கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- சித்த மருத்துவ பிரிவு வட மாகாண சுதேச மருத்துவ அமைச்சுடன் இணைந்து சுதேச மருத்துவம் தொடர்பான தேசிய ஆராய்ச்சி மாநாடு மற்றும் கண்காட்சியினை 2017 ஜனவரி 27 தொடக்கம் 29 வரை ''இயற்கையுடன் ஆரோக்கிய வாழ்வை நோக்கி'' எனும் தொனிப்பொருளில் நடாத்தியது.

- சித்த மருத்துவ பிரிவிற்கான புதிய மூன்று மாடிக்கட்டிடம் 23.01.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- இலங்கை இரசாயனவியல் நிறுவனம் 27.01.2017 அன்று நடாத்திய பல்கலைக்கழக இரசாயனவியல் விவாதப் போட்டி 2017ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் முதலிடம் பெற்றனர்.

- விலங்கியல் பிரிவு ஏற்பாடு செய்த பூச்சி உயிரிகள் உயிரியல் தொடர்பான ''பூச்சி உயிரிகளை கட்டுப்படுத்துவதில் வளர்ந்து வரும் சவால்கள் - இலங்கையில் தொற்று நோய்கள்'' எனும் தலைப்பிலான தேசிய மாநாடு 10.02.2017 அன்று இடம்பெற்றது.

- லண்டன் புருநெல் பல்கலைக்கழகத்தின் கலாநிதி மணிவர்ணன் அவர்கள் தொழில்நுட்ப பீடம் மற்றும் பொறியியல் பீடத்திற்கு வருகைதந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் லண்டன் புருநெல் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு இடையில் வாழிடமல்லா கலாநிதி கற்கைகளை உருவாக்குவதற்குள்ள சாத்தியப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

- நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 2017ஆம் ஆண்டில் மலேசியா, தாய்லாந்து, நெதர்லாந்து மற்றும் இந்தோனேசியா போன்ற இடங்களில் இடம்பெற்ற பல்வேறு பயிற்சி நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

- நுண்கலைப்பிரிவு ''டும்பு டிங்கி'' என அழைக்கப்படும் அரங்க நாடகம் ஒன்றை 2017.02.20ஆம் திகதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடாத்தினர்.

- பல்கலைக்கழக மைதானத்தில் உள்ளக அரங்க கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டல் 09.02.2017ல் இடம்பெற்றது.

- பேரா.சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் ஞாபகார்த்த உரை – 2017 ‘‘சமையல் எண்ணெய்களில் உள்ள C18 செறிவூட்டப்படாத கொழுப்பு அமிலங்களின் வெப்ப தூண்டுதல் மற்றும் கார் ஒட்சியேற்ற எதிர்வினைகள்’’ எனும் தலைப்பில் நோர்வே அக்தார் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பேராசிரியர், பேரா.அல்பிரட் கிறிஸ்டி அவர்களால் 17.02.2017 அன்று நிகழ்த்தப்பட்டது.

- வருடாந்த பீடங்களுக்கிடையிலான புதுமுக மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு – 2016 ஆனது 2017.02. 18 மற்றும் 19 தினங்களில் இடம்பெற்றது.

- CVCD கூட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் குழு அறையில் 03.03.2017 அன்று இடம்பெற்றது.

- கல்விசார் ஊழியர்களின் தூண்டல் நிகழ்வு – 2017 SLAAS இன் பொது ஆராய்ச்சி குழு மற்றும் தேசிய விஞ்ஞான அறக்கட்டளையின் ஆராய்ச்சிப் பிரிவு ஆகியன ஏற்பாடு செய்து 03.03.2017 அன்று நடாத்தப்பட்டது.

- சர்வதேச இந்து மாநாடு இந்து நாகரிக துறையினால் ஒழுங்கு செய்யப்பட்டு 2017 மார்ச் மாதம் 3, 4 மற்றும் 5ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

- இந்து நாகரிக பிரிவு இரண்டாவது சர்வதேச சைவ மாநாட்டினை ஒழுங்கு செய்து 2017 ஏப்ரில் மாதம் 21 மற்றும் 23ஆம் திகதிகளில் நடாத்தியது.

- மருத்துவக் கல்வி மற்றும் கடுமையான மருத்துவ பராமரிப்பு எனும் விடயத்தில் அங்லியா ரஸ்கின் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் பயிற்சி பட்டறையொன்று மருத்துவ பீடத்தின் மருத்து கற்கைகள் பிரிவினால் 2017 மார்ச் 16 தொடக்கம் 19 வரை நடாத்தப்பட்டது.

- மருத்துவ கண்காட்சி 2017 மருத்துவ பீடத்தினால் ஒரு கல்விசார் நிகழ்வாக 2017 ஏப்ரில் முதல் வாரத்தில் மருத்துவ பீடத்தில் நடாத்தப்பட்டது.

- குரல் இசை நிகழ்ச்சி மற்றும் பயிற்சி பட்டறை 2017 மே மாதம் 07 தொடக்கம் 09 வரை இசை துறையினால் நடாத்தப்பட்டது.

- பொறியியல் பீடத்தின் பீடாதிபதிகள் மற்றும் துறைத்தலைவர்கள் 2017 மே மாதம் 30 தொடக்கம் ஜுன் மாதம் 10ஆம் திகதி வரை ஐக்கிய அமெரிக்காவிற்கு விஜயம் செய்து பேராசிரியர்கள் மற்றும் கலாநிதி பட்டதாரிகளுடன் கலந்துரையாடி, அவர்களை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு போதிக்கும் அதேவேளை பாடத்திட்ட அபிவிருத்திக்கும் உதவிபுரிய கோரினார்கள்.

- இந்திய அரசாங்கத்தின் மானியத்தினால் அறிவியல் நகரில் கட்டப்பட்ட விவசாய பீடத்தின் புதிய கட்டிடம் 30.05.2017 அன்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

- முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் மாணவர்கள் (15 பேர்) ”அமைதி வழியில் சமூகவியல்” எனும் நிகழ்வில் களணி பல்கலைக்கழகத்தின் மேற்கத்தேய பாரம்பரிய கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ கலாசார துறையின் ஒரு தொகுதி மாணவர்களுடன் 08.06.2017 முதல் 10.06.2017 வரை பங்குபற்றியிருந்தனர்.

- விளையாட்டு கட்டிட வளாகம் மற்றும் இரண்டு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் என்பவற்றின் திறப்பு விழா மற்றும் வவுனியா வளாகத்தின் தொழில்நுட்ப பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான இரு மாடிக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டலும் 14.06.2017 அன்று இடம்பெற்றது.

- பல்-விளையாட்டு கட்டிட வளாகத்தின் வேலைகள் யாவும் நிறைவு செய்யப்பட்டு வைபவ ரீதியாக 14.06.2017 அன்று துணைவேந்தரால் திறந்து வைக்கப்பட்டது.

- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த சர்வதேச முகாமைத்துவ நிகழ்ச்சி மாஸ்ட்ரிச் முகாமைத்துவ கல்லூரியில் இடம்பெற்றிருந்தது. இதில் பங்கேற்பதற்காக துணைவேந்தர் 2017 ஜுலை 4 முதல் 13 வரை நெதர்லாந்துக்கு விஜயம் செய்திருந்தார்.

- வவுனியா வளாகத்தின் சுற்றுச்சூழல் சமூகம் டெங்கு தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்றை மேற்கொண்டது.

- சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கௌரவ (கலாநிதி) விவியன் பாலகிருஷ்ணன் அவர்கள் 19.07.2017 அன்று மருத்துவ பீடத்திற்கு விஜயம் செய்து பீடத்தில் சுகாதார எலும்பியல் மேம்பாட்டு திட்டத்தினை ஆரம்பித்து வைத்ததுடன் லீ அறக்கட்டளையின் உத்தியோகபூர்வ நன்கொடையினையும் மருத்துவ பீடத்திற்கு வழங்கி வைத்தார்.

- முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் நான்காவது ”சமகால முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு (ICCM) - 2017” இனை 2017 ஜுலை 25 மற்றும் 26ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடாத்தியது.

- கேம்பிரிஜ் மருத்துவ பீடத்துடன் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவ கற்கைகள் பிரிவு செயலமர்வொன்றை 2017 ஜுலை 24 முதல் 28 வரை நடாத்தியது.

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் தனது வெள்ளி விழாவினை 17 ஆகஸ்ட் 2017 அன்று கொண்டாடியது.

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தமிழ் கலாசாரத்திற்கான சர்வதேச இயக்கத்துடன் இணைந்து மாநாடொன்றை 2017 ஆகஸ்ட் 05ஆம் திகதி நடாத்தியது.

- உயர்கல்வியின் ஊடாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் எனும் நிகழ்வு 30.8.2017 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

- “உபாதிதாரீ வியவசாயகத்வ உதானய - 2017” (பட்டதாரி தொழில் முயற்சியாண்மை உதயம்) எனும் நிகழ்வு தேசிய தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் தேசிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடாத்தப்பட்டதுடன் இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2017 ஆகஸ்ட் 23 தொடக்கம் 29 வரை இடம்பெற்றது.

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பாலின சமத்துவம் மற்றும் சமத்துவ மையத்தின் (GEEC) தொடக்க விழா நிகழ்வு 12.10.2017 அன்று இடம்பெற்றது.

- மூலோபாய முகாமைத்துவத் திட்டமிடல் தொடர்பான செயலமர்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு மையத்தினால் 29.10.2017 அன்று நடாத்தப்பட்டது. குறித்த செயலமர்வின் வளவாளராக ருஹுணு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் காமினி சேனாநாயக்க அவர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

- பல்கலைக்கழக சமூகத்தினருக்கு பால் அடிப்படையிலான வன்முறை தொடர்பான விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றியதான பயிற்சி பட்டறையொன்று 2017 ஒக்தோபர் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் UNFPA அனுசரனையில் நடாத்தப்பட்டது.

- வவுனியா வளாகத்தின் தொழிற் சந்தை 2017 நவம்பர் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் பம்பைமடு வளாகத்தில் நடைபெற்றது.

- சட்டத்துறையானது ''நீதம்'' எனும் சஞ்சிகையை 2017ல் வெளியிட்டதுடன் அந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் அவர்கள் கலந்துகொண்டார்.

- வர்ண இரவு நவம்பர் 2017ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது.

- வறண்ட வலய விவசாயம் தொடர்பிலான சர்வதேச மாநாடு (ICDA) 2017 ஆனது விவசாய பீடத்தில் 2017 நவம்பர் 1ஆம் 2ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

- 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 தொடக்கம் 22 வரை அனைத்து இந்திய மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தில் (AIMS) இடம்பெற்ற 17ஆவது TERCAP சர்வதேச மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ERC ற்கு SIDCER அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

- மூன்றாம் உலக கற்கைகள் - தென் ஆசிய சாம்பியன் 2017 (ATWS-SAC) உடன் இணைந்து சர்வதேச மாநாட்டினை 2017 நவம்பர் 28, 29 மற்றும் 30ஆம் திகதிகளில் நடாத்தியது

- 33வது வருடாந்த பொது பட்டமளிப்பு விழா பாகம் 1 ஆனது 2017 திசெம்பர் 8ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்றது.

- பொறியியல் துறையில் இயந்திர செயன்முறையில் உயர் திறமையை வெளிப்படுத்தும் மாணவருக்கு வழங்கவென பேரா.எஸ்.மகாலிங்கம் தங்கப் பதக்கத்தினை (ரூபா.75,000/ஆண்டிற்கு) உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. மேலும் பேரா.எஸ்.மகாலிங்கம் புலமைப்பரிசிலானது நிதி ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு உதவும் வகையில் வருடத்திற்கு ரூபா.96,000 வழங்க இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. பேரா.எஸ்.மகாலிங்கம் புலமைப்பரிசிலானது 30.11.2017 அன்று ரூபா.100,000 இனை புதுமையான திட்ட முன்மொழிவிற்காக வழங்கி அதனையும் உறுதிசெய்துள்ளது

## பொருள் உள்ளடக்கம்


துூர நோக்கு ............................................................ i
பணிக்கூற்று............................................................ ii
துணைவேந்தரின் அறிக்கை............................................................ iii
1. அறிமுகம் ............................................................ 1
1.1 இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாறு ............................................................ 1
1.2 வருடாந்த அறிக்கையின் காலப்பகுதி ............................................................ 1
1.3 பேரவை............................................................ 1
1.4 மூதவை ............................................................ 2
1.5 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் ............................................................ 6
1.6 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அமைப்பு வரைபடம் ............................................................ 9
2. பீடங்கள், வளாகம், அலகுகள் மற்றும் நிலையங்களின் பெயர் ............................................................ 10
2.1 (A) பீடங்கள் மற்றும் வளாகம் ............................................................ 10
2.2 இணைந்த அலகுகள்............................................................ 10
2.3 நிலையங்கள்............................................................ 10
2.4 குழுக்கள் மற்றும் கூட்டங்கள்............................................................ 10
2.5 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளின் எண்ணிக்கை ............................................................ 11
2.6 மாணவர் எண்ணிக்கை ............................................................ 13
2.7 2015/2016 (உ/த) இருந்து புதிய தொகுதி மாணவர் அனுமதி ............................................................ 13
2.8 மாணவர் பதிவு மற்றும் பட்டதாரிகளின் வெளியேறுகை............................................................ 14
2.8.1 கல்வியாண்டு 2015/2016 ற்கான புதிய அனுமதிகள் ............................................................ 14
2.9 உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள் ............................................................ 15
2.10 பட்டப்பின் கற்கைகள் பீடம் - பட்டப்பின் படிப்பு மாணவர்கள் ............................................................ 16
2.11 மாணவர் தொகை............................................................ 18
2.12 வெளிநாட்டு மாணவர்களின் விபரம் ............................................................ 19
2.13 வளங்கள் மற்றும் மாணவர்களின் விபரங்கள் ............................................................ 19
2.14 கல்விசார் மற்றும் கல்விசார்-ஆதரவு ஊழியர் விபரங்கள் ............................................................ 21
2.15 நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத்தரமல்லாத ஊழியர்களின் விபரங்கள் ............................................................ 25
2.16 ஆளணி விபரங்கள் - கல்விசார் ஊழியர்கள் - 2017 ............................................................ 27
2.17 ஆளணி விபரங்கள் - நிறைவேற்று மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் ............................................................ 27
2.18 மாணவர் மற்றும் ஊழியர்களின் சாதனைகள் ............................................................ 30
2.18.1 மாணவர்களின் சாதனைகள் ............................................................ 30
2.18.2 ஊழியர்களின் சாதனைகள்............................................................ 31
2.18.3 மாணவர்களின் நிகழ்வுகள்............................................................ 33
3. வெளிநாட்டு உதவியுடனான திட்டங்கள்............................................................ 35
4. தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்............................................................ 35
5. எதிர்கால திட்டங்கள்............................................................ 36
5.1 பீடங்களின் மட்டத்திலான மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திகள்............................................................ 36

6. ஏனைய நடவடிக்கைகள்..........37
6.1.1 ஊழியர்கள் மேம்பாட்டு மையம்..........37
6.1.2 சித்த மருத்துவ அலகு..........37
6.1.3 "ICESM 2018" முன் மாநாட்டு பயிற்சிப் பட்டறை..........38
6.1.4 இரண்டாவது சர்வதேச சைவ மாநாடு -2017...........38
6.1.5 மேலதிக ஆளணி..........38
6.1.6 எதிர்கால அபிவிருத்திகளுக்காக காணிகளை கொள்வனவு செய்தல்..........38
6.1.7 MIS அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்..........38
6.1.8 தர உத்தரவாதம்..........38
6.1.9 பல்கலைக்கழக இணையத்தளத்தையும் பல்கலைக்கழக தரத்தையும் புதுப்பித்தல் 38
7. மறுசீரமைப்பு..........38
7.1 தாபனங்கள்..........38
7.1.1 பீடங்கள் அடிப்படையில்...........38
7.1.2 துறை அடிப்படையில்..........39
7.2 முன்மொழிவுகள் / தரமுயர்த்தல் / புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்..........40
7.2.1 பீடங்கள் அடிப்படையில்..........40
7.2.2 துறை அடிப்படையில்..........41
7.2.3 அலகு அடிப்படையில்..........41
7.2.4 பட்ட அடிப்படையில்..........42
8. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடனான தொடர்பு..........43
8.1 புரிந்துணர்வு ஒப்பந்தம் -பொறியியல் பீடம்..........43
8.2 பீடத்திற்கான வெளிநாட்டு பிரதிநிதிகளின் விஜயம்..........50
9. மாநாடுகள் /பயிற்சிப் பட்டறைகள் / நினைவுப் பேருரைகள்..........50
9.1 மாநாடு..........50
9.2 பயிற்சிப் பட்டறைகள்..........51
9.3 ஞாபகார்த்த விரிவுரைகள்-2017..........61
10. உள்ளக கணக்காய்வு அலகு..........61
11. உடற் கல்வி அலகு..........64
11.1 அறிமுகம்..........64
11.2 வர்ண இரவு..........64
11.3 விளையாட்டு நடவடிக்கைகள்..........64
12. உத்தியோகத்தர் மேம்பாட்டு மையம்..........65
13. தொழில் வழிகாட்டல்..........67
14. நூலகம்..........68
15. நலச் சேவைகள்..........69
16. மருத்துவ நிலையம்..........72
17. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்..........73
17.1 மாணவர் ஆட்சேர்ப்பு:..........73
17.2 வருடாந்தப் பரீட்சைகள் :..........74

17.3 பெறுபேறுகளை வெளியிடுதல்: ........ 74
17.4 பட்டமளிப்பு: ........ 75
17.5 ஊழியர்களின் பலம்: ........ 75
18. உள்ளக தர உத்தரவாத அலகின் தாபிப்பு ........ 75
19. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம் ........ 78
19.1 அறிமுகம் ........ 78
19.1.1 வவுனியா வளாகத்தின் வரலாறு ........ 78
19.1.2 ஆண்டறிக்கையின் காலப்பகுதி ........ 78
19.2 நோக்குக் கூற்று ........ 79
19.3 பணிக்கூற்று ........ 79
19.4 வவுனியா வளாகத்தின் பீடங்கள் ........ 80
19.5 வளாக சபை உறுப்பினர்கள் ........ 80
19.6 ஏனைய குழுக்கள் ........ 81
19.7 சீர்திருத்தங்கள் ........ 81
19.7.1 வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தல் ........ 81
19.7.2 பீடங்கள் மற்றும் துறைகளின் தாபிப்பு ........ 82
19.7.3 நிகழ்வுகள் ........ 82
19.7.4 சமுதாய மேம்பாட்டு நடவடிக்கைகள் ........ 85
19.7.5 கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ........ 86
19.7.6 விளையாட்டு நடவடிக்கைகள் ........ 86
19.7.7 அழகியற் செயல்பாடுகள் ........ 87
19.7.8 தகவல் தொழில்நுட்ப நிலையம் ........ 87
19.7.9 வேலைவாய்ப்பு ........ 87
19.8 உத்தியோகத்தர் மேம்பாட்டு மையம் ........ 88
19.9 நிறுவன பெறுபேறுகள் கட்டமைப்பு (ORF) ........ 89
19.11. தகவல் அறியும் உரிமை(RTI) ........ 90
19.10 வவுனியா வளாகத்தின் அமைப்பு வரைபடம் ........ 91
19.11 விரிவான சனத்தொகை ........ 92
19.12 உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள்-2017 ........ 93
19.13 கல்விசார் மற்றும் கல்விசார் ஆதரவு உத்தியோகத்தர்களின் விபரங்கள் ........ 94
19.14 நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத்தரமல்லாத ஊழியர்களின் விபரங்கள் ........ 94
19.15 உண்மையான மீண்டெழும் செலவு விபரங்கள் ........ 96
19.16 உண்மையான மூலதன செலவு விபரங்கள் ........ 96
19.17 நிதிச் செயற்பாட்டு பகுப்பாய்வு - 2017 ........ 96
20. பல்கலைக்கழகத்தின் செயற்திறன் ........ 96
20.1.1 யாழ்ப்பாண பிரதான வளாகங்கள் ........ 96
20.1.2 கிளிநொச்சி வளாகங்கள் ........ 98
20.1.3 வவுனியா வளாகம் ........ 100
20.2 கல்விசார் செயல்திறன் ........ 101
20.2.1 ஆராய்ச்சி, கண்டுப்பிடிப்பு மற்றும் வெளியீடுகளின் விபரங்கள் (பீட வாரியாக) ........ 101
20.2.2 பட்டப்படிப்புகள் பீடம் ........ 102

20.2.3 நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் (பீட வாரியாக) 103
20.2.4 பட்டப்படிப்புகள் பீடம்......103
20.2.5 பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகளின் விபரங்கள் (பீட வாரியாக)......105
20.2.6 நிதிச் செயற்பாடு......105
20.2.7 மூலதன செலவு விபரங்கள்......105
20.2.8 திட்டங்களின் விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியுதவி)......106
20.2.9 திட்டங்களின் செலவு விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியுதவி)......106
20.2.10 நிதியியல் முன்னேற்றத்தின் விபரங்கள் (செலவு)......107
20.2.11 நிதியியல் முன்னேற்றத்தின் விபரங்கள் (உருவாக்கப்பட்ட வருமானம்)......107
20.2.12 நிதிச் செயற்பாட்டுப் பகுப்பாய்வு -2017......108
20.2.13 2017ல் பெற்றுக்கொள்ளப்பட்ட உட்கட்டுமான வசதிகளின் விபரங்கள்......108

# 1. அறிமுகம்

## 1.1 இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாறு

யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வாழ் மக்களின் நீண்டகால அவாவாக இருந்தது. இந்த அபிலாஷை 15 ஜுலை 1974ல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகத்தினை திருநெல்வேலியிலுள்ள பரமேஸ்வரா கல்லூரியில் நிர்மாணித்து பிரகடனப்படுத்தப்பட்ட போது நிறைவேற்றப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழக, யாழ் வளாகம் 06.10.1974 இல், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அப்போதைய பிரதமர் மேன்மை தங்கிய திருமதி. சிறிமாவோ ரத்வத்த டயஸ் பண்டாரநாயக்க அவர்களினால் 22.12.1978ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் படி, 1978 இல் பாராளுமன்ற பல்கலைக்கழக சட்ட அமுலாக்க இலக்கம் 16 இன் கீழ் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இவ் யாழ். வளாகம் சுதந்திரமானதும் தன்னாட்சியானதுமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக 01.01.1979 இல் உருவானதோடு, இன்று பாரியளவில் வளர்ச்சி கண்டுள்ளதுடன், இன்று அது 10 பீடங்களையும், 61 கல்வித் துறைகளினதும் பல வகையான சேவைகள்/கல்வி/உதவிப் பிரிவுகள், நிலையங்கள் மற்றும் வவுனியாவிலுள்ள வளாகத்தினதும் இல்லமாகத் திகழ்கிறது.

## 1.2 வருடாந்த அறிக்கையின் காலப்பகுதி

இந்த வருடாந்த அறிக்கை 01.01.2017 தொடக்கம் 31.12.2017 வரையிலான பல்கலைக்கழக செயற்பாடுகளையும் அடைவுகளையும் கால எல்லையாக கொண்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக வருடாந்த அறிக்கை 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பிரிவு 14 (1) இற்கமைய சமர்ப்பிக்கப்படுகிறது.

## 1.3 பேரவை

1985 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 44 இன் விதிமுறைகளின் கீழ் பல்கலைக்கழக பேரவை அமையப்பெற்றுள்ளது. பல்கலைக்கழக பேரவையானது பல்கலைக்கழகத்தினை ஆளும் உறுப்பாக காணப்படுவதுடன், அது துணைவேந்தர் (பதவி வழி தலைவர்), வவுனியா வளாகத்தின் வளாக முதல்வர், பத்துப் பீடங்களினதும் பீடாதிபதிகள், மூதவையிலிருந்து இரண்டு பிரதிநிதிகளும், UGC ஆல் நியமிக்கப்பட்ட 15 உறுப்பினர்களும் ஆக அமையப்பெறுகின்றது.

| வரி.இல | பேரவை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|---|
| 01 | தலைவர்: துணைவேந்தர் | பேரா.(செல்வி).வ.அரசரத்தினம் (ஏப்ரில் 2011-ஏப்ரில் 2017)<br>பேரா.ஆர்.விக்னேஸ்வரன் (ஏப்ரில் 2017-தற்போதுவரை) |
| 02 | வளாக முதல்வர், வவுனியா வளாகம் | கலாநிதி.டி.மங்கலேஸ்வரன் (01.10.2015-30.10.2018) |
| 03 | **பீடங்களினது பீடாதிபதிகள்** | |
| | • கலை | கலாநிதி.கே.சுதாகர் |
| | • விவசாயம் | பேரா.(திருமதி) டி.மிகுந்தன் |
| | • பிரயோக விஞ்ஞானம் | திரு.எஸ்.குகனேசன் |
| | • வியாபாரக் கற்கைகள் | கலாநிதி.ஏ.புஸ்பநாதன் |
| | • பொறியியல் | கலாநிதி.ஏ.அற்புதராஜா |
| | • பட்டப்பின் கற்கைகள் | பேரா.ஜீ.மிகுந்தன் |
| | • மருத்துவம் | கலாநிதி.எஸ்.ரவிராஜ் |

| | | |
|---|---|---|
| | • முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம் | பேரா.ரி.வேல்நம்பி |
| | • விஞ்ஞானம் | பேரா.ஆர்.விக்னேஸ்வரன் (ஜனவரி-ஏப்ரில் 2017) பேரா. (திருமதி) எஸ்.குகநாதன் (ஏப்ரில்-மே 2017) பேரா.ஜே.பீ.ஜெயதேவன் (ஜுன் 2017- தற்போதுவரை) |
| | • தொழில்நுட்பம் | பேரா.எஸ்.ஸ்ரீசற்குணராஜா (21/12/2016-30/09/2017)<br>கலாநிதி. (திருமதி)எஸ்.சிவசந்திரன் (01/10/2017- தற்போதுவரை) |
| **ஏனையோர்** | | |
| **மூதவையினால் தேர்ந்தெடுக்கப்பட்டோர்** | | |
| | • பேரா.ஆர்.ரவிராஜன்<br>• கலாநிதி.(திருமதி).எஸ்.ரமேஷ் | 20.11.2015-19.11.2018<br>20.11.2015-19.11.2018 |
| **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டோர்** | | |
| | • திரு.மனோ சேகரம் | 20.04.2015- தற்போது வரை |
| | • பேரா.வீ.தர்மரட்னம் | 20.04.2015-19.04.2018 |
| | • பேரா.எஸ்கே.சிற்றம்பலம் | 20.04.2015-19.04.2018 |
| | • பொறி.ஆர்.எம்.டப்.ரத்நாயக்க | 05.12.2016-11.09.2017 |
| | • திரு.டீ.பி.கே.எம்.குணதிலக்க | 12.09.2017- தற்போது வரை |
| | • கலாநிதி.பி.லக்ஷ்மன் | 20.04.2015- தற்போது வரை |
| | • கலாநிதி.எஸ்.சிவசேகரம் | 20.04.2015- தற்போது வரை |
| | • கலாநிதி.என்.ஜெயகுமாரன் | 20.04.2015-19.04.2018 |
| | • பேரா.எஸ்எச்.ஹஸ்புல்லா | 20.04.2015- தற்போது வரை |
| | • கலாநிதி. ஆறு திருமுருகன் | 20.04.2015- தற்போது வரை |
| | • திரு.என்.வேதநாயகன் | 20.04.2015- தற்போது வரை |
| | • திரு.எம்.கணபதிப்பிள்ளை | 20.04.2015-19.04.2018 |
| | • கலாநிதி.டீ.நேசையா | 20.04.2015-19.04.2018 |
| | • திரு.எஸ்.ரங்கராஜா | 20.04.2015-19.04.2018 |
| | • திருமதி.எஸ்.அபிமன்னசிங்கம் | 17.05.2016- தற்போது வரை |
| | • திரு.வீ.கனகசபாபதி | 10.01.2017- தற்போது வரை |
| | **செயலாளர்: பதிவாளர்** | |
| | • திரு.என்.ராஜவிசாகன் | பதிற் பதிவாளர் - மார்ச் 2017 வரை |
| | • திரு.வீ.காண்டீபன் | மார்ச் 2017- தற்போது வரை |

## 1.4 மூதவை

பல்கலைக்கழக மூதவையானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 46 (2), 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பல்கலைக்கழக (திருத்தம்) சட்டத்தின் திருத்தத்தின் அடிப்படையிலும் அமையப்பெற்றுள்ளது. 2017 ஆம் ஆண்டில் அது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

| பதவி வழி | | |
|---|---|---|
| **பதவி** | **பதவி** | **பதவி** |
| தலைவர்: துணைவேந்தர்<br>தலைவர்: துணைவேந்தர் | பேரா.(செல்வி).வ.அரசரத்தினம்<br>பேரா.ஆர்.விக்னேஸ்வரன் | (ஏப்ரில் 2011-ஏப்ரில் 2017)<br>(ஏப்ரில் 2017- தற்போது வரை) |

| | | |
|---|---|---|
| **வளாக முதல்வர், வவுனியா வளாகம்** | கலாநிதி.டி.மங்கலேஸ்வரன் | 01.10.2015- தற்போது வரை |
| **பீடங்களின் பீடாதிபதிகள்** | | |
| • பிரயோக விஞ்ஞானம் | திரு.எஸ்.குகனேசன் | 12.06.2016- தற்போது வரை |
| • வணிக கற்கைகள் | கலாநிதி.ஏ.புஸ்பநாதன் | 04.12.2016- தற்போது வரை |
| • கலை | பேரா.என்.ஞானகுமாரன் | 02.07.2015-02.01.2017 |
| | கலாநிதி.கே.சுதாகர் | 20.01.2017- தற்போது வரை |
| • விவசாயம் | பேரா.(திருமதி) டி.மிகுந்தன் | 29.06.2015-28.06.2018 |
| • பொறியியல் | கலாநிதி.ஏ.அற்புதராஜா | 24.06.2015- தற்போது வரை |
| • பட்டப்பின் கற்கைகள் | பேரா.ஜீ.மிகுந்தன் | 29.11.2014- தற்போது வரை |
| • மருத்துவம் | கலாநிதி.எஸ்.ரவிராஜ் | 14.09.2015- தற்போது வரை |
| • முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகம் | பேரா.ரி.வேல்நம்பி | 15.08.2014- தற்போது வரை |
| • விஞ்ஞானம் | பேரா.ஆர்.விக்னேஸ்வரன்<br>பேரா.ஜே.பீ.ஜெயதேவன் | 18.07.2016-31.04.2017<br>31.05.2017- தற்போது வரை |
| • தொழில்நுட்பம் | பேரா.எஸ்.ஸ்ரீசற்குணராஜா | 01.01.2017-30.09.2017 |
| | கலாநிதி.(திருமதி) எஸ்.சிவசந்திரன் | 01.10.2017- தற்போது வரை |
| **துறைத் தலைவர்கள்** | | |
| • கணக்கியல், கணக்கியல் பேராசிரியர் மற்றும் இணைப்பாளர் / திறந்த மற்றும் தொலைகல்வி நிலையம் | பேரா.பீ.நிமலதாசன் | 01.01.2016-30.12.2018 |
| • விவசாய உயிரியல் | கலாநிதி.ஜி.திருக்குமரன் | 02.01.2013-01.01.2019 |
| • விவசாய இரசாயனவியல் | கலாநிதி.எஸ்.வசந்தரூபா | 02.02.2016-01.02.2019 |
| • விவசாய பொருளியல் | கலாநிதி.கே.சூரியகுமார் | 1.12.2016-29.06.2018 |
| • விவசாய பொறியியல் | திரு.எம்.பிரபாகரன் | 03.11.2015-02.11.2018 |
| • இணைந்த சுகாதார விஞ்ஞானம் | திருமதி.தெய்வி தபோதரன் | 01.12.2015-30.11.2018 |
| • உடற்கூற்றியல் | கலாநிதி.டி.செந்தூரன் | 01.08.2015-31.07.2018 |
| • விலங்கு விஞ்ஞானம் | கலாநிதி.(செல்வி).ஜெ.சின்னையா | 22.10.2015-21.10.2018 |
| • உழவியல் | கலாநிதி.(திருமதி) எஸ்.சிவசந்திரன் | 29.06.2015-28.08.2018 |
| • உயிர் இரசாயனவியல் | கலாநிதி.எஸ்.பாலகுமார் | 14.10.2015-13.10.2018 |
| • உயிரியல் விஞ்ஞானம் | கலாநிதி.(திருமதி)ஏ.நந்தகுமாரன் | 01.09.2014-31.08.2017 |
| | கலாநிதி.(திருமதி)ஜெ.நிமலன் (செயற்படு தலைவர்) | 01.09.2017-30.11.2017 |
| | கலாநிதி.(திருமதி)ஜெ.நிமலன் | 01.12.2017-30.11.2020 |
| • தாவரவியல் | திருமதி கே.நிரஞ்சன் | 02.05.2014-01.05.2017 |
| | பேரா.பி.செவ்வேல் (செயற்படு தலைவர்) | 05.05.2017-04.08.2017 |
| • | பேரா.பி.செவ்வேல் | 05.08.2017-04.08.2020 |
| • சிவில் பொறியியல் | கலாநிதி.எஸ்.எஸ்.சிவகுமார் | 01.06.2015-31.05.2018 |
| • கிறிஸ்தவ நாகரீகம் | வண.கலாநிதி.போல்.ரொஹான் (செயற்படு தலைவர்)<br>வண.கலாநிதி.போல்.ரொஹான் (தலைவர்) | 01.02.2017-30.04.2017<br>01.05.2017-30.04.2020 |
| • வர்த்தகம் | திரு.பீ.பிரகலாதன் | 01.08.2016-31.07.2019 |
| • கணினி பொறியியல் | கலாநிதி.ஏ.கணேஸ்வரன் | 27.09.2016-26.09.2019 |
| • கணினி விஞ்ஞானம் | கலாநிதி.கே.தபோதரன் | 01.06.2014-31.05.2017 |
| | கலாநிதி.ஏ.ரமணன் | 01.06.2017 - 30.08.2017<br>31.08.2017 - 30.08.2020 |
| • சமூக மற்றும் குடும்ப மருத்துவம் | கலாநிதி.ஆர்.சுரேந்திரகுமரன் | 09.01.2016-08.01.2019 |

| | | |
|---|---|---|
| • கணினி அலகு | கலாநிதி.ஈ.வை.ஏ.சார்ள்ஸ் | 01.04.2015-30.06.2018 |
| • இரசாயனவியல் | கலாநிதி.பி.அபிமன் | 01.06.2017-31.05.2020 |
| • நடனம் | திருமதி.எஸ்.அனந்தசயனன் (செயற்படு தலைவர்) | 02.11.2016-01.02.2017<br>02.02.2017-06.04.2017 |
| | செல்வி.எம்.அருளையா (செயற்படு தலைவர்) | 07.04.2017-08.07.2017<br>09.07.2017-08.10.2017 |
| • பொருளியல் | திருமதி.வீ.ரவிசங்கர் (செயற்படு தலைவர்) | 01.11.2016-31.01.2017<br>01.02.2017-31.01.2020 |
| • கல்வியியல் | கலாநிதி.(திருமதி).ஏ.சத்தியசீலன் | 05.11.2011-04.11.2017 |
| • ELTC ஆ.மொ.க.அ | திருமதி.கே.சிவாஜி | 10.05.2016-09.05.2019 |
| • பொருளியல் மற்றும் முகாமைத்துவம் | திருமதி.பி.கொட்வின் பிலிப் | 06.03.2014-05.03.2017 |
| | கலாநிதி.வை.நந்தகோபாலன் (செயற்படு தலைவர்) | 06.03.2017-05.06.2017<br>06.06.2017-05.06.2017 |
| • மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் | கலாநிதி.டி.திருவரன் | 01.06.2015-31.05.2018 |
| • பொறியியல் தொழில்நுட்பம் | கலாநிதி.(திருமதி).ஐங்கரன் (செயற்படு தலைவர்) | 02.01.2017-01.04.2017<br>02.04.2017-01.04.2020 |
| • நிதியியல் முகாமைத்துவம் | கலாநிதி.(திருமதி).ஆர்.யோகேந்திரராஜா | 15.08.2015-14.08.2018 |
| • நிதி மற்றும் கணக்கியல் | திரு.ஏ.தயாபரன் | 03.04.2014-02.04.2017 |
| | திருமதி.ஜே.எஸ்.தேவரூபன் | 03.07.2017-02.07.2020 |
| • நுண்கலைகள் | பேரா.(திருமதி).ஏ.என்.கிருஸ்ணவேணி | 18.08.2015-17.09.2015<br>17.09.2015-30.05.2017 |
| | கலாநிதி.டி.சனாதனன் (செயற்படு தலைவர்) | 01.06.2017-31.08.2017<br>01.09.2017-31.08.2020 |
| • மீன்பிடியியல் | பேரா.(திருமதி).எஸ்.குகநாதன். | 01.08.2015-31.07.2018 |
| • தடயவியல் மருத்துவம் | கலாநிதி.ஆர்.சுரேந்திரகுமரன் (செயற்படு தலைவர்) | 09.10.2015-08.10.2017 |
| • புவியியல் | கலாநிதி.கே.சுதாகர் | 01.12.2013-28.02.2017 |
| | பேரா.ஏ.சூசை (செயற்படு தலைவர்) | 25.01.2017-24.04.2017<br>25.04.2017-02.04.2018 |
| • பல்துறை கற்கைகள் - பொறியியல் | கலாநிதி.ஏ.அன்புறுவேல் | 01.06.2015-31.05.2018 |
| • பல்துறை கற்கைகள் - தொழில்நுட்பம் | பேரா.எஸ்.ஸ்ரீசற்குணராஜா (செயற்படு தலைவர்) | 01.01.2017-31.03.2017<br>01.04.2017-30.06.2017 |
| | கலாநிதி.பி.கதிர்காமநாதன் (செயற்படு தலைவர்) | 01.07.2017-31.07.2017 |
| | கலாநிதி.டி.கேதீசன் | 20.07.2018-19.07.2021 |
| • வரலாறு | பேரா.எஸ்.கிருஸ்ணராஜா | 21.11.2014-20.11.2017 |
| • இந்து நாகரீகம் | பேரா.எம்.வேதநாதன் | 14.12.2015-08.10.2017 |
| | திருமதி.எஸ்.ஸ்ரீமுரளீதரன் (செயற்படு தலைவர்) | 08.10.2017-07.01.2018 |
| • மனிதவள முகாமைத்துவம் | திருமதி.டி.ரவீந்திரன் (செயற்படு தலைவர்)<br>திருமதி.டி.ரவீந்திரன் (தலைவர்) | 01.11.2016-31.01.2017<br>01.02.2017-31.01.2020 |
| • சட்டம் | கலாநிதி.(திருமதி).எஸ்.ரமேஷ் | 02.05.2014-01.05.2017 |
| | திரு.கே.குருபரன் (செயற்படு தலைவர்) | 02.01.2017-01.04.2017<br>02.04.2017-01.04.2020 |

| | | |
|---|---|---|
| • மொழியியல் மற்றும் ஆங்கிலம் | பேரா.(திருமதி).எஸ்.ரமேஷ் (செயற்படு தலைவர்) | 01.11.2016-31.01.2017 |
| | பேரா.(திருமதி).எஸ்.ரமேஷ் | 01.02.2017-31.01.2020 |
| • சந்தைப்படுத்தல் | திரு.எம்.கருணாநிதி (செயற்படு தலைவர்) | 01.11.2016-31.01.2017 |
| | திரு.எம்.கருணாநிதி (தலைவர்) | 01.02.2017-31.01.2020 |
| • கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல் | திரு.எஸ்.செல்வராஜன் | 18.07.2016-17.07.2019 |
| • நுண்ணுயிரியல் | கலாநிதி.(திருமதி).கே.முருகாநந்தன் | 01.08.2017-31.07.2020 |
| • மருத்துவம் | கலாநிதி.என்.சுகந்தன் | 01.01.2017-31.12.2019 |
| • இசை | கலாநிதி.ஆர்.கபிலன் (செயற்பாட்டு தலைவர்) | 05.04.2016-04.01.2017<br>05.01.2017-04.04.2017 |
| | திருமதி.கே.கருணா (செயற்பாட்டு தலைவர்) | 05.04.2017-04.07.2017<br>05.07.2017-04.10.2017 |
| • மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் | கலாநிதி.கே.முகுந்தன் | 02.05.2011-01.05.2017<br>02.05.2017-01.05.2020 |
| • நோய்க்குறியியல் | கலாநிதி.எஸ்.கண்ணதாசன் | 01.03.2015-31.07.2017 |
| | கலாநிதி.(திருமதி).எச்.சிவக்குமார் (செயற்பாட்டு தலைவர்) | 01.08.2017-31.10.2017 |
| • மயக்கவியல் | கலாநிதி.(திருமதி).கைலைநாதன் (செயற்பாட்டு தலைவர்) | |
| | கலாநிதி.(திருமதி).என்.உமாசங்கர் (செயற்பாட்டு தலைவர்)<br>கலாநிதி.(திருமதி).என்.உமாசங்கர் (தலைவர்) | 01.02.2017-30.04.2017<br>01.05.2017-30.04.2020 |
| • ஒட்டுண்ணியியல் | கலாநிதி.எஸ்.கண்ணதாசன் | 01.08.2017-31.07.2020 |
| • பௌதீக விஞ்ஞானம் | கலாநிதி.டி.கேதீசன் | 26.05.2014-25.05.2017<br>26.05.2017-25.05.2020 |
| • மெய்யியல் | கலாநிதி.கே.கஜவிந்தன் | 02.07.2015-01.07.2018 |
| • மருந்தாக்கவியல் | கலாநிதி.(திருமதி). சுனில் நவரட்ணராஜா | 02.12.2015-01.12.2018 |
| • உடலியக்கவியல் | பீடாதிபதியால் மேற்பார்வை செய்யப்பட்டது | 01.10.2016-07.05.2017 |
| | கலாநிதி.(திருமதி). சுனில் நவரட்ணராஜா (செயற்பாட்டு தலைவர்) | 08.05.2017-07.08.2017<br>08.08.2017-07.11.2017<br>08.11.2017-தற்போது வரை |
| • பௌதீகவியல் | கலாநிதி.கே.விக்ணரூபன் (செயற்பாட்டு தலைவர்) | 02.01.2017-01.04.2017<br>02.04.2017-01.04.2020 |
| • அரசறிவியல் | திரு.கே.டி.கணேஷலிங்கம் | 07.02.2016-06.02.2019 |
| • மனநலவியல் | பீடாதிபதியால் பார்க்கப்பட்டது | 01.10.2014-29.09.2018 |
| • சமஸ்கிருதம் | திரு.எஸ்.பத்மநாதன் | 01.12.2015-30.11.2018 |
| • சித்த மருத்துவம் | கலாநிதி.(திருமதி).வீ.சத்தியசீலன் | 26.06.2016-25.06.2019 |
| • சமூகவியல் | திருமதி.ஜே.ஆர்.பஹீரதி | 13.12.2015-12.12.2018 |
| • அறுவை சிகிச்சை | கலாநிதி..எஸ்.ராஜேந்திரா | 14.12.2015-13.12.2018 |
| • தலைவர், தமிழ் பேராசிரியர் | பேரா.எம்.ரகுநாதன் (செயற்பாட்டு தலைவர்)<br>பேரா.எம்.ரகுநாதன் (தலைவர்) | 01.01.2017-31.03.2017<br>01.04.2017-31.03.2020 |
| • விலங்கியல் | கலாநிதி.(திருமதி).ஆர்.ஞானேஸ்வரன் | 01.01.2012-31.12.2017 |
| **பேராசிரியர்கள்: 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பல்கலைக்கழக (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 46 (2) (ஏ) இன் கீழ்** | | |
| • சிரேஷ்ட பேராசிரியர் பௌதிகவியல் | சிரேஷ்ட பேராசிரியர்.கே.கந்தசாமி | 23.11.2007-01.10.2016 |

| | | |
|---|---|---|
| • வரலாற்று பேராசிரியர் | பேராசிரியர்.பி.புஸ்பரட்ணம் | 02.11.2015 |
| • சமூகவியல் பேராசிரியர் | சிரேஷ்ட பேராசிரியர். என்.சண்முகலிங்கம் | 01.10.2016 |
| • வரலாற்று பேராசிரியர் | பேராசிரியர்.எஸ்.சத்தியசீலன் | 03.02.2017 |
| • விலங்கியல் பேராசிரியர் | பேராசிரியர்.எஸ்.என்.சுரேந்திரன் | 04.01.2012 |
| • சேதன இரசாயன பேராசிரியர் | பேராசிரியர்.ஜே.பி.ஜெயதேவன் | 26.11.2013 |
| • அரசறிவியல் பேராசிரியர் | பேராசிரியர்.ஏ.வீ.மணிவாசகர் | 30.12.2004 |
| **1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பல்கலைக்கழக (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 46 (2) (ஒ) இன் கீழ் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்** | | |
| • கலை | கலாநிதி.எஸ்.விஜயகுமார்<br>திரு.ஏ.இராசகுமாரன் | 16.11.2015-15.11.2015<br>16.11.2015-15.11.2018 |
| • விவசாயம் | கலாநிதி.(திருமதி).ஆர்.ஞானவேல்ராஜா<br>திருமதி.எல்.பிரதீபன் | 25.02.2016-15.11.2018<br>16.11.2015-15.11.2018 |
| • முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகம் | கலாநிதி.எஸ்.ரமேஷ்<br>திரு.ஜே.ரொபின்சன் | 16.11.2015-15.11.2018<br>16.11.2015-15.11.2018 |
| • மருத்துவம் | கலாநிதி.(திருமதி).கே.முருகானந்தம்<br>கலாநிதி.எஸ்.துரைசாமி சர்மா | 14.09.2015-13.09.2018<br>14.09.2015-13.09.2018 |
| • பொறியியல் | கலாநிதி.எஸ்.டானியல் நிருபன்<br>கலாநிதி.பி.கதிர்காமநாதன் | 16.11.2015-15.11.2018<br>16.11.2015-15.11.2018 |
| • விஞ்ஞானம் | திருமதி.என்.சற்குணநாதன்<br>திருமதி.ஜே.நந்தகுமார்<br>கலாநிதி.பி.ஜங்கரன்<br>கலாநிதி.எஸ்.அறிவழகன் | 03.02.2014-02.02.2017<br>03.02.2014-02.02.2017<br>10.03.2017-09.03.2020<br>10.03.2017-09.03.2020 |
| • பிரயோக விஞ்ஞானம் | திரு.பீ.யோகராஜா<br>திரு.எஸ்.திருக்குமரன் | |
| • வணிக கற்கைகள் | திரு.டி.பிரதீபன்<br>கலாநிதி.(திருமதி).கே.கைலைநாதன்<br>செல்வி.ஜே.எஸ்.தேவரூபன்<br>திரு.ஏ.தயாபரன் | (ஜனவரி 2017 -ஆகஸ்ட் 2017)<br>(2017 ஆகஸ்ட் - 2017 திசெம்பர்)<br>(ஜனவரி 2017- ஜுன் 2017)<br>(ஆகஸ்ட் 2017- திசெம்பர்2017) |
| • நூலகர் | திருமதி.எஸ்.அருளாநந்தம் | 14.03.2012- தற்போது வரை |
| • செயலாளர்: பதிவாளர் | திரு.வீ.காண்டீபன் | 11.03.2009- தற்போது வரை |
| • பிரதிப் பதிவாளர் / பரீட்சைகள் | திருமதி.ஏ.சிவனேஸ்வரன் | ஜனவரி 2017 வரை (ஓய்வினை விடுப்பின் பின்னர்) |
| • சி.உ.ப /பரீட்சைகள் | திரு.கே.ஞானபாஸ்கரன் | 2017 பெப்ரவரியில் இருந்து - தற்போது வரை |

## 1.5 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள்

| **இணை-அதிகாரிகள்** | **பெயர்** | **தகைமைகள்** |
|---|---|---|
| **வேந்தர்** | பேரா.எஸ்.பத்மநாதன் (17.03.2014-தற்போது வரை) | **ஓய்வுபெற்ற பேராசிரியர்** |
| **துணைவேந்தர்** | பேரா.(செல்வி).வ.அரசரத்தினம்<br>**01.04.2011 இருந்து 30.04.2017 வரை** | B.Sc, 1$^{st}$ Class, University of Madras, May 1981, M.Sc in Bio Chemistry, University of Colombo, 01.10.1984, Ph.D in Bio Chemistry, University of Jaffna, 04.12.1989 |
| | பேரா.ஆர்.விக்னேஸ்வரன் | B.Sc. in Mathematics, 2nd Class Lower div. University of |

| | | |
|---|---|---|
| | **01.05.2017 இருந்து தற்போது வரை** | Jaffna1982 and PhD, University of Sussex, U.K , 29.01.1992 |
| முதல்வர் | கலாநிதி.டி.மங்கலேஸ்வரன் (01.10.2015-30.09.2018) | **BBA,MBA,PhD** |
| பதிவாளர் | திரு.வீ.காண்டீபன் **(11.03.2009-இன்று வரை)** | • 1987-1992 B.Sc(Agric),$2^{nd}$ class Honours-Eastern University,Sri Lanka,(EUSL),Chenkalady<br>• 2003-2004 Post –Graduate Diploma in Management-Open University of Sri Lanka,Nugegoda<br>• 2004-2007 MBA Post graduate Institute of Management-University of Sri Jeyawardenapura, Colombo. |
| நூலகர் | திருமதி.எஸ்.அருளாநந்தம் **14.03.2012 இருந்து தற்போது வரை** | B.A (Hons) Economics, 2nd Class Upper div., University of Jaffna, Oct. 1984, B.L.I.Sc , Madurai Kamaraj University, India, April 1986 Associate ship in Documentation and Information Science (India), 1989 |
| பதில்.நிதியாளர் | திரு.ஏ.சிவநடராஜா **(21.11.2013- வரை)** | • 1989-1996 Bachelor of Commerce -2nd Upper-University of Jaffna<br>• 1987-1995-Higher National Diploma in Accountancy-Jaffna Technical College<br>• 1997-2000 Charted(Intermediate Certificate)-Institute of Charted Accountants of Sri Lanka |
| பீடங்களின் பீடாதிபதிகள் | | |
| • விவசாய பீடம் | பேரா.(திருமதி) டி.மிகுந்தன் | B.Sc in Agriculture 2nd Class Upper div., University of Peradeniya, 1990, M.Phil in Agricultural Engineering, University of Perdeniya, 12.11.1997, Ph.D in Agricultural Engineering, University of Jaffna, 03.05.2010 |
| • கலைப்பீடம் | கலாநிதி.கே.சுதாகர் | B.A in Geography, 2nd Class Upper div. University of Jaffna, 16.06.1990, M.A in Geography, Pass, University of Colombo, 01.12.1996, Ph.D, Nanyang |

| | | |
|---|---|---|
| | | Technological University, Singapore, 20.06.2008 |
| • பிரயோக விஞ்ஞான பீடம் | திரு.எஸ்.குகனேசன் (12.06.2016-11.06.2019) | **B.Sc,M.Phil** |
| • வணிக கற்கைகள் பீடம் | கலாநிதி.ஏ.புஸ்பநாதன் (04.12.2016-03.12.2016) | **BBA,PGD,Ph.D** |
| • பொறியியல் பீடம் | கலாநிதி.ஏ.அற்புதராஜா | B.Sc Eng. in Electrical & Electronic Eng., 1stClass, University of Peradeniya,1997, Ph.D, Institute of Science and Technology (UMIST), University of Manchester, UK, 2003 |
| • பட்டப்பின் கற்கைகள் பீடம் | பேரா.ஜீ.மிகுந்தன் | B.Sc in Agriculture, 1st Class, Tamilnadu Agriculture University, M.Phil, University of Peradeniya, Ph.D in Agricultural Entomology, University of Agricultural Studies, India, 24.02.2005 |
| • முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் | பேரா.ரி.வேல்நம்பி | B.Com, 2nd Class Upper div., University of Jaffna, 1994, M.Phil in Commerce, University of Jaffna, 2000 and Ph.D University of Madras , 2007 |
| • மருத்துவம் பீடம் | கலாநிதி.எஸ்.ரவிராஜ் | MBBS, 2nd Class, University of Jaffna, 01.12.1984, M.S (General Surgery), University of Colombo, 01.02.1997, Board Certified as specialist in General Surgery, 17.01.1999 |
| • விஞ்ஞான பீடம் | பேரா.ஜே.பீ.ஜெயதேவன் | B.Sc. in Chemistry, 1st Class University of Jaffna, 1995, PhD, University of Liverpool, U.K , 2003 |
| • தொழில்நுட்ப பீடம் | கலாநிதி.(திருமதி) எஸ்.சிவசந்திரன் | B.Sc in Agriculture, 2nd Class Upper div., University of Peradeniya, 01.10.1991, Ph.D, University of Peradeniya, 05.02.2001 |

## 1.6 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அமைப்பு வரைபடம்



## 2. பீடங்கள், வளாகம், அலகுகள் மற்றும் நிலையங்களின் பெயர்

### 2.1 (A) பீடங்கள் மற்றும் வளாகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பத்து (10) பீடங்களையும் ஒரு வளாகத்தையும் கொண்டுள்ளது. அவையாவன,

1. கலைப்பீடம்
2. விவசாய பீடம்
3. பொறியியல் பீடம்
4. பட்டப்பின் கற்கைகள் பீடம்
5. மருத்துவ பீடம்
6. முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்
7. விஞ்ஞான பீடம்
8. தொழில்நுட்ப பீடம
9. வவுனியா வாளகம்
    i. பிரயோக விஞ்ஞான பீடம்
    ii. வணிக கற்கைகள் பீடம்

**(B) நூலகம்** (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகம்)

### 2.2 இணைந்த அலகுகள்.

பல்கலைக்கழகம் ஏழு (07) இணைந்த அலகுகளை கொண்டுள்ளது.

1. சித்த மருத்துவ அலகு
2. இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு
3. ஆங்கில மொழி கற்பித்தல் அலகு
4. உள்ளக தர உத்தரவாத அலகு
5. விளையாட்டு விஞ்ஞான அலகு
6. உடற் கல்வி அலகு
7. தொழில் வழிகாட்டல் அலகு

### 2.3 நிலையங்கள்

பல்கலைக்கழகம் கீழ்வரும் ஐந்து (05) நிலையங்களை கொண்டுள்ளது.

1. திறந்த மற்றும் தொலைகல்வி நிலையம்
2. ஊழியர் மேம்பாட்டு மையம்
3. பால் சமனிலை மற்றும் சமத்துவ நிலையம்
4. கணினி மையம்
5. நல்வாழ்வு மையம்

### 2.4 குழுக்கள் மற்றும் கூட்டங்கள்

பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகள் மற்றும் ஏனைய அமைப்புகள் மதிப்பாய்வாண்டில் தொடர்ச்சியாக சந்தித்துக்கொண்டன. ஒவ்வொரு அதிகாரசபை மற்றும் அமைப்பு நடாத்திய கூட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பீடங்கள் / கிளைகள் | கூட்டங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பேரவை | 15 | 29 |
| முதவை | 14 | 115 |
| நிர்வாக உத்தியோகத்தர் கூட்டம் | 05 | 32 |
| கிளிநொச்சி அபிவிருத்தி குழு | 03 | |
| நிதிக்குழு | 12 | 14 |
| உள்ளக தர உத்தரவாத அலகு | 07 | 40 |
| புனர்வாழ்வு மற்றும் பராமரிப்பு குழு | | 17 |
| திட்ட கண்காணிப்புக் குழு | 06 | 17 |
| பீடாதிபதிகளின் கூட்டம் | 09 | 12 |
| நூலக குழு | 04 | 17 |
| இணைய குழு | 03 | 50 |
| விடுப்பு மற்றும் விருதுகள் குழு | 09 | 12 |
| பீட சபைகள் | | |
| • கலைப்பீடம் | 14 | 103 |
| • விவசாய பீடம் | 11 | 23 |
| • பிரயோக விஞ்ஞான பீடம் | 18 | 10 |
| • வணிக கற்கைகள் பீடம் | 19 | 12 |
| • பொறியியல் பீடம் | 19 | 19 |
| • பட்டப்பின் கற்கைகள் பீடம் | 14 | 15 |
| • மருத்துவ பீடம் | 13 | 58 |
| • முகாமைத்துவ் பீடம் | 05 | 42 |
| • விஞ்ஞான பீடம் | 08 | 68 |
| • தொழில்நுட்ப பீடம் | 05 | 10 |

## 2.5 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளின் எண்ணிக்கை

| பட்டம் | பட்டதாரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கலாநிதி பட்டம் | 03 |
| முது தத்துவமாணி பட்டம் | 19 |
| கல்வி முதுமாணி பட்டம் | 170 |
| முதுகலைமாணி பட்டம் (தமிழ்) | 47 |
| விஞ்ஞான முதுமாணி பட்டம் (சுகாதார முகாமைத்துவம்) | 07 |
| ஆங்கிலம் கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமா | 05 |
| முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா | 04 |

| | |
|---|---|
| விஞ்ஞானமாணி பட்டம் (விவசாயம்) | 60 |
| சட்டமாணி பட்டம் | 63 |
| நுண்கலைமாணி பட்டம் (இசை) | 81 |
| நுண்கலைமாணி பட்டம் (நடனம்) | 53 |
| நுண்கலைமாணி பட்டம் (சித்திரமும் வடிவமைப்பும்) | 12 |
| கலைமாணி பட்டம் (பொது) | 30 |
| கலைமாணி பட்டம் (விசேடம்) | 459 |
| கலைமாணி பட்டம் (தேர்வு) | 52 |
| பொறியியலில் விஞ்ஞானமாணி பட்டம் | 31 |
| சைவ சித்தாந்த முதுகலைமாணி பட்டம் | 21 |
| வணிக நிர்வாக முதுமாணி | 11 |
| வணிக நிர்வாகமாணி பட்டம் (விசேட) | 294 |
| மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை இளமாணிப் பட்டம் | 95 |
| விஞ்ஞானமாணி பட்டம் (தாதியியல்) | 17 |
| விஞ்ஞானமாணி பட்டம் (மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்) | 21 |
| மருந்தகவியல் இளமாணிப் பட்டம் | 20 |
| விஞ்ஞானமாணி பட்டம் (கணினி விஞ்ஞானம்) | 03 |
| விஞ்ஞானமாணி பட்டம் (விசேட) | 78 |
| விஞ்ஞானமாணி பட்டம் (பொது) | 79 |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி பட்டம் | 16 |
| பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி பட்டம் | 08 |
| சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை இளமாணிப் பட்டம் | 32 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் (பொது) | 31 |
| விஞ்ஞானமாணி பட்டம் (சூழல் விஞ்ஞானம்) (விசேட) | 09 |
| விஞ்ஞானமாணி பட்டம் (சூழல் விஞ்ஞானம்) (பொது) | 09 |
| விஞ்ஞானமாணி பட்டம் (பிரயோக கணிதம் மற்றும் கணினி) | 16 |
| வணிக முகாமைத்துவ இளமாணிப் பட்டம் (பொது) | 16 |
| வணிக முகாமைத்துவ இளமாணிப் பட்டம் (விசேட) | 94 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞான இளமாணிப் பட்டம் (விசேட) | 16 |
| வணிக இளமாணிப் பட்டம் (விசேட) | 44 |
| வணிக இளமாணிப் பட்டம் (பொது) | 04 |
| ஊடகவியல் டிப்ளோமா | 09 |

| | |
|---|---|
| விஞ்ஞான டிப்ளோமா | 05 |
| மருத்துவ விஞ்ஞான இளமாணிப் பட்டம் | 01 |
| மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா | 13 |
| சந்தைப்படுத்தல் டிப்ளோமா | 16 |
| ஆங்கில மொழி டிப்ளோமா | 08 |
| வியாபார நிர்வாக டிப்ளோமா | 02 |
| **மொத்தம்** | **2091** |

## 2.6 மாணவர் எண்ணிக்கை

2010 இன் பின்னர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கான மாணவர் சேர்க்கை சாதாரணமாக்கப்பட்டது. அனைத்து மாவட்ட மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசித்தனர். இது மாணவர் எண்ணிக்கையை குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு இட்டுச்சென்றது. 2010 முதல் 2017 வரை மாணவர் ஆட்சேர்ப்பானது கிட்டத்தட்ட இருமடங்காகியுள்ளது. கீழ்வரும் அட்டவணை மாணவர் எண்ணிக்கையின் அதிகரிப்பினை வெளிப்படுத்துகின்றது.

| பதிவு ஆண்டு | மாணவர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் | | யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் |
| 2010 | 3380 | 348 | 3728 |
| 2011 | 4720 | 594 | 5314 |
| 2012 | 5202 | 606 | 5808 |
| 2013 | 5737 | 730 | 6767 |
| 2014 | 6240 | 763 | 7703 |
| 2015 | 7024 | 716 | 7740 |
| 2016 | 7399 | 767 | 8166 |
| 2017 | 7141 | 891 | 8032 |

## 2.7 2015/2016 (உ/த) இருந்து புதிய தொகுதி மாணவர் அனுமதி

| பீடங்கள்/துறைகள்/அலகுகள் | மாணவர் அனுமதி திகதி |
|---|---|
| பொறியியல் பீடம் | 21.11.2016 |
| மருத்துவ பீடம் | 01.11.2016 |
| BBM இணைவழி (7வது அணி) | 03.06.2017 |
| BBM 1வது அணி (வவுனியா வளாகம்) | 20.02.2017 |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் | 19.12.2016 |
| இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள், மருத்துவபீடம் | 28.12.2016 |
| சட்டத்துறை, கலைப்பீடம் | 19.12.2016 |
| விவசாய பீடம் | 27.12.2016 |
| சித்த மருத்துவம் | 29.12.2016 |
| கலைப்பீடம் | 23.01.2017 |
| விஞ்ஞான பீடம் | 16.01.2017 |
| RAFA, கலைப்பீடம் | 30.12.2016 |
| பிரயோக விஞ்ஞானம் | 20.02.2017 |
| வணிக கற்கைகள் | 20.02.2017 |

## 2.8 மாணவர் பதிவு மற்றும் பட்டதாரிகளின் வெளியேறுகை

### 2.8.1 கல்வியாண்டு 2015/2016 ற்கான புதிய அனுமதிகள்

ஒவ்வொரு பாடநெறிக்குமாக பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | பீடம் / பிரிவு | பாடநெறி | முன்மொழியப்பட்ட ஆட்சேர்ப்பு | பதிவுசெய்தோர் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | மருத்துவம் | மருத்துவம் | 135 | 136 |
| | | மருந்தகம் | 35 | 28 |
| | | மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | 35 | 30 |
| | | தாதியியல் | 40 | 35 |
| | விவசாயம் | விவசாயம் | 100 | 99 |
| | பொறியியல் | பொறியியல் | 125 | 125 |
| | விஞ்ஞானம் | உயிரியல் விஞ்ஞானம் | 125 | 88 |
| | | பௌதீக விஞ்ஞானம் | 300 | 248 |
| | | கணினி விஞ்ஞானம் | 50 | 43 |
| | சித்த மருத்துவம் | சித்த மருத்துவம் | 50 | 34 |
| | முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் | முகாமைத்துவம் | 300 | 296 |
| | | வணிகம் | 105 | 105 |
| | கலைப்பீடம் | கலை | 500 | 483 |
| | | கலை (மேலதிகம் ) | 258 | 258 |
| | | சட்டம் | 51 | 51 |
| | | நடனம் | 74 | 74 |
| | | இசை | 60 | 57 |
| | | சித்திரமும் வடிவமைப்பும் | 35 | 31 |
| | | மொழிபெயர்ப்பு கற்கைகள் | 25 | 24 |
| | தொழில்நுட்ப பீடம் | உயிர் முறைமை தொழில்நுட்பம் | 110 | 106 |
| | | பொறியியல் தொழில்நுட்பம் | 110 | 108 |
| வவுனியா வளாகம் | பிரயோக விஞ்ஞான பீடம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 75 | 71 |
| | | பிரயோக விஞ்ஞானம் | 50 | 34 |
| | | உயிரியல் விஞ்ஞானம் | 50 | 27 |
| | வியாபார கற்கைகள் பீடம் | முகாமைத்துவ கற்கைகள் | 100 | 98 |
| | | திட்ட முகாமைத்துவம் | 50 | 43 |

## 2.9 உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள்

| பட்டம் | | பாடநெறி | மொழி | 2017ல் ஆட்சேர்ப்பு | வருடம் 1வது | 2 வது | 3 வது | 4 வது | 5 வது | 2017ல் பட்டம் பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | விவசாயம் | B.Sc. | ஆங்கிலம் | 125 | 73 | 67 | 061 | 62 | - | 60 |
| | கலை | B.A. | தமிழ் | 500 | 738 | 471 | 373 | 322 | - | 541 |
| | | B.F.A. | தமிழ் | 195 | 164 | 169 | 165 | 172 | - | 146 |
| | | B.Laws | ஆங்கிலம் | 50 | 050 | 054 | 046 | 102 | - | 63 |
| | | PGD. Ed. முழு நேரம் | தமிழ் | - | 104 | - | - | - | - | |
| | | PGD. Ed. பகுதி நேரம் | தமிழ் | - | - | - | - | - | - | |
| | பொறியியல் | B.Sc(Eng. | ஆங்கிலம் | 125 | 125 | 74 | 48 | 54 | - | 31 |
| | முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகம் | BBA | ஆங்கிலம் | 300 | 288 | 278 | 277 | 269 | - | 294 |
| | | B.Com. | ஆங்கிலம் | 100 | 97 | 71 | 94 | 46 | - | 48 |
| | மருத்துவம் | MBBS | ஆங்கிலம் | 135 | 136 | 139 | 137 | 125 | 125 | 96 |
| | இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு | B.Sc. (தாதியியல்) | ஆங்கிலம் | 40 | 27 | 22 | 13 | 17 | - | 17 |
| | | B.Sc. (MLS) | ஆங்கிலம் | 35 | 21 | 21 | 22 | 18 | - | 21 |
| | | B. Pharm. | ஆங்கிலம் | 35 | 28 | 22 | 15 | 14 | - | 20 |
| | விஞ்ஞானம் | B.Sc. in Com. Sc. | ஆங்கிலம் | 50 | 42 | 27 | 23 | 24 | - | 16 |
| | | B.Sc. | ஆங்கிலம் | 425 | 296 | 275 | 255 | 96 | - | 152 |
| | தொழில்நுட்பம் | BET | ஆங்கிலம் | 110 | 108 | - | - | - | - | - |
| | | BBT | ஆங்கிலம் | 110 | 106 | - | - | - | - | - |
| | சித்த மருத்துவ அலகு | BSMS | தமிழ் | 50 | 29 | 39 | 35 | 37 | 27 | 32 |
| | **சுய நிதியீட்டல் பாடநெறிகள்:** | | | | | | | | | |
| | வெளிவாரி பரீட்சைகள் அலகு | B.A | தமிழ் | 655 | 655 | - | - | - | - | 374 |
| | | B.Com | தமிழ் | 140 | 141 | 148 | - | - | - | 37 |
| | | B.F.A | தமிழ் | - | - | - | | - | - | 04 |
இது தொடர்பில், களனி கேபிள்ஸ் பி.எல்.சி. ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளதுடன் அது 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெற்ற 385 வது செனட் சபை கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு 2014 மார்ச் 2 ஆம் திகதி 389 ஆவது பேரவை கூட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தமானது 17.6.2014 அன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த களனி சக்தி திட்டத்திற்கான பாடத்திட்டம் 2014 ஆகஸ்ட் 19 ஆம் திகதி செனட்டின் 391 ஆவது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இது அதன் மூன்றாவது தொகுதிக்குள் இல்லை.

பாடநெறிக்கென இரண்டாவது தொகுதியில் 42 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர். இரண்டாவது தொகுதி 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2017 அக்டோபரில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. இறுதியாக 23 மாணவர்கள் வெற்றிகரமாக நிறைவு செய்தனர். அவர்களின் சான்றிதழ் வழங்கும் விழா 16-11-2017 அன்று நடைபெற்றது.

மூன்றாவது தொகுதிக்கான பாதீடாக ரூபா.867,000 18-08-2017 அன்று நடைபெற்ற 390 வது நிதிக் குழுவின் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டது. பின்னர் 26-08-2017 அன்று நடைபெற்ற 421 வது பேரவை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. மூன்றாம் தொகுதியின் தொடக்க விழா இரண்டாவது தொகுதியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தினமான 16-11-2017 அன்று நடைபெற்றது.

**3. பேரா.எஸ்.மகாலிங்கம் ஒட்டுமொத்த சிறந்த செயல்திறனுக்காக வழங்கப்படும் தங்கப்பதக்கம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்-பேரா.எஸ்.மகாலிங்கம் குடும்பத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது.**

ரூபா.75000 பெறுமதியான பேராசிரியர் மகாலிங்கம் நினைவு விருது மற்றும் தங்கப் பதக்கம் ஆகியவற்றை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சக்தி செல்வகுமாரனுடன் 30 நவம்பர் 2017 இல் கையெழுத்திட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் இயந்திரப் பொறியியல் துறையில் ஒட்டுமொத்த சிறந்த செயற்பாட்டிற்காக இது வழங்கப்படும்.

**4. விஞ்ஞான பீடத்தின் ஆராய்ச்சி உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் கூட்டு ஒப்பந்தம்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை மற்றும் மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞானங்கள் பல்கலைக்கழகம் நோர்வே (இதன் பின்னர் “HVL” என அடையாளப்படுத்தப்படும்) ஆகியன கல்விசார் மற்றும் ஆராய்ச்சி துறையில் கூட்டு உறவு ஒன்றை உருவாக்கியுள்ளன. இத் தொடர்பால் இரு நிறுவனங்களும் “தூய சக்தி தொழில்நுட்பத்திற்கான நெனோ பொருட்கள் தொடர்பிலான உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான கூட்டு” எனும் திட்டத்திற்காக NOK 5 மில்லியன் ஐ (ஏறத்தாழ இலங்கை ரூபாவில் 80 மில்லியன்) மானியமாக பெறுகின்றனர்.

**5. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம், காந்திநகர், இந்தியா ஆகியவற்றிற்கு இடையே கல்விசார் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை மற்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம், காந்திநகர், இந்தியா (IITGN) ஆகியன கல்வி மற்றும் கல்விசார் ஆராய்ச்சிக்கான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் பின்வரும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது:

- தகவல் பரிமாற்றத்திற்கு
  a. ஆராய்ச்சி மற்றும் கல்வியியல் நிகழ்வுகளில்
  b. ஆராய்ச்சி மற்றும் கல்வியியல் நிகழ்வுகளுடன் தொடர்புடைய கற்பித்தல், கற்றல் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
- ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் மாணவர்களை பினவரும் அளப்படையில் பரிமாற்றம் செய்தல்:
  a. வெளிநாட்டு ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் (RAP)
  b. வெளிநாட்டு கற்றல் நிகழ்ச்சித்திட்டம் (SAP)
- கோடைக்கால பள்ளிகள் உள்ளடங்கலாக கூட்டு கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களில் செயலாற்றுதல்
- பட்டப்பின் மாணவர்களுக்கான கூட்டு வழிகாட்டல்

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு நடவடிக்கையும் வழிகாட்டும் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தனித்தனியாக விவாதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்படும் என்று IITGN மற்றும் UoJ இரண்டும் ஒப்புக்கொள்கின்றன.
2. மேலே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அனைத்து வேலை முறைகளும் குறிப்பிட்ட ஒவ்வொரு வழக்கிலும் இரு கட்சிகளால் விவாதிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்படும். இந்த நடைமுறைப்படுத்தல் உடன்படிக்கை முன்மொழியப்பட்ட செயற்பாடு மற்றும் நிதி ஏற்பாடுகளின் விவரிப்புகளை உள்ளடக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் IITGN மற்றும் UoJ ஆகிய இரண்டாலும் கையெழுத்திடப்படல் வேண்டும்
3. UoJ மற்றும் IITGN ஆகிய இரண்டும் புலமை சொத்துக்களில் மற்றவர் உரிமைகளை மதிக்க ஒப்புக்கொள்கின்றனர். மேலும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் கூட்டு ஆராய்ச்சி அல்லது செயல்பாட்டின் விளைவாக எழும் புலமை சொத்து உரிமைகள் (IPR) ஆனது ஒரு வழக்கு மூலம் வழக்கு அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இது இரு நிறுவனங்களின் தற்போதைய IPR கொள்கையுடன் பொருந்தக்கூடியதாக இருக்கும்.
4. புரவலன் நிறுவனத்தில் உள்ள மாநில / நாட்டின் உள்ளூர் சட்டங்களை மாணவர் மீறும் போது மாணவரின் கல்வி உதவித்தொகை உடனடியாக திரும்பப்பெறப்பட்டு மாணவர் புரவலன் நிறுவனத்தால் வெளியேற்றப்பட நேரிடும். மாணவர் வழக்கை உள்நாட்டில் எப்படி கையாள வேண்டும் என்பதைத் உள்ளக நிறுவனம் தீர்மானிக்கும்.
5. ஒவ்வொரு நிறுவனமும் கல்விசார் ஊழியர்களில் ஒரு உறுப்பினரை நிகழ்ச்சித் திட்டத்தை ஒருங்கிணைப்பதற்காக நியமிக்கும். நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளர் இரு நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வழிகளை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து அடையாளம் காண்பார்.
6. இந்த உடன்படிக்கை இரு கட்சிகளாலும் கையொப்பமிடப்பட்ட திகதி முதல் ஐந்து (5) வருட காலத்திற்கு வலிதாக காணப்படுவதுடன் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை பரஸ்பர எழுத்து மூல ஒப்புதலுடன் நீடிக்கலாம்.

7. இந்த உடன்படிக்கை எழுத்து மூலமாகவும் இரு தரப்பினர்களுாலும் கையெழுத்திடப்படும் நிலையில் மாத்திரமே திருத்தத்திற்கு உட்படுத்தலாம்.
8. ஒரு நிறுவனம் மற்ற நிறுவனத்திற்கு எழுத்து மூலமான முன்கூட்டியே அறிவிப்பை ஆறு (6) மாத காலத்திற்கு முன் வழங்குவதன் மூலம் இவ் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியும்.
9. இந்த ஒப்பந்தத்தின் காலாவதி மற்றும் முடிவுறுத்தல் ஆகியவை, முடித்தல் மற்றும் காலாவதியாகும் காலப்பகுதியில் நடைபெறும் நடவடிக்கைகள் தொடர்பான விதிகளை பாதிக்காது.

**6. "கெப்பிடல் மஹாராஜாவின் தொழில் முனைவோர் மற்றும் வணிக தொடக்கத்திற்கான வழிகாட்டி பேராசிரியர்" யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் நிறுவப்பட்டது.**

இது எனக்கும் கெப்பிடல் மஹாராஜா திரு.மொஹான் பஹாரா அவர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. துணைவேந்தர் கையெழுத்திடுவதற்கான அனுதியை வழங்கினார். இதுவும் மூதவை மற்றும் பேரவை வழியாக சென்றது.

ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. இது கருத்தியல் பத்திரமாக 2017ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டது.

**7. ஆராய்ச்சி கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீடத்தில் வைத்து 10 ஆகஸ்ட் 2017 அன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது.

**இடையில்**

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம், இதன் பின்னர் பொறியியல் பீடம் என குறிப்பிடப்படும் (எந்தவொரு வெளிப்பாட்டினாலும் விலக்கப்படாமலோ அல்லது பொருட்படுத்தாமலோ இருந்தால், அதன் வாரிசுகள் மற்றும் நியமனங்கள் அடங்கும்) இது 2014 ஆம் ஆண்டில் உயர் கல்வி அமைச்சினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உதவியின் கீழ் நிறுவப்பட்ட ஓர் கல்விப் பிரிவு ஆகும். இது பொறியியல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அடிப்படை மற்றும் மேம்பட்ட விஞ்ஞானங்களில் உயர்தர கல்வியை வழங்குவதற்காக இலங்கையின் வடமாகாணத்தின் கிளிநொச்சியில் அமையப்பெற்றுள்ளது ஒரு பகுதியாகவும் ;

**மற்றும்**

புதுப்பிக்கத்தக்க சக்தி உருவாக்குநர்கள் சங்கம் இதன் பின்னர் REDA என அழைக்கப்படும் (எந்தவொரு வெளிப்பாட்டினாலும் விலக்கப்படாமலோ அல்லது பொருட்படுத்தாமலோ இருந்தால், அதன் வாரிசுகள் மற்றும் நியமனங்கள் அடங்கும்) 2017 ஆம் ஆண்டு இலங்கையில் நிறுவப்பட்ட இலாப நோக்கற்ற மற்றும் எரிசக்தி சேவை சார்ந்த நலன்புரி அமைப்பானது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பங்கள் மற்றும் அதனுடன் இணைந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு துறைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) முயற்சிகளை மேலும் வளர்ப்பதற்கு ஆற்றல்மிக்க, பைலட் அளவிலான ஆலைகளை அமைப்பதோடு அது 154/2A சந்ததன்ன மாவத்தை, தலங்கம வடக்கு, பத்தரமுல்லையில் அமைய்பெற்றிருப்பது மற்ற பகுதியாகவும்;

அத்தோடு பீடாதிபதி தலைமையிலான பொறியியல் பீடம், பொறியியல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளில் கணிசமான மற்றும் உற்பத்தித் திறன்களை மேற்கொள்வதற்கான கட்டளை ஒன்றை மேற்கொள்கின்ற அதேவேளை, மின், மின்னணு, மெக்கானிக்கல், கணினி, சிவில் மற்றும் இதர பொறியியல் சவால்களின் பகுதிகள், அறிவு மற்றும் கல்வி புரிதலை மேம்படுத்துவதற்கு பயனுள்ளதாக இருப்பதுடன் மனிதகுலத்தின் தொடர்ச்சியான இருப்பிற்கும் பங்களிக்கும்;

மேலும் REDA ஆனது பொறியியல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றோடுள்ள தொழில் வல்லுநர்கள் ஒன்று சேர்ந்து சூரிய சக்தி, உயிர்த்திணிவு சக்தி, காற்று சக்தி ஆகியவற்றைக் கொண்டிருக்கும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில், சூரிய மின்சக்தி திட்டங்களில் (ஒளிமின்னழுத்தவியல் மற்றும் சூரிய வெப்ப ஆற்றல்), காற்று சக்தி, நீர் சக்தி மற்றும் புவி தொழில்நுட்ப சக்தி, அலை மற்றும் அலை சக்தி ஆகியவற்றில்: தொழில்நுட்பம் மற்றும் பலவற்றில் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டில் கணிசமான நிபுணத்துவம் உள்ளது சான்றளிக்கப்பட்ட மற்றும் தகுதி வாய்ந்த வல்லுநர்கள், மற்றும் பயிற்சியாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் உலக தர விரிவுரையாளர்களுக்கான அணுகல் உள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் முன்னேற்றங்களைத் தேடுவதில் நன்கொடையை அடிப்படையாகக் கொண்ட நிதி வழங்குநர் குழுக்களுடன் வலுவான இணைப்புகள் உள்ளன. உலகம் முழுவதும் முன்னணி ஆய்வகங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களுக்கு அணுகல் உள்ளது.

மேலும் இரண்டு பிரிவுகளான பொறியியல் பீடமும் REDA உம் **சிறப்பு மையம்** (இதன்பின்னர் **மையம்** என்றும் அழைக்கப்படும்) அமைக்க விவேகமானதும் சரியானதுமான நேரம் இது என ஒப்புக்கொண்டுள்ளன. குறிப்பாக சூரிய ஒளி மின்சக்தி மற்றும் சூரிய வெப்ப சக்தியை உள்ளடக்கிய சூரிய மையத்தை அமைப்பதானது விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இத் துறையில் மனிதகுலத்தை உருவாக்கும் என்று கருதுகிறது, மேலும் இத் தொழில்நுட்பங்களுக்கான ஆற்றலை சூரியனிலிருந்து பெற்றுக்கொள்வதால் இத்திட்டம் ஒழுங்காக கையாளப்பட்டால் கிட்டத்தட்ட இதனை இலவசமாக வழங்கலாம்

மேலும் இரு பிரிவுகளான பொறியியல் பீடமும் REDA உம் முன்மொழியப்பட்ட **சிறப்பு மையத்திலிருந்து** ஒட்டுமொத்த ஆராய்ச்சி முயற்சிகளுக்கு கூடுதல் சக்தியை அளிக்கக்கூடிய உயிரியல்புகள் சக்தி போன்ற மற்ற தொடர்புடைய தொழில்நுட்ப பகுதிகள் R&D உடன் இணைவதற்கான விவேகமானதும் சரியானதுமான நேரம் இது என ஒப்புக்கொண்டுள்ளன:

எனவே பொறியியல் பீடம் மற்றும் REDA ஆகியன பரஸ்பரமாக ஒருவருக்கொருவர் R&D ற்கு பலம் கொடுக்க, ஒத்துழைப்பு வழங்க ஒப்புக்கொண்டுள்ளனர். இதனால் பரஸ்பர மாணவர்கள், பொறியியல் பீடத்தின் கல்வித் துறை மற்றும் ஆராய்ச்சி சமுதாயம் மற்றும் REDA இனால் நிறுவப்பட்ட தொழில்துறை சமூகம் மற்றும் உலக அளவில் அனைவரும் பயனடைவார்கள்.

இப்போது இரு கட்சிகளும் நிறுவனங்களுக்கிடையேயான அறிவை பகிர்ந்து கொள்வதற்கான நீண்ட கால நலன்களைக் கருத்தில் கொண்டும் அவற்றின் தொடர்புடைய துறைகளில் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் துல்லியமான கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை ஏற்படுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை (MoU) மீது உடன்படிக்கை செய்து கொள்ள உடன்பட்டிருக்கின்றதுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்றவை கீழே விளக்கப்பட்டுள்ளன (இதன்பின்னர் ''செயல்பாடுகள்'' என்றும் அழைக்கப்படும்).

பின்வரும் நடவடிக்கைகள் பொருத்தமானவையாக இருக்கும் என்று தாமாகவும் அத்தோடு கட்சிகளிடையேயும் ஒப்புக் கொள்ளப்படுகிறது: **செயல்பாடுகள்** (செயல்பாடுகள் என அர்த்தம்):

1. பொறியியல் பீடத்தின் வளாகத்தில் அல்லது பொறியியல் பீடத்தின் வேறு ஏதேனும் இடத்தில் சூரிய ஆய்வுகளில் **சிறப்புக்கான மையம்** ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் தனித்துவமான மற்றும் உலகளாவிய ஆராய்ச்சி மையமாக செயற்பட்டு சூரிய ஒளியியல் மற்றும் சூரிய வெப்ப தொழில்நுட்பங்களில் உலகளாவிய சுற்றுப்பாதையில் ஒரு சர்வதேச R & D சின்னமாக உருவாக்கும்.

2. R & D இன் சம்பந்தப்பட்ட பகுதிகளில் சிறந்த செயல்திட்டங்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களைத் தேடி, திட்டமிட்டு செயல்படுத்தல்.
3. R & D பாடத்திட்டத்தின் நீண்ட கால நலன்கள் உள்ளடங்களாக அறிவார்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய வளவாளர்களால் மையத்திற்கு வளங்கள் அடிப்படையிலான அறிவை வழங்கி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.
4. மையத்திற்கு மானியங்கள் மற்றும் பிற அனுமதிக்கப்பட்ட முறைகள் மூலம் தேவையான கணினிமயப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு கருவிகள் உள்ளடங்களாக, மீட்டர் மற்றும் இதர சாதனங்கள் அத்தோடு காட்சி அமைப்புகளையும் பெற்றுக்கொள்ளல்.
5. மாணவர்கள், பீட உறுப்பினர்கள் மற்றும் ஏனையோரை மையத்தின் நீண்ட கால இருப்பிற்கான நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்கப்படுத்தல்.
6. R & D க்கு ஒப்பான மையங்களை உருவாக்குதலை உள்ளடக்கி, பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கையில் உள்ள ஏனைய R & D முகவர்கள் உள்ளடங்களாக, R & D மையத்தின் மேம்பாட்டிற்கு உலக தரத்திலான பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களுடனான கல்வி மற்றும் அறிஞர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்யும் பொறுப்பினை மையம் பொறுப்பேற்றுள்ளது.
7. தொழில் ரீதியாக முக்கியமான ஆராய்ச்சி திட்டங்களை பொறுப்பேற்று அமுல்படுத்துவதன் மூலம் அனுமதிக்கப்பட்ட அனைத்து நெறிமுறைகளிலும் பணிபுரிந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு ஒரு வருவாயை உருவாக்கும் மையமாக செயல்படல்.
8. நன்கொடை உதவி நிகழ்ச்சித் திட்டமொன்றின் இருப்பினை இடங்கண்டு அபிவிருத்தி செய்தல், கார்பன் ஆ.ஃப்செட் நிதிகள் மற்றும் ஏனைய வளங்கள் மற்றும் தூதரகங்கள், துணைதூதரகங்களுடன் இணைந்து செயலாற்றுதல் மற்றும் வேறு ஏதேனும் வளங்களை ஒரு தொடர்ச்சியான நிதித் திட்டத்தை அபிவிருத்தி ஆகியன மையத்தின் நடவடிக்கைகளை நிலைபேறடையச் செய்யும்.
9. சக்தி வலுப் பிறப்பிப்பிற்கான தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுதல் மற்றும் பெருமுயற்சிகளுக்கு துணைபுரிதல் ஆகியன தேசிய வலுக் கொள்கையை வடிவமைக்கும்.

**துணைவேந்தர்**

முன்மொழியப்பட்ட சிறப்பு மையத்தை உருவாக்க மற்றும் முன்மொழியப்பட்ட தொழில்நுட்ப உடனுழைப்பு உள்ளடங்கலாக அதனுடன் இணைந்த அனைத்து நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்யவென பொறியியல் பீடத்தின் பீடாதிபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் அவரின் அலுவலகத்தினையும் பொறுப்பேற்றார்.

**முகாமைத்துவ அல்லது இணைப்புக்குழு மற்றும் சிறப்பு மையத்தின் அமர்வு**

பொறியியல் பீடம் மற்றும் REDAன் பணிப்பாளர்களை உள்ளடக்கியதாக முகாமைத்துவ/இணைப்புக்குழு ஒன்று காணப்படுகின்றதுடன் அதனது யாப்பு பின்வருமாறு அமையும்:

a. பீடாதிபதி மற்றும் ஒரு சிரேஷ்ட பீட உறுப்பினர் (02)
b. REDAன் கௌரவ தலைவர் மற்றும் REDAன் சபை உறுப்பினர் (02)
c. ஐந்தாவது உறுப்பினர் பீடாதிபதியினால் அவரது மூன்றாவது விருப்பு வாக்கின் மூலம் நியமிக்கப்படுவார் (01)

சிறப்புக்கான மையத்தின் அலுவல்களே இக் குழுவின் கவனமாக இருக்கும். தேவைப்பட்டால், சிறப்புக்கான மையத்திற்கும் அதன் விவகாரங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு இக் குழு பொறுப்பாக இருக்கும். பணியாளர் எதிர்காலத்தில் மையத்தின் நிதியியல்

விவகாரங்களை கையாள வங்கிக் கணக்கொன்று உருவாக்கப்படுவது அவசியமாக இருப்பதால் ஒரு பொருளாளரையும் மற்ற அதிகாரிகளையும் நியமிப்பதற்கு இது பொறுப்பாக இருக்கும். (காசோலைகள் மற்றும் மிகுதிகள்)

ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டங்கள் பொதுவாக பொறியியல் பீடத்திலேயே நடைபெறும் அத்துடன் இரு மாத அடிப்படை கட்டாயமானதுடன் எந்தவொரு இரண்டாவது தொடர்ச்சியான மாதத்தின் வார முதல் நாளில் (திங்கள்) ஒரு மணி நேர சந்திப்பு நடைபெறும். பௌதிக வரவு சாத்தியப்படாத சந்தர்ப்பங்களில் கூட்டங்களுக்கு ஸ்கைப் அல்லது ஏனைய இலத்திரனியல் ஊடகம் பயன்படுத்தப்படும். பொறியியல் பீடத்திற்கு கூட்ட அறிக்கைகளை தயாரிப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இக்குறிப்பிட்ட தேவைக்காக புத்தகமொன்று பீட அலுவலகத்தில் பராமரிக்கப்படும்.

**வெளிப்படுத்தல்**

பொறியியல் பீடமும் REDA இரண்டும் இந்த ஆராய்ச்சி பங்களிப்பு மற்றும் கூட்டு மற்றும் சிறப்பு மையத்தின் புதுப்பிப்புகளை குறிப்பிட்ட காலப்பகுதிகளில் அவ்வப்போது தமது வெளியீடுகள் மற்றும் இணையத்தளத்தில் பதிவிடுகின்றன. வெளியிடப்பட வேண்டிய அனைத்து விடயங்களுக்கும் ஒருங்கிணைப்புக் குழுவின் பெரும்பான்மை அனுமதி பெறப்பட வேண்டும்.

**அறிசார்ந்த மற்றும் வகைப்படுத்தப்பட்ட தரவு**

பொறியியல் பீடமும் REDA இரண்டும் மையம் மூலம் சேகரிக்கப்பட்ட மற்றும் அபிவிருத்தி செய்யப்படும் அனைத்து மதிப்புமிக்க மற்றும் புலமைசார் தரவுகளை ஒருங்கிணைத்தும் வகைப்படுத்தியும் வைத்திருக்கும். அத்தோடு இதனை மூன்றாம் தரப்பிற்கு வெளியிடுவதற்கு ஒருங்கிணைப்பு குழுவால் வெளிப்படையாக அங்கீகரிக்கப்படாமல் அனுமதிக்கப்படமாட்டாது.

**கட்டணங்கள் மற்றும் வருவாய்கள்**

மையத்தின் ஆராய்ச்சி வேலைகளிற்கு மேலதிகமாக உருவாக்கப்படும் அல்லது பெறப்படும் வருவாய்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சொத்துக்களாகவே இருக்கும். ஆராய்ச்சியாளர்களுக்கான மற்றும் பிற செலவினங்களுக்கான கட்டணம் இலங்கையின் ஏனைய இடங்களில் நடைமுறைப்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதியியல் மற்றும் பண நெறிமுறைகளின் அடிப்படைக்கு ஒத்ததாக இருக்கும். போன்ற

**காலப்பகுதி**

இந்த ஒப்பந்தத்தின் காலப்பகுதியானது, பாரபட்சம் இல்லாமல், ஐந்து ஆண்டு கால அடிப்படையில், ஒப்பந்தத்தின் கையொப்ப திகதி அடிப்படையில் மாதத்தின் முதல் நாளிலிருந்து தொடங்கும் தொடரும் மாதத்தின் முதல் நாளில் மற்றும் 60 காலண்டர் மாதங்களில் முடிவடையும்.

**மாற்றங்களும் திருத்தங்களும்**

இந்த ஒப்பந்தம் மாற்றங்கள் அல்லது திருத்தங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், பரஸ்பர சம்மதம் உள்ளது.

**முடிவுறுத்தல்**

எந்தவொரு கட்சியும் (02) மாத எழுத்துமூல அறிவிப்பினை வழங்குவதன் மூலம் இந்த உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டு வரலாம்.

**ஆளும் சட்டம்**

இந்த உடன்படிக்கையின் ஆளும் சட்டமானது, இலங்கையில் பிரயோகிக்கப்படும் சட்டங்களுக்கு உட்பட்டது

## 8.2 பீடத்திற்கான வெளிநாட்டு பிரதிநிதிகளின் விஜயம்

| பீடம் | நபரின் பெயர் | வெளிநாட்டு பல்கலைக்கழகம் | காலப்பகுதி |
|---|---|---|---|
| பொறியியல் பீடம் | IIT காந்திநகர் பேராசிரியர்கள், பேரா.அமித் பிரசாந் மற்றும் பேரா.வெங்கட ரமணன் | இந்திய தொழில்நுட்ப நிறுவனம், காந்திநகர் | 2017 |

# 9. மாநாடுகள் /பயிற்சிப் பட்டறைகள் / நினைவுப் பேருரைகள்

## 9.1 மாநாடு

| பீடம் | திகதி | நிலைமை |
|---|---|---|
| சித்த மருத்துவ அலகு | 27 – 29 ஜனவரி 2017ல் இடம்பெற்றது. | **NRCEIM 2017**<br>முதலாவது தேசிய ஆராய்ச்சி மாநாடு மற்றும் சுதேசிய மருத்துவ கண்காட்சியினை (NRCEIM-2017) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகு, வடமாகாண சுதேசிய மருத்துவ திணைக்களததுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த நிலையில் அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகில் இடம்பெற்றது. இதற்கு கலாநிதி (திருமதி).வீ.சத்தியசீலன் அவர்கள் தலைமை தாங்கினார். |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் | 25 மற்றும் 26 ஜுலை 2017 | சமகால முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு – 2017 (ICCM)<br>இவ் ஆண்டின் ஆய்வரங்கின் கருப்பொருள் "சவால்களை சமாளிப்பதற்கு ஊக்கப்படுத்தும் உறுதிமொழி" என்பதாகும். |
| விவசாய பீடம் | 01 மற்றும் 02 நவம்பர் 2017 | வெப்ப வலய விவசாயம் தொடர்பான சர்வதேச மாநாடு – 2017 (ICDA 2017)<br>இவ் ஆண்டின் ஆய்வரங்கின் கருப்பொருள் "நிலையான விவசாய உற்பத்திகளை நோக்கிய கண்டுப்பிடிப்புகள்"<br>யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடம் ICDA 2017இல் உங்கள் அசல் கையெழுத்துப் பிரதிகளை சமர்ப்பிக்க அழைக்கவென உற்சாகத்துடன் உள்ளது. உணவு மற்றும் காலநிலை மாற்றத்திற்கான வளர்ந்து வரும் மற்றும் மாற்றமுறும் கேள்விகளை சமாளிக்க விவசாயத்தில் உள்ள கண்டுபிடிப்புகள் முக்கியமாகின்றன. ICDA 2017 பல்வேறு ஆராய்ச்சிகளிடமிருந்து ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள், பங்கு யோசனைகள் மற்றும் அனுபவங்களை பரப்புதல் மற்றும் நடைமுறை விளைவுகளுக்கு நூதனமான அறிவைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு சிறந்த அறிஞர்களுக்கான திறந்த மன்றத்தை ஏற்படுத்தி தரும் இலக்கை கொண்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| கலைப் பீடம் | 28, 29 மற்றும் 30 நவம்பர் 2017 | **தெற்காசியா அத்தியாயம் (ATWS-SAC)**<br>“தனிநபர் சுதந்திரம், கலாசார நடைமுறைகள், பூகோள ஆட்சி மற்றும் அமைதியான ஒருங்கிணைவு” மீதான இருபத்தி இரண்டாவது வருடந்த மாநாடு மற்றும் சர்வதேச கருத்தரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இணையுதவியுடன் இடம்பெற்றது. |
| கலைப் பீடம் | 21 -23, ஏப்ரில் 2017. | இரண்டாவது சர்வதேச சைவ மாநாடு |
| விஞ்ஞான பீடம் | 10 பெப்ரவரி 2017 | **திசையன் பரவும் நோய் தொடர்பான மாநாடு**<br>விஞ்ஞான பீடத்தின் விலங்கியல் துறை 10 பெப்ரவரி 2017 அன்று திசையன் பரவும் நோய் தொடர்பான தேசிய மாநாடு ஒன்றை நடாத்த திட்டமிட்டிருந்தது. |

## 9.2 பயிற்சிப் பட்டறைகள்

**பொறியியல் பீடம்**

| **விபரம்** | **வளவாளர்** | **இலக்குக் குழு** | **திகதி** |
|---|---|---|---|
| E13, E14 மற்றும் E15 தொகுதி அனைத்து மாணவர்களுக்குமான தமிழ் சிங்கள கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டம். | திரு.சாலிய சம்பத் அவர்கள் பொறியியல் பீடத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்விற்கு இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்த திட்டம் தொடர்ச்சியாக நடத்தப்படவுள்ளதுடன் அனைத்து மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் வாய்ப்பளிக்கும். அத்தோடு அது மென்திறன் அபிவிருத்தி திட்டத்தினிடையே மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது | பொறியியல் மாணவர்கள் | 10 ஜனவரி 2017 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிவில் பொறியியல் துறை ArcGIS இனை பயன்படுத்தி GIS இற்கான அறிமுகம் பற்றிய வெற்றிகரமான செயலமர்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது.<br>செயலமர்வானது ArcGIS யின் அடிப்படை அம்சங்கள் மற்றும் சில பகுப்பாய்வுகளை உள்ளடக்கியுள்ளது. இதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நீர் மற்றும் சமுதாயம் (WaSo) திட்டம் நிதியுதவியளித்தது. | திரு.வி.தில்லை நடராஜன், GIS ஆலோசகர் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர், GIS சொலுஸன், கொழும்பு<br>திரு.தசரதன் நடராஜபிள்ளை, விரிவுரையாளர், புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்<br>திரு.சாலிய சம்பத், விரிவுரையாளர், பொறியியல் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | இப் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களை இலக்காக கொண்டது. இருப்பினும் நாங்கள் 80 ற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை தொழிற்துறை மற்றும் கல்வித் துறையின் பொறியியலாலளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் போன்றோரிடமிருந்தும் பொறியியல், புவியியல், விவசாயம் மற்றும் விஞ்ஞான துறைகளின் பல்கலைக்கழக இளங்கலை மாணவர்கள் மற்றும் பட்டமேற் கற்கை | 16 மற்றும் 17 ஜனவரி 2017 |

| | | | |
|---|---|---|---|
| | | மாணவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டோம். | |
| இரண்டாவது WaSo செயலமர்வு ArcGIS இனை பயன்படுத்தி GIS இற்கான அறிமுகம் | திரு.வி.தில்லை நடராஜன், GIS ஆலோசகர் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர், GIS சொலுஸன், கொழும்பு<br><br>திரு.சாலிய சம்பத், விரிவுரையாளர், பொறியியல் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | இப் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களை இலக்காக கொண்டது. இருப்பினும் நாங்கள் 120 ற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை தொழிற்துறை மற்றும் கல்வித் துறையின் பொறியியலாலளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் போன்றோரிடமிருந்தும் பொறியியல், புவியியல், விவசாயம் மற்றும் விஞ்ஞான துறைகளின் பல்கலைக்கழக இளங்கலை மாணவர்கள் மற்றும் பட்டமேற் கற்கை மாணவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கான இரண்டாவது செயலமர்வின் போது அவர்களில் 30 பங்குபற்றுனர்கள் முதலில் வந்தோருக்கு முதலில் சேவை எனும் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர். | 20 மற்றும் 21 பெப்ரவரி 2017 |
| PSCAD மென்பொருளை பயன்படுத்தி சக்தி முறைமைகளின் அடிப்படைகள் பற்றிய செயலமர்வு | பேரா.ஏ.அற்புதராஜா | மூன்றாம் வருட மற்றும் இறுதி மாணவர்கள் | 12 பெப்ரவரி 2017(முழு நாள்) |
| மூன்றாவது WaSo செயலமர்வு ArcGIS இனை பயன்படுத்தி GIS இற்கான அறிமுகம் | திரு.வி.தில்லை நடராஜன், GIS ஆலோசகர் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர், GIS சொலுஸன், கொழும்பு<br><br>கலாநிதி.திருமதி.எச்.கே. நந்தலால், சிரேஸ்ட விரிவுரையாளர், சிவில் பொறியியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்<br><br>திரு.சாலிய சம்பத், விரிவுரையாளர், பொறியியல் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்<br><br>திரு.கே.குணாலன், விரிவுரையாளர், மீன்பிடியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | இப் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களை இலக்காக கொண்டது. இருப்பினும் நாங்கள் 180 ற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை தொழிற்துறை மற்றும் கல்வித் துறையின் பொறியியலாலளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் போன்றோரிடமிருந்தும் பொறியியல், புவியியல், விவசாயம் மற்றும் விஞ்ஞான துறைகளின் பல்கலைக்கழக இளங்கலை மாணவர்கள் மற்றும் பட்டமேற் கற்கை மாணவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கான இரண்டாவது செயலமர்வின் போது அவர்களில் 45 பங்குபற்றுனர்கள் முதலில் வந்தோருக்கு | $20^{th}$ and $21^{st}$ March 2017 |

| | | | |
|---|---|---|---|
| | | முதலில் சேவை எனும் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர். இம்முறை இலங்கையிலுள்ள 7 பல்கலைக்கழகங்களிலிருந்து பங்குபற்றுனர்கள் கலந்துகொண்டனர். | |
| “சுற்றுச்சூழல் மற்றும் உள்கட்டமைப்பு முகாமைத்துவத்தின் சமூக-சூழலியல் அமைப்புகள் மீதான பார்வை: நீர் வள முகாமைத்துவத்திற்கான உட்குறிப்பு” மீதான உரை | **பேராசிரியர் கிறிஸ்டோபர் கோலிபா** பேராசிரியர் சமுதாய அபிவிருத்தி மற்றும் பிரயோக பொருளியல் துறை, வேர்மௌண்ட் பல்கலைக்கழகம் (UVM), பணிப்பாளர்-பொது நிர்வாக (MPA) நிகழ்ச்சித் திட்டம், இணை இயக்குநர்- சமூக சுற்றுச்சூழல் கேமிங் மற்றும் உருவகப்படுத்தப்பட்ட (SEGS) ஆய்வுக்கூட மற்றும் சுற்றுச்சூழல் பொருளாதாரத்தின் குண்ட் நிறுவனம் | பொறியியல் பீட ஊழியர்கள் | 14 மார்ச் 2017 |
| மாணவர்களுக்கான மென்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 20 வளவாளர்கள் | பொறியியல் பீட மாணவர்கள் | 24 ஏப்ரில் முதல் 2 ஜூன் வரை |
| நான்காவது WaSo செயலமர்வு ArcGIS இனை பயன்படுத்தி GIS இற்கான அறிமுகம் | 1. திரு.வி.தில்லை நடராஜன், GIS ஆலோசகர் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர், GIS சொலுஸன், கொழும்பு<br>2. திரு.சாலிய சம்பத், விரிவுரையாளர், பொறியியல் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | இப் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களை இலக்காக கொண்டது. இருப்பினும் நாங்கள் 180 ற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை தொழிற்துறை மற்றும் கல்வித் துறையின் பொறியியலாலளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் போன்றோரிடமிருந்தும் பொறியியல், புவியியல், விவசாயம் மற்றும் விஞ்ஞான துறைகளின் பல்கலைக்கழக இளங்கலை மாணவர்கள் மற்றும் பட்டமேற் கற்கை மாணவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கான இரண்டாவது செயலமர்வின் போது அவர்களில் 48 பங்குபற்றுனர்கள் முதலில் வந்தோருக்கு முதலில் சேவை எனும் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர். | 16 மற்றும் 17 மே 2017 |
| “ஒரு புதுமையான கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்கான பல்கலைக்கழகத்தின் பங்கு” எனும் செயலமர்வு இடம்பெற்றது | வளவாளர்கள் குழு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி.டீ.எச்.எஸ். மைத்திரிபால அவர்களால் தலைமை தாங்கப்பட்டது. அத்தோடு மொரட்டுவ, பேராதனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் கலாநிதி.அஜித் பெஸ்குவெல், பேராசிரியர்.பி. ரவிராஜன், | பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள் மற்றும்இலக்காக கொண்டது. விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழில்நுட்ப துறைகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலுவலர்கள் | 15 மே 2017 |

| | | | |
|---|---|---|---|
| | கலாநிதி. ரவி விஜேசிரிவர்தன, கலாநிதி. எஸ்.ஏ.எச்.ஏ. சுரவீர, கலாநிதி. மெத்தியு போலி, கலாநிதி. கே.கே. விஜயசுந்தர ஆகியோரும் பங்குபற்றினர். இப் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி. ரவி விஜேசிரிவர்தன அவர்கள் ஒருங்கினைப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டார். | | |
| இந்த விளக்கக் காட்சியில் மக்கள் மற்றும் ஒளி என்பவற்றிற்கு இடையிலான தொடர்பு (அயனாக்கம் அல்லாத கதிர்வீச்சு). குறுக்கு விடயமாக பொறியியல், இயற்பியல், உடலியல், உளவியல், உயிரியல், கணிதம் மற்றும் பணிச்சூழலியல் ஆகியவற்றில் உள்ள அறிவுத்திறன் கலந்த கலவையாகும். திறமையான ஒளி வடிவமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு, சுகாதார, பாதுகாப்பு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், செல்வாக்கு ஆறுதல், உணர்தல் மற்றும் நடத்தை ஆகியவற்றை மேம்படுத்தவும் ஒளி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். | **கலாநிதி. உதயன் துரைராஜா**<br><br>ஆராய்ச்சியாளர், சிரேஸ்ட மின் பொறியியலாளர், விஞ்ஞானி மற்றும் விரிவுரையாளர், மின் பொறியியல் மற்றும் விளக்கு வடிவமைப்பு துறையில் 20 வருட அனுபவம் உள்ளவர். | மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் மாணவர்கள் | 6 ஜூலை 2017 |
| கல்விசார் கற்பித்தல் மற்றும் வளர்ச்சியில் ஆய்வகப் பயன்பாட்டின் ஒரு வரைகலை நிரலாக்க கருவி பற்றிய ஒரு பட்டறை. | திரு.மணிமாறன் ஆசைத்தம்பி,<br>சிரேஸ்ட பயன்பாட்டு முறைமை பொறியியலாளர் VI சொலூசன்ஸ் இந்தியா | மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் மாணவர்கள் | 18.12.2017 மற்றும் 19.12.2017 |
| நவீன மின்சக்தி அமைப்புகளில் வளரும் தலைப்புகள் | கலாநிதி தில்லைநாதன் லோகேந்திரன், மின்னியல் வலு பொறியியல் உதவி பேராசிரியர் அவர்களால் விளக்கக்காட்சி மேற்கொள்ளப்பட்டது. | மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் மாணவர்கள் | 2017 |
| ‘‘மனித உடல்நலம் மீதான இயற்கை மற்றும் மின்சார ஒளியின் உயிரியல் பாதிப்பு’’ பற்றிய உரை | கலாநிதி. உதயன் துரைராஜா<br>ஆராய்ச்சியாளர், சிரேஸ்ட மின்னியல் பொறியியலாளர், விஞ்ஞானி மற்றும் விரிவுரையாளர்<br>மின்னியல் பொறியியல் மற்றும் ஒளி வடிவமைப்பு துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம். | மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் மாணவர்கள் | 6 ஜூலை 2017 |
| சந்தைப்படுத்தல் உத்திகள் பற்றிய கருத்தரங்கு அமெரிக்க வருகைதரு நிபுணர் செரில் எடிசன் மூலம் மேற்கொள்ளப்பட்டது | செல்வி.செரில் எடிசன் (அமெரிக்க வருகைதரு நிபுணர் / வளவாளர் மற்றும் தொடர் தொழில்முயற்சியாளர் மற்றும் சர்வதேச மூலோபாயவாதி) | மூன்றாம் வருட மற்றும் இறுதி வருட மாணவர்கள். இந்த கருத்தரங்கு, ‘‘இறுதி சந்தைக்கு மூலோபாயம்” என்பதில் பொறியியல் மாணவர்களுக்கு அறிவுரை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது, | 7 ஜூலை 2017 |

| | | | |
|---|---|---|---|
| | | இது அவர்களின் இறுதித் திட்டத்தின் ஒரு பகுதியாக ஒரு வணிகத் திட்டத்தை தயாரிக்க உதவுகிறது அத்தோடு தொடக்கத்தை / தொழில் முனைவோரை ஊக்குவிக்கிறது. | |
| "இணையம் பற்றிய விடயங்கள்" தொடர்பான பயிற்சி பட்டறை | கலாநிதி.சந்தன கமகே (சிரேஸ்ட விரிவுரையாளர்) கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறை, மொரட்டுவைப் பல்கலைக்கழகம்), பொறி.கசுன் சாமர மற்றும் திரு.சஞ்சீவ தர்சன (முறைமை பொறியியலாளர், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்). | IOT இல் பொறியியல் மாணவர்களின் புரிதலை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு தொழிற்துறைகளில் IOT பயன்பாடுகளின் விழிப்புணர்வை மேம்படுத்துதல் இப்பயிற்சி பட்டறையின் நோக்கமாகும். | 8 ஜுலை 2017 |
| IIT காந்திநகர் அனுபவம் பற்றிய விளக்கக் காட்சி | திரு.நிதர்சன், திரு.நீதன் மற்றும் செல்வி.தினுஷா விக்கிரமாராச்சி | பொறியியல் பீட மாணவர்கள் | 27 மார்ச் முதல் 16 ஜுன் 2017 |
| கணினிப் பொறியியல் துறையின் ஒத்துழைப்புடன் IT அடிப்படையிலான தொழிற்துறையைத் தொடங்குதல் | ஷிரோமல் பெர்ணான்டோ தலைசிறந்த, வணிக மற்றும் உற்பத்தி அறிவின் அசாதாரண கலவையுடன் மாறும் அணி ஆற்றல்மிக்க மற்றும் செயல்திறன் உந்துதல் பொறியியல் நிபுணர் ஆவார். ஷிரோமல் பெர்ணான்டோ சிவில் பொறியியலில் B.Sc. பட்டம் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் MPhil பட்டம் என்பவற்றை கொண்டுள்ளார். | இறுதி வருட மாணவர்கள் | 21 ஜுலை 2017 |
| மனப்பாங்கு முறைமைகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் விருந்தினர் உரை | கலாநிதி.மஹேந்திர பிரவீனன், சிரேஸ்ட விரிவுரையாளர், சிட்னிப் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா | 20 இளங்கலை மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் | 8 நவம்பர் 2017 |
| "கட்டிடத் தொழிற்துறையில் பொறியியல் கோட்பாடுகளின் பயன்பாடு ஒரு நேர்வு பற்றிய ஆய்வு" தொடர்பில் விருந்தினர் உரை | பொறி.கிரிபரன் தனது B.Sc.(Eng) பட்டத்தை சிவில் பொறியியல் துறையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 2013ஆம் ஆண்டு முதல் வகுப்புடன் பெற்றுக்கொண்டர். அத்தோடு பொருட்களின் வலிமைக்காக சிறந்த செயல்திறன் விருது வழங்கப்பட்டது. | இறுதி வருட மாணவர்கள் | 21 ஜுலை 2017 வெள்ளிக்கிழமை |
| தொழிற்துறையில் காணப்படும் தலைமைத்துவ திறன்கள் மற்றும் கேள்விகள் | பொறி.ஸ்ரீராஜன் கலிபோர்னியா, சான் பெரண்டினோ கவுன்டியின் போக்குவரத்து திட்டமிடல் பிரிவிற்கு தலைமையாளராக பணியாற்றுகின்றார். | பீட மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் | 24 ஜுலை 2017 |
| "நீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு தொடர்பான அறிமுகம்" | பேரா.ஹர்ஷ ரத்னவீர, நோர்வே WaSo திட்டத்தின் விஞ்ஞானவியல் இணைப்பாளர் | மாணவர்களுக்காக | 26 ஜுலை 2017 |
| "நீர் மற்றும் சுற்றுச்சூழல்" பற்றிய முதுகலை பாடநெறிக்கான பாடத்திட்ட அபிவிருத்தியின் WaSo பயிற்சி பட்டறை | பேரா.ஹர்ஷ ரத்னவீர, மற்றும் ஏனைய பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் | பேரா.ஹர்ஷ ரத்னவீர, கலாநிதி. எஸ்.எஸ் சிவக்குமார், கலாநிதி.பீ.கேதீசன், பேரா.எஸ்.குகநாதன், பேரா.மீனா | 26 ஜுலை 2017 |

| | | | |
|---|---|---|---|
| | | செந்தில்நந்தனன், திரு.டீ.எஸ். சம்பத், திரு.கே.குணாலன், திரு.கே.நிரோஜன், செல்வி.எல்.தக்சாஜினி, திருமதி.ஜானகி ஆனந்தராஜா, திருமதி.பி.விபுலன் ஆகியோர் கூட்டத்தில் பங்குபற்றினர். பேரா.ஹர்ஷ ரத்னவீர கூட்டத்திற்கு தலைமையேற்றதுடன், கலாநிதி.பீ.கேதீசன் பட்டமேல் நிகழ்ச்சித் திட்டத்தின் பாடவிதான அபிவிருத்தியை ஒருங்கிணைப்பு செய்தார். | |
| ”நூற்றுக்கணக்கான விண்ணப்பதாரர்களிடையே தனித்துவமாக எவ்வாறு மாறுவது?” என்பது பற்றிய பேச்சு | பேரா.ஹர்ஷ ரத்னவீர, WaSo திட்டத்தின் விஞ்ஞானவியல் இணைப்பாளர் | கலாநிதி. எஸ்.எஸ் சிவக்குமார், கலாநிதி. பீ.கேதீசன், பேரா. எஸ்.குகநாதன், பேரா.மீனா செந்தில்நந்தனன், திரு.டீ.எஸ். சம்பத், திரு.கே.குணாலன், திரு.கே.நிரோஜன், செல்வி.எல்.தக்சாஜினி, திருமதி.ஜானகி ஆனந்தராஜா, திருமதி.பி.விபுலன் | 26 ஜுலை 2017 |
| “கட்டுப்பாட்டு பொறியியல் பண்புகளுக்கான படிநிலை மற்றும் சரிவு நுண் கட்டமைப்புகள்” தொடர்பில் தொழில்நுட்ப விளக்கக்காட்சி | கலாநிதி.ராமதாசன் தேவமாறன் தனது B.Sc.(Eng) பட்டத்தை சிவில் பொறியியல் துறையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 2008ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டர். அத்தோடு அவர் M.S. மற்றும் Ph.D. பட்டங்களை கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனத்தில் (USA) இயந்திரப் பொறியியல் துறையில் பெற்றுக்கொண்டார். | பொறியியல் பீட ஊழியர்களும் மாணவர்களும் | 26 ஜுலை 2017 |
| **விஞ்ஞான பீடம்** | | | |
| SL-SWCS'17**:** கணினி விஞ்ஞானம் பற்றியஇலங்கையின் நான்காவது தேசிய மாணவர் பயிற்சி பட்டறை (SL-SWCS’17) | | விஞ்ஞான பீட மாணவர்கள் | 2017 திசெம்பர் 9 சனிக்கிழமை யாழ்ப்பாணம் மெட்ரோ கட்டிட ஹட்டன் நஷனல் வங்கியின் கேட்போர் கூடத்தில் |
| ‘‘பயன்பாட்டு வழக்குகள் (கோட்பாடு), மற்றும் செயல்விளக்கத்தை பயன்படுத்தி கூலியாள் மற்றும் கொள்கலமைப்பிற்கான அறிமுகம்’’ | திரு. ஹரிஹர பாலகிருஸ்ணன், முகாமைத்துவ ஆலோசகர் IBM, மற்றும் திரு.ஜெராட் எஸ்.சவரிமுத்து, தொழில்நுட்ப விற்பனை தலைவர், சேவர் சொலுஸன்ஸ், சிஸ்டம்ஸ் கிலௌட் பிளட்போம்ஸ் | விஞ்ஞான பீட மாணவர்கள் | 20 ஒக்தோபர் 2017 |
| ‘‘JMS மற்றும் செய்தி தரகர்கள்’’ | திரு.இந்திக சம்பத் (இணை தொழில்நுட்ப தலைமை, WSO2) மற்றும் திரு.அசங்க | விஞ்ஞான பீட மாணவர்கள் | 28 செப்தெம்பர் 2017. |

| | | | |
|---|---|---|---|
| | அபேவீர (சிரேஸ்ட மென்பொருள் பொறியியலாளர், WSO2) | | |
| “ஆழமான கற்றல் மற்றும் அதன் பயன்பாடுகள் அறிமுகம்” | திரு.தணிகாசலம் கோகுல் (PhD மாணவர் Computer Vision QUT, அவுஸ்திரேலியா) | விஞ்ஞான பீட மாணவர்கள் | 20 ஜுலை 2017 |
| ”எராஸ்மஸ் முண்டஸ் விளம்பர நிகழ்வு” | திரு.பவன் குமார் ஸ்ரீராம் (Erasmus+ நிறுவனர் உறுப்பினர் மற்றும் ஒஸ்லோ புரோ-ரெக்டர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான சிரேஸ்ட ஆலோசகர்) | விஞ்ஞான பீட மாணவர்கள் | 14 ஜுலை 2017 |
| “நீங்கள் கணினி விஞ்ஞான பட்டத்துடன் என்ன செய்யலாம்? ” | கலாநிதி. யோகராஜா பிரதீபன் (கணினி விஞ்ஞான விரிவுரையாளர் அல்ஸ்டர் பல்கலைக்கழகம் UK) | விஞ்ஞான பீட மாணவர்கள் | 14 ஜுலை 2017 |
| SL-SWCS'17: கணினி விஞ்ஞானம் பற்றியஇலங்கையின் நான்காவது தேசிய மாணவர் பயிற்சி பட்டறை (SL-SWCS’17) | | விஞ்ஞான பீட மாணவர்கள் | 2017 திசெம்பர் 9 சனிக்கிழமை யாழ்ப்பாணம் மெட்ரோ கட்டிட ஹட்டன் நஷனல் வங்கியின் கேட்போர் கூடத்தில் |
| “பயன்பாட்டு வழக்குகள் (கோட்பாடு), மற்றும் செயல்விளக்கத்தை பயன்படுத்தி கூலியாள் மற்றும் கொள்கலமைப்பிற்கான அறிமுகம்’’ | திரு. ஹரிஹர பாலகிருஸ்ணன், முகாமைத்துவ ஆலோசகர் IBM, மற்றும் திரு.ஜெராட் எஸ்.சவரிமுத்து, தொழில்நுட்ப விற்பனை தலைவர், சேவர் சொலுஸன்ஸ், சிஸ்டம்ஸ் கிலௌட் பிளட்போம்ஸ் | விஞ்ஞான பீட மாணவர்கள் | 20 ஒக்தோபர் 2017 |
| “JMS மற்றும் செய்தி தரகர்கள்’’ | திரு.இந்திக சம்பத் (இணை தொழில்நுட்ப தலைமை, WSO2) மற்றும் திரு.அசங்க அபேவீர (சிரேஸ்ட மென்பொருள் பொறியியலாளர், WSO2) | விஞ்ஞான பீட மாணவர்கள் | 28 செப்தெம்பர் 2017. |
| ”கட்டடக்கலை வடிவமைப்பு வடிவங்கள்” | திரு. துசியந்தன் அருள்சோதி (தொழில்நுட்ப தலைமை, IronOne Technologies LLC) | விஞ்ஞான பீட மாணவர்கள் | 09 ஜுன் 2017. |
| **மருத்துவ பீடம்** | | | |
| ஆரம்ப பராமரிப்பினை கற்பித்தல் மற்றும் ஆரம்ப பராமரிப்பு நடைமுறைகளை மேம்படுத்தல் தொடர்பிலான செயலமர்வு | பேரா.டாடுக் கலாநிதி. டேனியல் மகேந்திரன் துரையப்பா, குடும்ப மருத்துவ பேராசிரியர், MAHSA மலேசியப் பல்கலைக்கழகம் | துறையின் கல்விசார் ஊழியர்கள், செயல் விளக்குனர்கள், பிரதேச மருத்துவ அலுவலர்கள், குடும்ப மருத்துவர்கள் | 28.01.2017 |
| நீரிழிவுநோய்க் கால் முன் அறிகுறி மற்றும் சிகிச்சை தொடர்பிலான மருத்துவ சந்திப்பு | கலாநிதி.டி. சர்மா,<br>அறுவை சிகிச்சை ஆலோகர்<br>போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்<br><br>கலாநிதி.எம்.அரவிந்தன் | துறையின் கல்விசார் ஊழியர்கள், செயல் விளக்குனர்கள், பிரதேச மருத்துவ அலுவலர்கள், குடும்ப மருத்துவர்கள் | 25.02.2017 |

| | | | |
|---|---|---|---|
| | ஆலோசகர் உட்சுரப்பியல் நிபுணர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் கலாநிதி.எம்.குமரன், விரிவுரையாளர், DCFM | | |
| விஞ்ஞானவியல் எழுத்து தொடர்பிலான செயலமர்வு | கலாநிதி.செஸ்மல் சிரிவர்தன மற்றும் கலாநிதி.பயார்ட் ரொபர்ட்ஸ், இணை பேராசிரியர்கள் சுகாதாரம் மற்றும் வெப்ப மண்டல மருந்துக்கான லண்டன் பாடசாலை | பீட உறுப்பினர்கள், மருத்துவர்கள், பொது சுகாதார தொழிலாளிகள், இணைந்த சுகாதார வல்லுநர்கள், கல்விசார் ஊழியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் | 27.02.2017 |
| ஆரம்ப பராமரிப்பில் சிறப்புத் தன்மை தொடர்பிலான மருத்துவ கருத்தரங்கு | பேரா.என்.-ஸ்ரீஹரன், வருகைதரு பேராசிரியர், கிங்ஸ் கல்லூரி லண்டன் | கல்விசார் ஊழியர்கள், ஆரம்ப பாதுகாப்பு மருத்துவர்கள் | 25.03.2017 |
| ஆரம்ப பராமரிப்பில் குறைவான சிறுநீர் பாதை அறிகுறிகள் தொடர்பிலான தொடர்ச்சியான தொழில்சார் மேம்படுத்தல் | கலாநிதி.டீ.சி.அம்பலவாணர், அறுவை சிகிச்சை ஆலோகர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் | பொது மருத்துவர்கள், பிரதேச மருத்துவ அலுவலர்கள், குடும்ப மருத்துவர்கள் | 29.04.2017 |
| தலைவலியின் முதன்மை கவனிப்பு முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு தொடர்பிலான மருத்துவ கூட்டம் | கலாநிதி.டி.குமணன், அறுவை சிகிச்சை ஆலோகர், மருத்துவ துறை, மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | பிரதேச மருத்துவ அலுவலர்கள், குடும்ப மருத்துவர்கள், பொது மருத்துவர்கள் | 27.05.2017 |
| முறையான மதிப்பாய்வு விளக்கக்காட்சி | கலாநிதி. செரோன் கிறிஸ்டி, பொது மருத்துவர் UK,<br><br>கலாநிதி.ஆர்.சுரேந்திரகுமரன் தலைவர் /DCFM | துறையின் கல்விசார் ஊழியர்கள் மற்றும் மருத்துவ பீட செயல் விளக்குனர்கள் | 30.05.2017 |
| முதன்மை கவனிப்பில் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் மத்தியில் நடத்தை சம்பந்தமான பிரச்சினைகளின் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவம் பற்றிய மருத்துவ கூட்டம் | பொது மருத்துவர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார பாதுகாப்பு ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்கள் | கலாநிதி.எஸ்.சிவயோகன், ஆலோசகர், மனநல மருத்துவர், போதனாவைத்தியசாலை யாழ்ப்பாணம் | 24.06.2017 |
| மருத்துவ கூட்டம் (தொடர்ச்சியான துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்) | மருத்துவ பீட கல்விசார் ஊழியர்கள் | பிரதேச மருத்துவ அலுவலர்கள், குடும்ப மருத்துவர்கள், பொது மருத்துவர்கள் | 07.07.2017 |
| மருத்துவ கூட்டம் (தொடர்ச்சியான துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்) | மருத்துவ பீட ஊழியர்கள் | பிரதேச மருத்துவ அலுவலர்கள், குடும்ப மருத்துவர்கள், பொது மருத்துவர்கள் | 26.08.2017 |
| பிராண வாயு ஆஸ்துமா முகாமைத்துவம் மற்றும் COPD (இன்ஹேலர் பயன்பாட்டின் முக்கியத்துவம்) பற்றிய துணை மருத்துவ நிகழ்ச்சித் திட்டம் | வைத்திய கலாநிதி. ஆர்.கோபிநாத், பட்டப் பின் பயிலுநர், PGIM, கொழும்பு | நல்லூர் MOH ஊழியர்கள், DH / கோண்டாவில் ஊழியர்கள் மற்றும் துறை ஊழியர்கள் | 04.10.2017 |
| அதிக எடை மற்றும் உடல் பருமனை நிர்வகிப்பதில் முதன்மைக் கவனிப்பு பற்றிய மருத்துவ கருத்தரங்கு | வைத்திய கலாநிதி.எஸ்.சிவன்சுதன், ஆலோசகர் மருத்துவர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் | கல்விசார் ஊழியர்கள், பிரதேச மருத்துவ அலுவலர்கள் மற்றும் குடும்ப மருத்துவர்கள் | 07.10.2017 |

| | | | |
|---|---|---|---|
| சமூக துறையில் சுகாதார திட்டங்களுக்கான அறிமுகம் பற்றிய பயிற்சிப் பட்டறை | கலாநிதி.ஆர்.சுரேந்திரகுமரன், தலைவர்/ DCFM<br>கலாநிதி.பி.ஏ.டீ.கூங்கே மற்றும் கலாநிதி.ரம்யா குமார், விரிவுரையாளர்கள் / DCFM | மருத்துவ எழுதுனர் பயிற்சி ஆசான் | 07.11.2017 |
| மாதவிடாய் ஆரம்ப சுகாதார பாதுகாப்பு தொடர்பான மருத்துவ கூட்டம் | கலாநிதி.கே.குருபரன்,<br>ஆலாசகர் பெண்ணோயியல்,<br>போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் | பொது மருத்துவர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார பாதுகாப்பு ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்கள் | 25.11.2017 |
| பக்கவாதத்திற்கு சமூக அடிப்படையிலான புனர்வாழ்வு பற்றிய பயிற்சிப் பட்டறை | வைத்திய கலாநிதி. அஜினி அரசலிங்கம், ஆலாசகர் நரம்பியல் நிபுணர் மற்றும் பக்கவாத மறுசீரமைப்பு குழு,<br>போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் | நல்லூர் MOH ஊழியர்கள், DH / கோண்டாவில் ஊழியர்கள் மற்றும் துறை ஊழியர்கள் | 30.11.2017 |
| முதன்மை பாதுகாப்பு அமைப்புகளில் NCD பரிசோதனை பற்றிய கருத்தரங்கு | வைத்திய கலாநிதி.ஏ.ரகுபதி,<br>ஆலோசகர் மருத்துவர்,<br>மாவட்ட பொது வைத்தியசாலை, தெல்லிப்பளை | நல்லூர் MOH ஊழியர்கள், DH / கோண்டாவில் ஊழியர்கள் மற்றும் துறை ஊழியர்கள் | 21.12.2017 |
| வழக்கு கலந்துரையாடல் மூலம் நீரிழிவு புதுப்பிப்புகள் பற்றிய மருத்துவ கூட்டம் | கலாநிதி.எம்.அரவிந்தன்<br>ஆலோசகர் உட்சுரப்பியல் நிபுணர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் | பிரதேச மருத்துவ அலுவலர்கள், குடும்ப மருத்துவர்கள், பொது மருத்துவர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்கள் | 30.12.2017 |
| பயிற்சிகள் / பயிற்சி பட்டறைகள் | | பல்கலைக்கழகங்களின் கல்விசார் ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலைகளின் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் | நவம்பர் 2017<br>ஜுன் 2017<br>ஜுன் 2017<br>ஆகஸ்ட் 2017 |

| **முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்** | | | |
|---|---|---|---|
| **செல்வி.எஸ்.ஜெயன் சுகன்யா**<br>“ஸ்மார்ட் PLS ஐ பயன்படுத்தி பகுதி மீட்சி சதுரங்கள் கட்டமைப்பு சமன்பாடு மாடலிங் (PLS-SEM)” பற்றிய பயிற்சி பட்டறையில் பங்குபற்றியமை | உத்தியோகத்தர் மேம்பாட்டு மையம்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | **செல்வி.எஸ்.ஜெயன் சுகன்யா** | 14 திசெம்பர் 2017 |
| **திருமதி.எஸ்.பாலகோபி**<br>”பாடத்திட்ட திருத்தம்” தொடர்பான பட்டறையில் கலந்து கொள்ளல் | BBM இணைய அலகு | **திருமதி.எஸ்.பாலகோபி** | 21, 22 மார்ச் 2017. |
| **கலாநிதி.ஆர்.விஜயகுமாரன்**<br>உத்தியோகத்தர் மேம்பாட்டு மையம் மற்றும் | பேரா.காமினி சேனாநாயக | **கலாநிதி.ஆர்.விஜயகுமாரன்** | 16.12.2017 |

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்த மூலோபாய முகாமைத்துவ திட்டம் தொடர்பான பட்டறையில் கலந்து கொள்ளல் | | | |
| **சித்த மருத்துவ அலகு** | | | |
| **“கையேடு படித்தல் பற்றிய பயிற்சி பட்டறை”** வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தால் “கையேடு படித்தல்” பற்றிய பயிற்சி பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த பயிலரங்கு இரண்டு வள நபர்களால் நடாத்தப்பட்டது. சான்றிதழ்கள் வழங்குவதற்கான நிகழ்வு 2017 ஜூன் 14 அன்று சித்த மருத்துவ அலகின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சுகாதாரம், சுதேச மருத்துவம் மற்றும் நன்நெறி மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ. கலாநிதி. பத்மநாதன் சத்தியலிங்கம் அவர்கள் கலந்து கொண்டார்கள். | தென்னிந்தியதவிலிருந்து வருகை தந்த பேரா.எஸ்.தாமரை பாண்டியன் மற்றும் கலாநிதி. எம்.பி. அகஸ்தியர் ஆகியோர் | விரிவுரையாளர்கள், BSMS மாணவர்கள், சித்த மருத்துவ அலுவலர்கள் மற்றும் பாரம்பரிய மருத்துவர்கள் இரண்டு தொகுதிகளாக இப் பயிற்சி பட்டறையில் பங்குபற்றினர். | 1 முதல் 14 ஜூன் 2017 சித்த மருத்துவ அலகில் |
| **“யோகா பயிற்சிப் பட்டறை”** மூன்றாவது சர்வதேச யோகா தினம், இந்திய உயர் ஸ்தானிகர், கொழும்பு மற்றும் வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது | - | கல்விசார் ஊழியர்கள் | 24 மே 2017 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகில் |
| “மூலோபாய முகாமைத்துவ திட்டம் தொடர்பான பட்டறை” | - | கலாநிதி.(திருமதி) டி.திலீபன் மற்றும் கலாநிதி.(செல்வி).வி. சண்முகராஜா கல்விசார் ஊழியர்கள் பல்கலைக்கழகங்கள்-கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள், கருவிகள் மற்றும் நுட்பங்களுக்கான (மூலோபாய திட்டம் மற்றும் முகாமைத்துவம்) | 5 ஆகஸ்ட் 2017<br>8.30 முதல் 4.00 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதீகவியல் துறையின் சிறிய கேட்போர் கூடத்தில் |

## 9.3 ஞாபகார்த்த விரிவுரைகள்-2017

| ஞாபகார்த்த விரிவுரையின் பெயர் | தலைப்பு | வளவாளர் | திகதி | பீடம் |
|---|---|---|---|---|
| பேரா.கைலாசநாத குருக்கள் ஞாபகார்த்த விரிவுரை | யாழ்ப்பாணத்து இந்துக்கோவிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு | கலாநிதி.(திருமதி). எஸ்.ஸ்ரீமுரளீதரன் | 17.08.2017 | கலைப் பீடம் |
| லீலாவதி ராமநாதன் அம்மையார் ஞாபகார்த்த விரிவுரை | ஈழத்தில் "சைவமும் தழிழும்"என்னும் கருத்து நிலை உருவாக்கம் | பேரா.(திருமதி). எஸ்.ரமேஸ் | 13.01.2017 | கலைப் பீடம் |
| சேர் பொன். ராமநாதன் ஞாபகார்த்த விரிவுரை | சிவனொளிபாதமலை இலங்கையில் போருக்குப் பிந்திய சமாதானத்திற்கும் சமரசத்திற்கும் அடையாளமாக இருக்க முடியுமா? | பேரா.பிரேமகுமார த சில்வா | 12.01.2017 | கலைப் பீடம் |
| கலாநிதி. அருணாசலம் சிவபாதசுந்தரம் ஞாபகார்த்த விரிவுரை | கறைபடிந்த வட இலங்கையின் சிறுவர்கள் | கலாநிதி.கீதாஞ்சலி சத்தியதாஸ் | 06.10.2017 | மருத்துவபீடம் |
| பேரா. சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் ஞாபகார்த்த விரிவுரை | சமையல் எண்ணெய்களில் உள்ள C18 செறிவூட்டப்படாத கொழுப்பு அமிலங்களின் வெப்ப தூண்டுதல் மற்றும் கார் ஒட்சியேற்ற எதிர்வினைகள் | பேரா.அல்பிரட் ஏ. கிறிஸ்டி | 17.02.2017 | விஞ்ஞான பீடம் |
| சிவயோகர் சுவாமி ஞாபகார்த்த விரிவுரை | சைவசித்தாந்த மெய்யியல் நோக்கில் யோகர் சுவாமிகள் | பேரா.(திருமதி).ஏ.என். கிருஸ்ணவேணி | 16.06.2017 | கலைப் பீடம் |

## 10. உள்ளக கணக்காய்வு அலகு

### உள்ளக கணக்காய்வு அறிக்கை

வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம்-2017 ஆனது கணக்காய்வாளர் நாயக திணைக்களம் மற்றும் இன் மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவின் ஆலோசனையுடன் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வவுனியா வளாகத்தின் நடவடிக்கைகளும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் வவுனியா வளாகத்தின் நடவடிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளது.

பல்கலைக்கழக கணக்கியலுக்கான மாதாந்த செயற்திறன் அறிக்கை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கணக்காய்விற்கான காலாண்டு மதிப்பீடு அறிக்கைகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கும் மேலாக, இப் பிரிவு நிதியியல் மற்றும் பிற தகவல்களை கணக்காய்வு செய்வதற்கென பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்திற்கு உதவியது.

இந்த பிரிவு முன் கணக்காய்வு செய்யப்பட்டு, பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்த வேலைகள், பத்திர மற்றும் ஒப்பந்தம், பல்கலைக்கழக சேமலாப நிதிக் கொடுப்பனவு, பணிக்கொடை, ஓய்வூதிய செலுத்துகை மற்றும் ஓய்வுபெற்ற இராஜினாமா செய்த ஊழியர்களின் நிதியியல் பொறுப்புக்களை விடுவித்தல். ஆகிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இல | தேர்வளவு | ஆவணங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | வவுனியா வளாகம் |
| 1 | ப.சே.நி | 275 | 31 |
| 2 | பணிக்கொடை | 58 | 03 |
| 3 | ஓய்வூதியம் | 15 | 02 |
| 4 | பத்திரம் மற்றும் ஒப்பந்தம் | 30 | 00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | ஒப்பந்த வேலைகளுக்கான இறுதி கொடுப்பனவு | 38 | 00 |

**இருநூற்று தொன்னூற்றொன்பது (299),** விண்ணப்பங்கள் சேமலாப நிதிய மீள் செலுத்துகைக்கானதாக இருந்த நிலையில் அவை சான்றுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டினுள் சேமலாப நிதிய நன்மைகளை வழங்குவதற்கென யூஜிசிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**13** அத்தியாயங்கள் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் திட்டம் 2017 ஆகியவற்றிற்கு அமைவாக உள்ளக கணக்காய்வு பிரிவினால் வெற்றிகரமாக கணக்காய்வு செய்யப்பட்டது. 2017ஆம் ஆண்டினுள் இப்பிரிவானது பின்வரும் விடயங்களை கணக்காய்வு மற்றும் அவதானிப்புகளுக்கு உட்படுத்தப்பட்டது.

**A.** பாதீட்டு கட்டுப்பாட்டு முறை

B. வழங்குனர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட செலுத்தப்படாத முற்பண கொடுப்பனவுகள் (S1& S2).

C. சில்லறை காசு மற்றும் தபால் முன்பணம் என்பவற்றின் மீதான செலவு

D. மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் விடுமுறைநாள், போக்குவரத்து கொடுப்பனவு கோரிக்கை மீதான செலவு கட்டுப்பாட்டுக் கொள்கை

E. களஞ்சிய முகாமைத்துவ கொள்கை.

F. கணக்கெடுப்பு குழு மற்றும் அதனது செயற்பாட்டு அறிக்கை மேற்கொண்ட நிலையான சொத்துக்கள் மீதான வருடாந்த சரிபார்ப்பு பற்றாக்குறை மற்றும் மிகை சம்பளப் பட்டியல் முறைமைக்கான கட்டுப்பாட்டு முறை.

G. 2016 கணக்கெடுப்புக் குழுவின் செயற்பாட்டிற்கான TEC நடைமுறைகள்.

H. எரிபொருள் / மின்சாரம் மற்றும் வாகன பயன்பாட்டு முகாமைத்துவம்.

I. கைவிரலடையாள இயந்திர நடைமுறைப்படுத்தல்.

J. உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் மீதான கொள்வனவு நடைமுறைகள்.

K. கடனாளிகள் மற்றும் கடனளிப்போர் முகாமைத்துவம் மீதான கட்டுப்பாடு-2017

L. 2017 நிதியியல் கணக்காய்வு மீதான அவதானிப்பு

M. பொருட்கள் மீதான இழப்புகள்.

N. மீள்செலுத்தக் கூடிய வைப்புக்களின் விடுவிப்பு.

O. பிணைமுறி மற்றும் ஒப்பந்தங்கள் மீதான மீறல்.

P. அகற்றல் முறைமையின் நடைமுறைப்படுத்தல்.

Q. வவுனியா வளாகத்தின் நடவடிக்கைகள் மீதான அவதானிப்பு (09 அத்தியாயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன)

R. கிளிநொச்சி மற்றும் வவுனியா வளாகத்தின் நிர்வாக முறைமை மீளாய்வு மீதான அவதானிப்பு

a. உடற்கல்வி நடவடிக்கைகளின் புதுப்பித்தல் மற்றும் திருத்தம்.

b. பொது நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்.

c. பெருநிறுவன திட்டம், செயல் திட்டம் மற்றும் காலாண்டு செயற்திறன் அறிக்கை என்பவற்றின் தயாரிப்பு

d. ஊழியர்களுக்கு வேலை விபரத்தை (கடமைப் பட்டியல்) வழங்குதல்

e. பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்.

f. நலச்சேவை வசதிகள்.

2017ஆம் ஆண்டினுள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் கல்விசார், நிறைவேற்று மற்றும் நிதியியல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய **எண்பத்து ஆறு (86)** உள்ளக கணக்காய்வு தேடல்கள் மற்றும் சான்றாதார குறிப்புகள் வழங்கப்பட்டன.

**பதினொரு (11)** கணக்காய்வுகள் வினவல்கள் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தினால் கோரப்பட்ட நிலையில் அனைத்து வினவல்களுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

**2. மாணவர் நடவடிக்கைகளில் நிதியியல் கணக்காய்வு**

மாணவர் சங்கங்கள் / அலகுகளின் நிதி நடவடிக்கைகளை கண்காணிக்கும் நோக்கில் மாணவர் சங்கங்கள் / அலகுகளின் கணக்குகளை உள்ளக கணக்காய்வு பிரிவு கணக்காய்வு செய்துள்ளது. பின்வரும் சங்கங்கள் / அலகுகள் பற்றிய கணக்குகள் 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்டு, அறிக்கைகள் துணைவேந்தர் மற்றும் பிற கட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

1. சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்
2. இரசாயனவியல் சங்கம்
3. வரலாற்று சங்கம்
4. கணினிச் சங்கம்
5. மருத்துவ மாணவர் சங்கம்
6. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர்கள் சங்கம்
7. முகாமைத்துவ மாணவர் ஒன்றியம்

**3. கணக்காய்வு குழு**

பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதில் முகாமைக்கு பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய கணக்காய்வு குழு (பேரவையின் நிலையியற் குழு) உதவி வருகின்றது. 2017ஆம் ஆண்டில் 06 கணக்காய்வு குழு கூட்டங்கள் இடம்பெற்றன.

| | | | |
|---|---|---|---|
| 01. | பேரா.வி.தர்மரட்ணம் | பேரவை உறுப்பினர் | 30.05.2015 முதல் |
| 02. | திரு.எஸ்.ரங்கராஜா | பேரவை உறுப்பினர் | 30.05.2015 முதல் |
| 03. | பொறி.ஆர்.எம்.டப்.ரத்நாயக | பேரவை உறுப்பினர் | 30.05.2015 முதல் 2017 ஜுலை வரை |
| 04. | திரு.வி.கணகசபாபதி | ஆலோசகர் | 01.09.2015 முதல் |
| 05. | திரு.வி.காண்டீபன் | பதிவாளர் | 11.03.2009 முதல் |
| 06. | திரு.எம்.எம்.ஜே.ஆர் போகமுவ | உள்ளக கணக்காய்வாளர் | UGC 24.10.2014 முதல் |
| 07. | செல்வி.ஏ.ஜி.எப். பஸ்னா | AIA /ஏற்பாட்டாளர் | 05.06.2012 முதல் |

பின்வரும் விடயங்கள் விசேடமாக மற்ற விடயங்களுடன் விவாதிக்கப்பட்டன மற்றும் கணக்காய்வு குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டு செயற்படுத்தலுக்கான உத்தரவுகள் அனுப்பப்பட்டன.

1. உள்ளக கண்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கருத்திட்டம் 2017
2. காலாண்டு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 2017
3. உள்ளக கண்காய்வு அவதானிப்பு அறிக்கைகள்
4. நிலையான சொத்து பதிவேட்டை தயாரிப்பதன் முன்னேற்றம்
5. COPE விடயங்களின் தற்போதைய நிலை மற்றும் 23.11.2017 அன்று இடம்பெற்ற COPE கூட்டத்தில் பங்குபற்றியமை தொடர்பிலான மீளாய்வு.

6. 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுக்கான இறுதி கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் நாயக அறிக்கைகளின் தயார்படுத்தல்.

## 11. உடற் கல்வி அலகு

### 11.1 அறிமுகம்

இந்த ஆண்டில் விளையாட்டு நடவடிக்கைகள் யாவும் மிகவும் வெற்றிகரமாக உடற்கல்வி பிரிவு மூலம் நடாத்தப்பட்டன. மேலும் 2017 ஜுன் 29 அன்று அவர்களுடைய விளையாட்டு பேரவையையும் உருவாக்க முடிந்தது. உடற்கல்வி அலகின் ஓர் வரலாற்று மைல் கல்லாக விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கிற்கான பல்தேவை கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 09 பெப்ரவரி 2017 அன்று இடம்பெற்றது. இவ் அடிக்கல்லை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேரா.(செல்வி) வீ. அரசரத்தினம் அவர்கள் நாட்டிவைத்தார்கள்.

### 11.2 வர்ண இரவு

உடற்கல்வி அலகு 2016 ஆம் ஆண்டுக்கான வர்ண இரவு நிகழ்வினை 2017 திசெம்பர் 16 ஆம் திகதி ஒழுங்கு செய்திருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.ஆர்.விக்கினேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தார். 50 ஆண் மற்றும் 29 பெண் வீரர்கள் அரை வர்ணத்தை பெற்றுக்கொண்டதுடன், முதலாம் வருட 8 ஆண் வீரர்கள் மற்றும் 6 பெண் வீரர்கள் சிறந்த புதுமுக மாணவன் சிறந்த புதுமுக மாணவி விருதுகளை முறையே பெற்றுக்கொண்டனர். அத்தோடு சிறந்த கிறிக்கற் வீரருக்கான விருது, சிறந்த தடகள வீரருக்கான விருது, பல்கலைக்கழக திறந்த உள்ளக விளையாட்டு தனிநபர் விருது, பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வெற்றியாளர் விருதுகள், பீடங்களுக்கிடையிலான வெற்றியாளர் விருதுகள், புதுமுக மாணவர்களுக்கான பீடங்களுக்கிடையிலான வெற்றியாளர் விருதுகள் மற்றும் சர்வதேச பங்குபற்றலுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. செல்வி.ஜி.துஸ்யந்தி 2016 ஆம் ஆண்டுக்கான சகலதுறை விளையாட்டு வீராங்கனையாகவும் திரு.பி.அபிஹரன் 2016 ஆம் ஆண்டுக்கான சகலதுறை விளையாட்டு வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

### 11.3 விளையாட்டு நடவடிக்கைகள்

| நடவடிக்கைகள் | திகதி | நிலைமை |
|---|---|---|
| திரு.யு.வினோத்குமார் எமது யாழ்ப்பாண பல்கலைக்கழக பளு தூக்கல் ஆண்கள் அணி மற்றும் செல்வி.ஆர்.ஏ.பி.எம். ராஜபக்ச மேசைப் பந்து பெண்கள் அணி | 29வது சம்மர் யுனிவர்சியேட் - 2017, தாய்ப்பே 19 முதல் 30 ஆகஸ்ட் 2017 வரை | இலங்கை பல்கலைக்கழக பளு தூக்கல் அணி மற்றும் மேசைப் பந்து அணியை பிரதிநிதித்துவப்படுத்த தெரிவுசெய்யப்பட்டனர். |
| புதுமுக மாணவர்களுக்கான பீடங்களுக்கிடையிலான தடகள போட்டி - 2016 | 18 மற்றும் 19 பெப்ரவரி 2017 | வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது |
| பீடங்களுக்கிடையிலான தடகள போட்டி - 2017 | 29 மற்றும் 30 ஏப்ரில் 2017 | வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கலப்பு வலைபந்து போட்டி – 2017 | பேராதனைப் பல்கலைக்கழகத்தால் ஒழுங்குசெய்யப்பட்டது - 2017 | இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டனர். திரு.ஏ.சந்தோஸ் குறித்த போட்டியில் "வலைபந்து மன்னன்" எனும் பட்டத்தை பெற்றார் |
| இலங்கை இடைநிலை பளுதூக்கல் போட்டி – 2017 | இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தால் ஒழுங்குசெய்யப்பட்டது - 2017 | எமது பல்கலைக்கழக உறுப்பினர்கள் அனைவரும் இடங்களை பெற்றுக்கொண்டனர். |
| "களணி 9s" பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஹொக்கி தொடர் - 2017 | களணிப் பல்கலைக்கழகத்தால் ஒழுங்குசெய்யப்பட்டது - 2017 | கோப்பை தொடரில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டனர் |

## 12. உத்தியோகத்தர் மேம்பாட்டு மையம்

பல்கலைக்கழக ஊழியர்களின் திறமையான மற்றும் திறமையான செயல்பாட்டுக்கு தேவையான அறிவு, திறமைகள் மற்றும் அணுகுமுறைகளின் தொடர்ச்சியான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நோக்கத்துடன் பணியாற்றும் மையம் (SDC) அமைக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டும் வெற்றிகரமான சிறப்பான ஆண்டாக காணப்பட்டது. உத்தியோகத்தர் மேம்பாட்டு மையம் ஒலி, ஒளி வசதிகளுடனும் குளியலறை வசதிகளுடன் கூடிய இரு குளிரூட்டப்பட்ட கருத்தரங்கு மண்டபங்களை நன்கு பயன்படுத்தியது. இது பல்கலைக்கழக ஊழியர்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில் SDC ஆல் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று முன்மொழிவுகள் ஒப்புதலுடன் சுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதியான UGC கொடுப்பனவை முழுமையாக பயன்படுத்தியதன் மூலம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்டவை. இந்த வளாகங்கள் 2017 ல் நூற்றுக்கணக்கான முறை பயன்படுத்தப்பட்டன. இதில் பட்டறைகள், மாநாடுகள், நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், தூண்டுதல் திட்டம், பொது விரிவுரைகள் மற்றும் பல தொடர்ச்சியான தொழில்முறை அபிவிருத்தி திட்டங்கள் (CPD) ஆகியவை அனைத்து பிரிவு ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும் என நடாத்தப்பட்டன.

SDC மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது மட்டுமல்லாமல், EndNote போன்ற நூல் மேலாண்மை மென்பொருள் வாங்குவதற்கு மற்றும் தேவையான முறையான பயிற்சி அமர்வுகளை கூட முன்னர் வவுனியா வளாகத்திலும் மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக, நூலகம் மற்றும் எல்ச்வீயர் வெளியீட்டாளருக்கு இடையே SCOPUS உடன் குழுசேர்வதற்கான பேச்சுவார்த்தை மற்றும் வசதியளித்தலை SDC மேற்கொண்டது : ஒரு பெரிய சுருக்க தரவுத்தளம் தற்போது ஊழியர்கள் மற்றும் மாணவர்களால் அணுகப்படுகின்றது. ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் கோரிக்கைக்கேற்ப தொடர்புடைய பயிற்சி அமர்வுகளை SDC வழங்குகின்றது. புள்ளிவிபரங்களின்படி, தரவுத்தளத்தின் பாவனை 2500 தேடல்களுக்கு அதிகமானதாக காணப்படுகின்றது.

**கீழ்வருவன தொடர்ச்சியான துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (CPD) 2017 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.**

| திகதி | CPD நிகழ்ச்சித் திட்டத்தின் தலைப்பு | வளவாளர்(கள்) | இலக்கு குழு | பயிற்சி அளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 03.03.2017 | விஞ்ஞான ஆராய்ச்சி: ஆராய்ச்சி உதவி பற்றிய பயிற்சிப் பட்டறை | • கலாநிதி.சி.ஜி. யாபா, தலைவர், ஆராய்ச்சிப் பிரிவு, NSF<br>• பேரா. சாகரிக்கா ஏகநாயக்க, உயிர் இரசாயனவியல் பேராசிரியர், ஸ்ரீ.ஜ.புர பல்கலைக்கழகம்<br>• கலாநிதி கௌரி மூர்த்தி, சிரேஸ்ட விஞ்ஞானவியல் அலுவலர், ஆராய்ச்சிப் பிரிவு, NSF<br>• பேரா.கே.எம். நலின் த சில்வா, இரசாயனவியல் சிரேஸ்ட பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்<br>• கலாநிதி மயூரி தம்மிட்டியகொடகே, தலைவர், விலங்கியல் மையம், மருத்துவ ஆராய்ச்சி நிலையம் | கல்வியாளர்கள் | 48 |
| 13.05.2017 | மனிதப் பண்பியலில் ஆராய்ச்சி முறையியல் பற்றிய பயிற்சிப் பட்டறை | • பேரா.நெலௌபர் த மெல், ஆங்கில பேராசிரியர், ஆங்கில துறை, கொழும்பு பல்கலைக்கழகம்<br>• கலாநிதி ஹர்சன ரம்புக்வெல்ல, பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் கற்கைகள் நிறுவனம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | கல்வியாளர்கள் | 41 |
| 04.08.2017 | பல்கலைக்கழக கல்வி: சட்ட கட்டமைப்பு மற்றும் ஆளுகை | • பேரா.ஹரிஸ்சந்திர அபேகுணவர்தன, முன்னாள் து.வே பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் முன்னாள் உறுப்பினர் ப.மா.ஆ | கல்வியாளர்கள் | 46 |
| 04.08.2017 | கல்வி, தொழில் மற்றும் மாணவர் ஆலோசனை பற்றிய பயிற்சிப் பட்டறை | • கலாநிதி.பீ.எம்.கே. பெரேரா, முன்னாள் பணிப்பாளர் தொழில் வழிகாட்டல் அலகு பேராதனை பல்கலைக்கழகம் | கல்வி ஆலோசகர்கள் / ஆற்றுப்படுத்துனர்கள், தொழில் வழிகாட்டுனர் மற்றும் ஆலோசர்கள் மற்றும் மாணவ ஆலோசகர்கள் | 65 |
| 05.08.2017 | பல்கலைக்கழகங்க-ளுக்கான மூலோபாய திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் பற்றிய செயலமர்வு | • பேரா.ஹரிஸ்சந்திர அபேகுணவர்தன, முன்னாள் து.வே பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் முன்னாள் உறுப்பினர் ப.மா.ஆ<br>• கலாநிதி.பீ.எம்.கே. பெரேரா, முன்னாள் பணிப்பாளர் தொழில் வழிகாட்டல் அலகு பேராதனை பல்கலைக்கழகம் | கல்வியாளர்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் | 50 |
| 04.08.2017 | பல்கலைக்கழகம் ஆளுகை மற்றும் முகாமைத்துவம் | • பேரா.ஹரிஸ்சந்திர அபேகுணவர்தன, முன்னாள் து.வே பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் முன்னாள் உறுப்பினர் ப.மா.ஆ | நிறைவேற்று மற்றும் கல்விசாரா ஊழியர்கள் | 35 |
| 04.08.2017 | கல்விசாரா ஊழியர்களுக்கான அத்தியாவசிய மென் | • கலாநிதி.பீ.எம்.கே. பெரேரா, முன்னாள் பணிப்பாளர் | CAAs, எழுதுனர்கள், TOs, | 46 |

| | | | | |
|---|---|---|---|---|
| | திறன் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | தொழில் வழிகாட்டல் அலகு பேராதனை பல்கலைக்கழகம் | உத்தியோகத்த உதவியாளர் கள், வரவேற்பாளர் கள் | |
| 27.09.2017 | இயற்கை வளங்கள் மற்றும் மோதல்களுக்கு இடையேயான உறவை ஆராய்தல் - போராட்டமான ஒரு சூழலில் சமூக அறிவியலின் செய்தல் பற்றிய கருத்தரங்கு | பேரா.மார்டின் பவிங்க், புவியியல் துறை, திட்டமிடல் மற்றும் சர்வதேச அபிவிருத்தி கற்கைகள், அம்ஸ்ட்ரடாம் பல்கலைக்கழகம், நெதர்லாந்து | கல்வியாளர்க ள் மற்றும் இறுதி வருட மாணவர்கள் | 45 |
| 07.10.2017 | கற்றல் மற்றும் கற்பித்தலை மேம்படுத்துவதற்கான Google G-Suite பற்றிய பயிற்சி பட்டறை | • கலாநிதி ஈ.வை.ஏ. சார்ள்ஸ், தலைவர் கணினி நிலையம் | கல்வியாளர்க ள் | 40 |
| 26.10.2017 | “ஸ்மார்ட் PLS ஐ பயன்படுத்தி பகுதி மீட்சி சதுரங்கள் கட்டமைப்பு சமன்பாடு மாடலிங் (PLS-SEM)” பற்றிய பயிற்சி பட்டறை | • கலாநிதி ஜே. ரொபின்சன், மனிதவள முகாமைத்துவ துறை | மனிதப் பண்பியல் துறையின் இளம் கல்வியாளர்க ள் ஆராய்ச்சியா ளர் கள் | 42 |
| 14.12.2017 | “ஸ்மார்ட் PLS ஐ பயன்படுத்தி பகுதி மீட்சி சதுரங்கள் கட்டமைப்பு சமன்பாடு மாடலிங் (PLS-SEM)” பற்றிய இரண்டாவது பயிற்சி பட்டறை | • கலாநிதி ஜே. ரொபின்சன், மனிதவள முகாமைத்துவ துறை | மனிதப் பண்பியல் துறையின் இளம் கல்வியாளர்க ள் ஆராய்ச்சியா ளர் கள் | 42 |
| 16.12.2017 | மூலோபாய முகாமைத்துவ திட்டமிடல் பற்றிய செயலமர்வு | • பேரா.காமினி சேனாநாயக்க, துணை வேந்தர் ருஹுணு பல்கலைக்கழகம் | கல்வியாளர்க ள் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள | 38 |

## 13. தொழில் வழிகாட்டல்

1. மார்ச் 9, 2017: கைலாசபதி கலையரங்கத்தில் ULTIMMA ஆதரவுடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில் வழிகாட்டல் பட்டறை.
2. மார்ச் 30 மற்றும் 31 ஆம் திகதி 2017: முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழில் வழிகாட்டல் அலகு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தொழில் கண்காட்சியை நடாத்தியது.
3. 2017 ஜூன் 14 முதல் 16 வரை: தொழில் வழிகாட்டல் பிரிவு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் உதவியுடன் மூன்று நாள் பயிற்சி பட்டறையை நடாத்தியது. அதில் நான்காம் வருட மானிடவியல் துறை மாணவர்கள், திட்டங்கள் மனிதவள மேம்பாடு,இலங்கை CEFE உதவி பட்டயத்தை கொண்டுள்ள பல்வேறு அரசாங்கத் துறை மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் செயலமர்வில் ஈடுபட்டனர். இந்த பட்டறைகளில் தொழில் அபிவிருத்தி திறன் தொடர்பான பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டன.
4. 2017 ஆகஸ்ட் 16: இலங்கையில் ஐ.நா. இளைஞர்களுடன் பிரதிபலிக்கும் ஒரு இளைஞர் ஈடுபாடு பற்றிய சந்திப்பு ஐ.நா தொடர்பாடல் குழுவால் (UNCG) மேற்கொள்ளப்பட்டது. இந்த

நிகழ்வானது 15 முதல் 29 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு ஐ.நா. நாடுகளின் உறுப்பினர்களுடன் அர்த்தமுள்ள உரையாடலில் ஈடுபடுவதற்கு ஒரு தளத்தை வழங்குகிறது.

5. 2017 ஆகஸ்ட் 23 மற்றும் 24 ஆம் திகதியன்று: தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையுடன் (NEDA) இணைந்து அனைத்து பீடங்களினதும் 100 இறுதி வருட மாணவர்களை உள்ளடக்கி செயலமர்வொன்றை நடாத்தியது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையுடன் (NEDA) 1ம் கட்ட "Upadhidari Viyasayake Udanaya (UVU) programme 2017" நிகழ்வுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை 2 நாட்கள் முழு நேரமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்த திட்டமிட்டது.
6. 2017 அக்டோபர் 12 மற்றும் 13 ஆம் திகதியன்று: தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையுடன் (NEDA) இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் "Upadhidari Viyasayake Udanaya" எனும் தலைப்பில் வணிகத்தில் மூளை பயன்படுத்துவதற்கான முயற்சியின் 2ம் கட்ட செயலமர்வு இடம்பெற்றது.
7. 2017 அக்டோபர் 28 மற்றும் 29 ஆம் திகதியன்று: யாழ்ப்பாணத்தின் கணினி பிரிவில் UNDP தேசிய இளைஞர் சேவைகள் சபை (NYSC) மற்றும் CISCO நெட்வொர்க் அகாடமி ஆகியோருடன் இணைந்து தொழில்முனைவில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கான e- செயலமர்வு இடம்பெற்றது. e-கற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கு UNDP ஆதரவுடன் இளைஞர்களிடையே தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிற்துறை (ICT) திறன்களைப் பற்றிய அறிவை வலுப்படுத்தும் வகையில் தேசிய முன்னுரிமைகள் மீது திட்டத்தை உருவாக்குவதற்கான முயற்சியாகும். இந்த CISCO தொழில் முனைவோர் தங்களது பின்வரும் வாய்ப்புகள் மற்றும் தொழில் முன்னேற்றங்களை மேம்படுத்துவதற்கான ஒரு தொழில் முனைவோர் வழிமுறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

## 14. நூலகம்

நூலகர் :திருமதி.எஸ்.அருளாநந்தம்

ஊதவிப் பதிவாளர் :திரு.கே.டீ.விக்கிரமரத்ன

- நூலக சேவைகள்

| பயனர் வகைப்படுத்தல் | | பயனர் எண்ணிக்கை |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட மொத்த இளங்கலை மாணவர்கள் | | 7509 |
| பதிவு செய்யப்பட்ட மொத்த பட்டப் பின் கற்கை மாணவர்கள் | | 294 |
| | | |
| பதிவு செய்யப்பட்ட மொத்த கல்விசார் ஊழியர்கள் | | 648 |
| பதிவு செய்யப்பட்ட மொத்த கல்விசாரா ஊழியர்கள் | | 637 |

- **ஆராய்ச்சிகள், கண்டுப்பிடிப்புகள் மற்றும் வெளியீடுகள்**

| விடயம் | வெளியிடப்பட்டவை | வணிகமயமாக்கப்பட்டவை | முன்வைக்கப்பட்டவை |
|---|---|---|---|
| ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 10 | | 10 |
| கண்டுப்பிடிப்புகளின் எண்ணிக்கை | | | |

| | | | |
|---|---|---|---|
| சஞ்சிகைகளின் எண்ணிக்கை | | | |
| புத்தகங்களின் எண்ணிக்கை | 1 | | |
| கட்டுரைகளின் எண்ணிக்கை | 3 | | |
| மொத்தம் | **14** | **-** | **10** |

## 15. நலச் சேவைகள்

மீளாய்வாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் நன்மைக்காக கீழ்வரும் வசதிகள்/சேவைகள் நலச்சேவைகள் கிளையினால் வழங்கப்பட்டது.

1. விடுதி வசதிகள்
2. சிற்றுண்டிச்சாலை வசதிகள்
3. மாணவர்களுக்கான நிதியியல்சார் உதவிகள்
4. மாணவர் உறவுகள்
5. மாணவர் நிலையம்

### (01) <u>பட்டதாரி மாணவர்களுக்கான விடுதி தங்குமிடங்கள்</u>

தற்போதுள்ள விடுதி விதிமுறைகளின் படி, முதல் மற்றும் இறுதி ஆண்டில் கற்கும் வெளி மாவட்ட மாணவர்களுக்கு மட்டும் விடுதி வசதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் போதனா ஆஸ்பத்திரிகளில் அவர்களின் விரிவுரைகள் மற்றும் சந்திப்புகளை பரிசீலித்து, மருத்துவ பீட பீடாதிபதியின் பரிந்துரையுடன் முழு மருத்துவ மாணவர்களுக்கும் விடுதி வசதிகள் வழங்கப்படுகின்றன. இது தவிர, மனிதாபிமான பின்னணியில் சில ஊனமுற்ற மாணவர்களும் தங்களது கல்வி கற்கும் ஆண்டு மற்றும் சொந்த இடம் என்பவற்றை கருத்திற் கொள்ளாது விடுதிகளில் தங்கியுள்ளனர்.
2017 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் **பதினொரு** விடுதிகளில் மாணவர்கள் தங்கியுள்ளனர்.

| **இல** | **விடுதி** | **பாதுகாவலர்** | **உப பாதுகாவலர்** | **தங்கியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | ஆனந்தகுமாரசாமி பெண்கள் விடுதி | கலாநிதி.திருமதி.எஸ் சிவசந்திரன் | செல்வி.ஆர்.சுபானி | 280 |
| 2 | பாலசிங்கம் ஆண்கள் விடுதி | திரு.டி.விக்னேஸ்வரன் | திரு.பி.பூலோகநாதன் | 104 |
| 3 | மருத்துவ மாணவர் விடுதி (ஆண்கள்) | கலாநிதி.திரு.எஸ்.ராஜேந்திரா | திரு.வி.குகதர்சன் | 177 |
| 4 | மருத்துவ மாணவர் விடுதி (பெண்கள்) | கலாநிதி.திருமதி.ஜி.பவாணி | திருமதி.ஜி. ஜதீசன் | 189 |
| 5 | RAFA பெண்கள் விடுதி | செல்வி.எம்.அருளையா | திருமதி.வி. பாஸ்கரலிங்கம் | 100 |
| 6 | சித்த மருத்துவ மாணவர் விடுதி (ஆண்கள்) | கலாநிதி.எஸ்.. சிவசண்முகராஜா | திரு.பி.சசிதரன் | 50 |
| 7 | சித்த மருத்துவ மாணவர் பெண்கள் விடுதி | கலாநிதி.(திருமதி).கே. சௌந்தரராஜா | செல்வி.எல்.முருகேசு | 50 |
| 8 | அறிவியல் நகர் ஆண்கள் விடுதி | கலாநிதி.கே.அன்புருவேல் | திரு. எஸ்.சிவக்குமார் | 56 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | அறிவியல் நகர் பெண்கள் விடுதி | கலாநிதி.செல்வி.ஜெ. சின்னையா | செல்வி.எஸ். ஜெயவதனி | 96 |
| 10 | கொக்குவில் புதிய விடுதி-1 | கலாநிதி.திருமதி. எஸ் சிவசந்திரன் | செல்வி.டி.லாவண்யா | 350 |
| 11 | கொக்குவில் புதிய விடுதி-11 | கலாநிதி.திருமதி. எஸ் சிவசந்திரன் | செல்வி.எஸ்.விஜிதா | 150 |

மேலும், அதிகரித்து வரும் தேவைகளை ஈடுசெய்யும் வகையில் பல்கலைக்கழகம் பின்வரும் 9 தனியார் வீடுகளை மாணவர்கள் தங்கும் வகையில் வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

| இல | தனியார் விடுதிகளின் முகவரி | தங்கியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இணுவில் தனியார் விடுதி, இணுவில் (ஆண்) | 87 |
| 2 | இல.175, ராஜ வீதி, தனியார் விடுதி, கோப்பாய் (ஆண்) | 24 |
| 3 | கோண்டாவில் தனியார் விடுதி, கோண்டாவில் (பெண்) | 22 |
| 4 | உழவியல் தனியார் விடுதி, திருநெல்வேலி (பெண்) | 16 |
| 5 | பனிக்கர் ஒழுங்கை தனியார் விடுதி, திருநெல்வேலி (பெண்) | 13 |
| 6 | கலட்டி அம்மன் வீதி தனியார் விடுதி, யாழ்ப்பாணம் (ஆண்) | 12 |
| 7 | திருநகர் வடக்கு தனியார் விடுதி, கிளிநொச்சி (பெண்) | 28 |
| 8 | திருநகர் தெற்கு தனியார் விடுதி, கிளிநொச்சி (பெண்) | 22 |
| 9 | உதயநகர் கிழக்கு தனியார் விடுதி (பெண்) | 18 |

**(02) சிற்றுண்டிச் சாலை வசதிகள்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் நலன்களுக்கான பின்வரும் அம்சங்களில் சிற்றுண்டிச்சாலை வசதிகளும் வழங்கப்பட்டன. அவர்கள் நியாயமான விலையில் உணவு மற்றும் புத்துணர்ச்சி பொருட்களை பெற முடிந்தது.

1. மாணவர் சிற்றுண்டிச்சாலை (பிரதான வளாகம்)
    a. பிரதான சிற்றுண்டிச்சாலை- 1
    b. பிரதான சிற்றுண்டிச்சாலை- 11
2. ஆனந்தகுமாரசுவாமி விடுதி
3. மருத்துவ பீடம்
4. RAFA, மருதனார்மடம்
5. சித்த மருத்துவம், கைதடி
6. கணகசுந்தரம் விடுதி, யாழ்ப்பாணம்
7. விவசாய பீடம், கிளிநொச்சி
8. தொழில்நுட்ப பீடம், கிளிநொச்சி

**(03) மாணவர்களுக்கான நிதிசார் உதவிகள்**

பின்வரும் நிதிசார் உதவிகள் 2017 ஆம் ஆண்டினுள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

**a) மகாபொல மற்றும் மாணவர் நிதியுதவி கொடுப்பனவுகள்**

| பீடம் / அலகு | நிதியியல் உதவி | |
|---|---|---|
| | மகாபொல | மாணவர் நிதியுதவி |
| விவசாயம் | 52 | 74 |
| கலை | 1492 | 1195 |
| பொறியியல் | 74 | 03 |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகம் | 974 | 300 |
| மருத்துவம் | 320 | 06 |
| விஞ்ஞானம் | 247 | 337 |
| இணைந்த சுகாதார விஞ்ஞானம் | 115 | 25 |
| சித்த மருத்துவம் | 36 | 82 |
| தொழில்நுட்பம் | 124 | 15 |
| **மொத்தம்** | **3434** | **2037** |

**b) துணைவேந்தர் நல நிதியம்**

இந் நிதியத்திற்காக வெளிநாட்டிலுள்ள நலன் விரும்பிகளிடமிருந்து நன்கொடைகளை பெற்று உள்நாட்டிலுள்ள தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

துணைவேந்தர் நல நிதியம் மற்றும் ஏனைய நன்கொடையாளர்கள் 2017ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு செய்த கொடுப்பனவுகளின் விபரம்.

| நிதியம் | பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பொறியியல் மாணவர்க்கானது - 01 | 05 |
| பொறியியல் பீடம் | 10 |
| குகன் குகனேந்திரா புலமைப்பரிசில் - 03 | 04 |
| இளையதம்பி அம்பிகைராஜா புலமைப்பரிசில் - 05 | 04 |
| சிவா-தயா-தயாகரன்-ரமேஸ்-06 | 01 |
| மகேஸ்வரி ஜயந்தி புலமைப்பரிசில் | 02 |
| மலரும் நிதியம் - UK | 35 |
| யுனிநிதியம் - அவுஸ்திரேலியா | 66 |
| துணைவேந்தர் நல நிதியம் | 57 |
| மென்டிஸ் மெக்வூட்ஸ் அறக்கட்டளை நிதியம் | 02 |
| மகாலிங்கம் ஞாபகார்த்த கல்வி உதவித் தொகை | 02 |
| திருமதி.புவனேஸ்வரி லோகநாதன் ஞாபகார்த்த கல்வி உதவித் தொகை | 12 |
| பேரா. இராசரத்தினம் லோகேந்திரன் மாணவர் கல்வி உதவித் தொகை | 02 |
| தமிழ் பொறியியலாளர்கள் அமையம் | 10 |

| | |
|---|---|
| கடுமையாக பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆளுநரின் விசேட திட்டம் - வடக்கு மாகாணம் | 10 |
| **மொத்தம்** | **412** |

**(04) மாணவர் தொடர்புகள்**

மதிப்பாய்வாண்டில், மாணவர் ஒன்றியம் மற்றும் பீட மாணவர் ஒன்றியங்கள் மிகச் சிறப்பாக செயற்பட்டிருந்தன.

**(05) மாணவர் மையம்**

சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அலுவலகம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அலுவலகம், தொழில் வழிகாட்டல் அலுவலகம், பழைய மாணவர் அலுவலகம், நலச்சேவைகள் பிரிவு, பல்கலைக்கழக நலன்புரி கூட்டுறவு களஞ்சியம், பல்கலைக்கழக உப தபாலகம் மற்றும் பிரதான சிற்றுண்டிச்சாலை (I, II) ஆகியன இம் மையத்தில் செயற்படுகின்றன. தியான மண்டபம், முஸ்லிம் தொழுகை அறை, பூப்பந்து திடல், மேசைப்பந்து திடல் மற்றும் குழு அறை ஆகியனவும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக இக்கட்டிடத்திலே அமையப்பெற்றுள்ளது.

## 16. மருத்துவ நிலையம்

| இல | பதவி | ஆளணி | தற்போதைய நிலை | வெற்றிடம் பற்றிய குறிப்புகள் |
|---|---|---|---|---|
| 01 | பிரதான மருத்துவ அலுவலர்<br>பல்கலைக்கழக சிரேஸ்ட மருத்துவ அலுவலர் / மருத்துவ அலுவலர்<br>உதவி பல்கலைக்கழக மருத்துவ அலுவலர் | 01<br>01<br>இல்லை | இல்லை | 01<br>01<br>01 வருகை<br>01 வருகை |
| 02 | பதவிநிலை தொழில்நுட்ப உதவியாளர் தரம். 1 | 01 | 01 | - |
| 03 | தாதிய அலுவலர் | 04 | 04 | |
| 04 | மருந்தாளர் | 02 | 02 | - |
| 05 | தொழிலாளி (வேலை உதவியாள்) | 01 | 01 | - |
| 06 | சுகாதார பணியாளர் (ஆண்) | 01 | 01 | - |
| 07 | சுகாதார பணியாளர் (பெண்) | 01 | 01 | - |
| 08 | பொது சுகாதார பரிசோதகர் | 01 | இல்லை | 01 |
| 09 | சுகாதார சேவைகள் தொழிலாளி | 16 | 02 | |
| 10 | முகாமைத்துவ உதவியாளர் | 01 | 01 | 01 எழுதுனர் |

| பெயர் | பதவி | நியமனத்தின் தன்மை |
|---|---|---|
| கலாநிதி. திருமதி. ஜே. ஸ்ரீஸ்கந்தராஜா | பல்கலைக்கழக மருத்துவ அலுவலர் | வருகை |
| கலாநிதி.ஜே. லோரன்ஸ் | உதவிப் பல்கலைக்கழக மருத்துவ அலுவலர் | வருகை |
| திரு.எஸ்.செல்வரத்னம் | பதவிநிலை தொழில்நுட்ப அலுவலர் தரம் 1 | நிரந்தரம் |
| திருமதி.ஆர்.நவிதா | தாதி அலுவலர் தரம் 11 | நிரந்தரம் |
| திருமதி.ஏ.கார்திகா | தாதி அலுவலர் தரம் 11 | நிரந்தரம் |

| | | |
|---|---|---|
| செல்வி.பி.கிசிகா | தாதி அலுவலர் தரம் 11 | நிரந்தரம் |
| திருமதி.எஸ்.விமலேந்திரநாதன் | தாதி அலுவலர் தரம் 11 | நிர்ணயம் |
| திருமதி.ஜி.மனோரஞ்சன் | மருந்தாளர் உயர் தரம் | நிரந்தரம் |
| திருமதி.என். சுரேந்திரன் | மருந்தாளர் கீழ் தரம் | நிரந்தரம் |
| திருமதி.ஆர்.ரேனுகா | எழுதுனர் | நிரந்தரம் |
| திரு.கே.ராஜேந்திரம் | தொழிலாளர் விசேட தரம் | நிரந்தரம் |
| திரு.கே.சசிகரன் | தொழிலாளர் | நிரந்தரம் |
| திரு.ஏ.விஜேந்திரன் | சுகாதார சேவைகள் தொழிலாளர் தரம் 111 | நிரந்தரம் |
| திரு.கே.துஸ்யந்தன் | சுகாதார சேவைகள் தொழிலாளர் தரம் 111 | நிரந்தரம் |

**குறித்த காலப்பகுதியில் இந் நிலையத்தால் வழங்கப்பட்ட சேவைகள்.**

a) சிகிச்சை

b) ஆய்வுகூட பரிசோதனை

c) அறிவுரை மற்றும் ஆலோசனை

d) பரிந்துரைகள் (போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

**ஆலோசனைகள்**

A. மாணவர் 8822
B. ஊழியர் 6646
C. ஆய்வுகூட பரிசோதனை 2302

**வைத்தியசாலை பரிந்துரைகள் (போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)**

| | | |
|---|---|---|
| 01 | சரும மருத்துவம் | 06 |
| 02 | ENT மருத்துவம் | 04 |
| 03 | MO/OPD | 62 |
| 04 | கண் மருத்துவம் | 18 |
| 05 | பல் மருத்துவம் | 02 |
| 06 | எலும்பியல் மருத்துவம் | 02 |
| 07 | மனநல மருத்துவம் | 02 |

## 17. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### 17.1 மாணவர் ஆட்சேர்ப்பு:

2017 ஆம் ஆண்டின் மாணவர் ஆட்சேர்ப்பினை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | பாடநெறிகளின் பெயர்கள் | பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| i | கலை மற்றும் *B.A* பகுதி – 1 முதற் தேர்வு | - |
| ii | வணிகம் முதல் | 119 |

| | | |
|---|---|---|
| iii | இசை / நடனம் இளமாணி | -- |
| iv | வணிக முகாமைத்துவ இளமாணி (இணைய வழி பட்ட நிகழ்ச்சித் திட்டம்) | 114 |
| | **மொத்தம்** | **233** |

## 17.2 வருடாந்தப் பரீட்சைகள் :

கீழ்வரும் அட்டவனை 2017ஆம் ஆண்டில் நிலையத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த பரீட்சைகளை காட்டுகின்றது.

**<u>2017ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகள்</u>**

| | பரீட்சைகளின் பெயர் | திகதி |
|---|---|---|
| i | கலைமாணி பகுதி II - 2013 | 06.02.2017 – 20.02.2017 |
| ii | வணிக முதற் தேர்வு – 2014 (புதிய பாடத்திட்டம்) | 06.03.2017 – 14.03.2017 |
| iii | வணிக முதற் தேர்வு – 2014 (பழைய பாடத்திட்டம்) | 06.03.2017 – 14.03.2017 |
| iv | இரண்டாம் வணிக தேர்வு – 2014 (புதிய பாடத்திட்டம்) | 17.03.2017 – 25.03.2017 |
| v | வணிகமாணி - பகுதி - I– 2014 (பழைய பாடத்திட்டம்) | 17.03.2017 – 25.03.2017 |
| vi | மூன்றாம் வணிக தேர்வு – 2014 (புதிய பாடத்திட்டம்) | 27.03.2017 – 01.04.2017 |
| vii | வணிகமாணி - பகுதி – II - 2014 (பழைய பாடத்திட்டம்) | 27.03.2017 – 01.04.2017 |
| viii | நான்காம் வணிக தேர்வு – 2014 (புதிய பாடத்திட்டம்) | 03.04.2017 – 08.04.2017 |
| ix | வணிகமாணி - பகுதி – III– 2014 (பழைய பாடத்திட்டம்) | 03.04.2017 – 08.04.2017 |
| x | இசைமாணி/நடனமாணி முதலாம் வருட பரீட்சை - 2013 | 17.04.2017 – 20.04.2017 |
| xi | இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருட பரீட்சை - 2013 | 21.04.2017 – 26.04.2017 |
| xii | இசைமாணி/நடனமாணி மூன்றாம் வருட பரீட்சை – 2013 | 17.04.2017 – 20.04.2017 |
| xiii | இசைமாணி/நடனமாணி நான்காம் வருட பரீட்சை – 2012 – 2013 | 24.04.2017 – 25.04.2017 |
| xiv | வியாபார முகாமைத்துவ (இணையவழி) மானி பட்ட நிகழ்ச்சி முதலாம் வருடம் 2ம் அரையாண்டு - 2015 | 08.04.2017 – 23.04.2017 |
| xv | வியாபார முகாமைத்துவ (இணையவழி) மானி பட்ட நிகழ்ச்சி இரண்டாம் வருடம் 2ம் அரையாண்டு - 2015 | 08.04.2017 – 23.04.2017 |
| xvi | வியாபார முகாமைத்துவ (இணையவழி) மானி பட்ட நிகழ்ச்சி மூன்றாம் வருடம் 2ம் அரையாண்டு - 2015 | 29.04.2017 – 07.05.2017 |
| xvii | கலை முதற் தேர்வு - 2014 | 14.08.2017 – 02.09.2017 |
| xviii | கலை முதற் தேர்வு - பகுதி - I– 2014 | 25.09.2017 – 12.10.2017 |
| xix | வியாபார முகாமைத்துவ (இணையவழி) மானி பட்ட நிகழ்ச்சி முதலாம் வருடம் 2ம் அரையாண்டு - 2016 | 11.11.2017 – 19.11.2017 |
| xx | வியாபார முகாமைத்துவ (இணையவழி) மானி பட்ட நிகழ்ச்சி இரண்டாம் வருடம் 1ம் அரையாண்டு - 2016 | 25.11.2017 – 09.12.2017 |
| xxi | வியாபார முகாமைத்துவ (இணையவழி) மானி பட்ட நிகழ்ச்சி மூன்றாம் வருடம் 1ம் அரையாண்டு - 2015 | 25.11.2017 – 09.12.2017 |
| xxii | கலை முதற் தேர்வு - பகுதி - II– 2014 | 04.12.2017 – 20.12.2017 |

## 17.3 பெறுபேறுகளை வெளியிடுதல்:

கீழ்வரும் பரீட்சைப் பெறுபேறுகள் 2017ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.

| | பரீட்சையின் பெயர் | பெறுபேறு வெளியிடப்பட்ட திகதி |
|---|---|---|
| i. | கலை முதற் தேர்வு - 2013 | 05.04.2017 |
| ii. | கலைமானி – பகுதி – I - 2013 | 24.07.2017 |
| iii. | கலைமானி - பகுதி – II - 2013 | 08.09.2017 |

### 17.4 பட்டமளிப்பு:

கீழ்வரும் அட்டவணை 2017ஆம் ஆண்டில் பட்டம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை காட்டுகின்றது.

| | பட்டத்தின் பெயர் | பட்டமளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கலைமாணி - 2013 | 374 |
| 2 | வர்த்தகமாணி – 2014 (பழைய பாடத்திட்டம்) | 09 |
| 3 | வர்த்தகமாணி – 2014 (புதிய பாடத்திட்டம்) | 28 |
| 4 | வர்த்தக முகாமைத்துவமாணி – 2015 | 25 |
| 5 | நடனமானி – 2014 | 03 |
| 6 | இசைமானி – 2014 | 01 |
| **மொத்தம்** | | **440** |

### 17.5 ஊழியர்களின் பலம்:

கீழ்வரும் அட்டவணை 2017ஆம் ஆண்டில் நிலையத்தில் காணப்பட்ட ஊழியர் பதவிகளைக் காட்டுகின்றது.

| | ஊழியர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|---|
| 1 | பேரா.பீ.நிமலதாசன் | பணிப்பாளர் |
| 2 | திரு.ரி.அதியமான் | பிரதிப் பதிவாளர் |
| 3 | திரு.ரி.யோகேஸ்வரன் | பதவிநிலை உதவியாளர் |
| 4 | திரு.என்.அரியரட்ணம் | எழுதுனர் தரம் 11 |
| 5 | திரு.எஸ்.நிமலன் | கணினி பயன்பாட்டு உதவியாளர் |
| 6 | திரு.எஸ்.தசிகரன் | கணினி பயன்பாட்டு உதவியாளர் |
| 7 | திரு.பி.பத்மநாதன் | அலுவலக இயந்திர இயக்குனர் |
| 8 | திரு.டி.ரட்ணகுணசிங்கம் | தொழிலாளி தரம் 1 |

## 18. உள்ளக தர உத்தரவாத அலகின் தாபிப்பு

### உள்ளக தர உத்தரவாத அலகு: அறிக்கை

உள்ளக தர உத்தரவாத அலகிற்கு (IQAU) ஜுன் 2017ல் புதிய பணிப்பாளராக பேரா.ஜி.மிகுந்தன் நியமிக்கப்பட்டார். அத்தோடு இன் நடவடிக்கைகள் ப.மா.ஆ வின் தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார சபையினால் (QAAC) வழங்கப்பட்ட புள்ளி அட்டைக்கு ஏற்ப சீராக வளர்ச்சி பெறுகின்றது.

**IQAC வின் இணைப்பாளர்களின் விபரம்:**

| பீடங்கள் | இணைப்பாளர்கள் |
|---|---|
| கலைப் பீடம் | பேரா.எஸ்.ரமேஸ் |
| விவசாய பீடம் | கலாநிதி.திருமதி.என்.ஞானவேல்ராஜா |
| பிரயோக விஞ்ஞான பீடம் | கலாநிதி.திருமதி.ஏ.நந்தகுமாரன் |

| | |
|---|---|
| வணிக கற்கைகள் பீடம் | கலாநிதி.வை.நந்தகோபன் |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் | கலாநிதி.திருமதி.சிவானி சண்முகதாஸ் |
| பொறியியல் பீடம் | கலாநிதி.எஸ்.கதிர்காமநாதன் |
| பட்டப் படிப்புகள் பீடம் | கலாநிதி.எஸ்.பாலகுமார் |
| மருத்துவ பீடம் | கலாநிதி.திருமதி.கீதாஞ்சலி சத்தியதாஸ் |
| விஞ்ஞான பீடம் | கலாநிதி.டி.மனோரஞ்சன் |
| தொழில்நுட்ப பீடம் | கலாநிதி.திருமதி.எஸ்.ஐங்கரன் |
| சித்த மருத்துவ அலகு | கலாநிதி.எஸ்.சிவசண்முகராஜா |

**IQAU அலுவலகம்:**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ராமநாதன் தொகுதியின் இல. 12, கீழ் தளம் (இடதுபக்க) எனும் முகவரியில் IQAU அலுவலகம் நிறுவப்பட்டது. அத்தியாவசிய வசதிகளான தளபாடங்கள், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் தொலைபேசி (நிலையான - 021 222 9139 மற்றும் இண்டர்கொம் -1231) மற்றும் இணைய வசதிகள் வழங்கப்பட்டன. உதவிப் பதிவாளர் / தர உத்தரவாதம் (மேற்பார்வை) எனும் நியமனம் உருவாக்கப்பட்டு ஏற்கனவே உதவிப் பதிவாளராக / கல்விசார் சேவையாற்றும் திரு. எஸ்.கே.பிரபாகரன் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளராக செல்வி.பி.பிருந்தா ஆகியோருடன் செயற்படத் தொடங்கியது.

**IQA அலகின் உருவாக்கம்:**

குறித்த அலகானது ஒவ்வொரு பீடத்தின் பீடாதிபதி மற்றும் பீட குழுவின் ஆதரவுடன் ஒவ்வொரு பீடத்திலும் உள்ளக தர உத்தரவாத அலகுகளை உருவாக்குவதற்கு முன்முயற்சி எடுத்துள்ளது. ஒருங்கிணைப்பாளர்கள் அந்தந்த பீட குழுவினால் பெயர் குறிப்பிட்டு துணைவேந்தரால் நியமிக்கப்பட்டனர். QAAC வழங்கிய மதிப்பெண் அட்டையில் குறிப்பிட்டுள்ளதன்படி, IQAC க்கு திறம்பட செயல்படுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் QA செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு தேவையான மனிதவளத்தை பூர்த்திசெய்வதற்காக முகாமைத்துவ பயிலுநர்கள் நியமிக்கப்பட்டனர். சித்த மருத்துவ துறையிலும் IQAC உருவாக்கப்பட்டுள்ளதுடன் அது துணைவேந்தரின் கீழ் நேரடியாக வருகின்றது.

**IQAU ற்கான மின்னஞ்சல் மற்றும் இணையத்தளம்**

IQAU ஒரு அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரியினை iqau@univ.jfn.ac.lk கொண்டுள்ளதுடன் அது அதன் தொடர்பாடலுக்கு பயன்படுத்தப்படுகின்றது. இது [https://sites.google.com/univ.jfn.ac.lk/iqau/] எனும் வலைத்தளத்தை நிறுவியுள்ளதுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களும் பதிவேற்றம் செய்யப்பட்டு அடிக்கடி புதுப்பிக்கப்படுகின்றன. இணையத்தளமானது ஏற்கனவே கொண்டுள்ளது, அவை ஏற்கனவே அந்தந்த பீடங்களின் வலைத்தளங்களில் நிறுவப்பட்டுள்ள உள்ளக தர உத்தரவாத அலகுகளினையும் இணைக்கின்றது. IQAU வலைத்தளமானது IQAU இனால் நடாத்தப்படுகின்ற குறிப்பாக

கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய தகவல்களையும் உள்ளடக்கியுள்ளது.

**IR 2011 மற்றும் COLRIM சிபாரிசுகள்:**

IR 2011 சிபாரிசுகள் மற்றும் பொதுநலவாய கற்றல் விமர்சனம் மற்றும் நடைமுறை மாதிரி (COLRIM) சிபாரிசுகள் என்பவற்றை IQAU கலந்தாலோசித்ததுடன் அவற்றின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தல்களை கண்காணிக்க தொடங்கியுள்ளது. அதன் ஒரு பரிந்துரையாக அனைத்து துறைதலைவர்களுக்கும் பணிப்பாளர்களுக்கும் தங்கள் வலைப்பக்கங்களின் அணுகலை வழங்குவதுடன் தனிப்பட்ட ஊழியர்கள் உறுப்பினர்கள் தங்கள் வலைப்பக்கங்களை செயல்படுத்துவதற்கு சந்தர்ப்பமளித்தல் ஆகும். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் அதிகாரப்பூர்வ மின்னஞ்சல்களுக்காக கூகிளிடம் ஜிமெயில் தளத்துடன் ஒரு பொதியினை கொண்டிருந்தது. கல்விசார் மற்றும் நிர்வாக அலுவலர்கள், துறைகள் மற்றும் அலகுகள் ஆகியன @ univ.jfn.ac.lk இந்த மின்னஞ்சலில் இன்னும் தாமதமின்றி தங்களது சொந்த திருத்தங்களை மேற்கொள்ள முடியும். இவ் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் ஏற்பாடு 2018 ஆம் ஆண்டில் கல்விசாராத மற்றும் மாணவர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

**IQAU வின் மாதாந்த கூட்டங்கள்**

ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட அட்டவணைக்கேற்ப ஒவ்வொரு மாதமும் (ஒவ்வொரு இரண்டாவது வியாழனன்று 2.00 மணிக்கு) மாதாந்த சந்திப்புகளை தொடர்ச்சியாக நடத்த ஆரம்பித்ததுடன் அறிக்கைகளை தொடர்ச்சியாக பேரவை மற்றும் மூதவைக்கு அறிக்கைப்படுத்தி தமது செயற்பாடுகளை தெளிவுபடுத்தினர். இந்த அரை ஆண்டு காலப்பகுதியில் ஏழு IQAU கூட்டங்கள் நடாத்தப்பட்டன. IQAU மற்றும் IQAC களில் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் இந்த கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டது.

**திட்ட மதிப்பாய்வுகள் மற்றும் நிறுவன மதிப்பாய்வு:**

IQAU மற்றும் IQAC கலை ஆகியன கலைப்பீடத்திற்கு 2017 ஆம் ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிற்காகவும் திட்ட மதிப்பீட்டின் சுய மதிப்பீட்டு அறிக்கையை எழுதுவதற்கு உதவின. அதே போன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நிறுவன மதிப்பீட்டு அறிக்கையின் சுய மதிப்பீட்டு அறிக்கையை 2018 ஆம் ஆண்டின் அதன் அடுத்த சுற்று ஆய்வுக்காக செயற்பட தொடங்கியது. அனைத்து பீடங்களிலும் கருத்தரங்குகளை (12 எண்கள்) நடாத்திய பின்னர், நிறுவன மதிப்பீட்டு (IR) கையேட்டில் கொடுக்கப்பட்ட 10 அடிப்படைகளுக்கு அமைய நியமிக்கப்பட்ட 10 குழுக்களை IQAU நிறுவனம் ஒருங்கிணைக்கிறது. பத்து உறுப்பினர்களும் பதிவாளரின் பரிந்துரைக்கமைய அந்தந்த பீட குழுவினால் நியமிக்கப்பட்டதுடன் எழுத்து செயலாக்கத்தை எளிதாக்குவதற்கு இந்த அனைத்து குழுக்களிலும் நிர்வாக பணியாளர்களையும் நியமிக்க முடிந்தது. எழுத்து செயன்முறை 2018 ஆம் ஆண்டிலும் தொடர்கிறது.

**ஆவணங்கள் சேகரிப்பு:**

IQAU தர உத்தரவாதம் மற்றும் தர மேம்பாடு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சேகரிக்கத் தொடங்கியுள்ளது. அவற்றை எதிர்கால குறிப்புக்காக IQAU அலுவலகத்தில் ஆவணப்படுத்தியுள்ளது. சில அறிக்கைகள் ஸ்கேன் செய்யப்பட்டு, மென் பிரதிகள் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டன.

## 19. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம்

### 19.1 அறிமுகம்

#### 19.1.1 வவுனியா வளாகத்தின் வரலாறு

1990 களில் உயர்கல்விக்கான அதிகரித்து வரும் தேவைகளை பூர்த்தி செய்ய பிராந்திய மக்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்காக இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகள் (AUCs) நிறுவப்பட்டன. இவ் அரசாங்க கொள்கையின் அடிப்படையில் வட மாகாணத்துக்கான இணைந்த பல்கலைக்கழக கல்லூரி 1991 நவம்பர் 20ஆம் திகதி வவுனியாவில் தாபிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 9 இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளில் 4 புதிய பல்கலைக்கழகங்களாக 1996/1997 காலப்பகுதிகளில் தரமுயர்த்தப்பட்டன. அதே நேரம் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 22ஆம் பிரிவிற்கேற்ப NPAUC யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக 1997 ஏப்ரில் 01ஆம் திகதி தரமுயர்த்தப்பட்டது.

#### 19.1.2 ஆண்டறிக்கையின் காலப்பகுதி

இவ் ஆண்டறிக்கை வவுனியா வளாகத்தின் 01 ஜனவரி 2017 முதல் 31 திசெம்பர் 2017 வரையான காலப்பகுதியின் நடவடிக்கைகள் மற்றும் செயற்திறன்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

**19.2 நோக்குக் கூற்று**

**நோக்கு**

கற்பித்தல்,கற்றல்,ஆராய்ச்சி மற்றும் அறிவுப்புலமை முதலான துறைகளில் முதன் நிலை வகிக்கும் ஒரு முக்கிய நிலையமாகத் திகழ்வதே எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நோக்காகும்.

**19.3 பணிக்கூற்று**

**பணிக்கூற்று**

21 ஆம் நூற்றாண்டில் சுமத்தப்பட்ட சவால்களை எதிர்கொள்ளக்கூடிய அறிவார்ந்த மற்றும் தொழில்முறை திறன்களை உடனடியாக சந்தைப்படுத்தக்கூடிய பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் திறமைசார் கல்விச் சேவைகளை வழங்குவதில் முதன்மையானவராக இருக்க வேண்டும். மேலும் பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச பகுதிகளின் நிலையான அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்.

## 19.4 வவுனியா வளாகத்தின் பீடங்கள்

| பீடங்கள் | துறைகள் | பட்டம் |
|---|---|---|
| **பிரயோக விஞ்ஞான பீடம்** | • **உயிர் விஞ்ஞான துறை** | • விஞ்ஞான இளமானி (சூழலியல் விஞ்ஞானம்)<br>• விஞ்ஞான இளமானி (விசேட) சூழலியல் விஞ்ஞானம் |
| | • **பௌதீக விஞ்ஞான துறை** | • விஞ்ஞான இளமானி (பிரயோக கணிதம் மற்றும் கணினி)<br>• தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமானி (BICT)<br>• விஞ்ஞான இளமானி தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்<br>• விஞ்ஞான இளமானி (விசேட) கணினி விஞ்ஞானம் |
| **வணிக கற்கைகள் பீடம்** | • **பொருளியல் மற்றும் முகாமைத்துவத் துறை** | • சந்தைப்படுத்தல் முகாமைத்துவ சிறப்பு வணிக முகாமைத்துவ இளமானி பட்டம்<br>• வணிக பொருளியல் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமானி பட்டம்<br>• மனிதவள முகாமைத்துவ சிறப்பு வணிக முகாமைத்துவ இளமானி பட்டம் |
| | • **நிதி மற்றும் கணக்கியல் துறை** | • கணக்கியல் மற்றும் நிதித் துறையானது கணக்கியல் மற்றும் நிதி ஆகியவற்றுடன் வணிக முகாமைத்துவ நான்கு ஆண்டு இளமானி சிறப்பு பட்டத்தை வழங்குகிறது |

## 19.5 வளாக சபை உறுப்பினர்கள்

வவுனியா வளாகத்தின் வளாக சபை உறுப்பினர்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கலாநிதி.ரி.மங்கலேஸ்வரன் | தலைவர் (வளாக முதல்வர்) |
| திரு.எஸ்.குகநேசன் | பீடாதிபதி, பிரயோக விஞ்ஞானம் |
| கலாநிதி.ஏ.புஸ்பநாதன் | பீடாதிபதி, வணிக கற்கைகள் பீடம் |
| கலாநிதி.(திருமதி) நிமலன் | தலைவர், உயிரியல் விஞ்ஞானம் |
| கலாநிதி.டி.கேதீசன் | தலைவர், பௌதிக விஞ்ஞானம் |

| | |
|---|---|
| திருமதி.ஜே.எஸ்.தேவரூபன் | தலைவர், நிதி மற்றும் கணக்கியல் |
| திருமதி.வை.நந்தகோபன் | தலைவர், பொருளியல் மற்றும் முகாமைத்துவம் |
| திரு.எம்.கருணாநிதி | மூதவை பிரதிநிதி |
| கலாநிதி.எஸ்.அறிவழகன் | மூதவை பிரதிநிதி |
| திருமதி.எஸ்.மோகநாதன் | பேரவை நியமன உறுப்பினர் |
| பொறி.என்.ஸ்ரீஸ்கந்தராஜா | பேரவை நியமன உறுப்பினர் |
| திரு.கே.பொகிந்திரன் | செயலாளர |

## 19.6 ஏனைய குழுக்கள்

| வரி. இல: | குழுக்களின் பெயர் | உறுப்பினர் எண்ணிக்கை | கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | மூலோபாய முகாமைத்துவ திட்ட குழு உறுப்பினர்கள் | 11 | 03 |
| 02 | வெள்ளி விழா குழு உறுப்பினர்கள் | 12 | 10 |
| 03 | விசாரணை குழு உறுப்பினர்கள் | 03 | 06 |
| 04 | நிறுவன மீளாய்வு குழு உறுப்பினர்கள்<br>• பிரதான குழு<br><br>உப குழுக்கள்<br>• ஆளுகை மற்றும் முகாமைத்துவம்<br>• பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி<br>• கற்றல் மற்றும் கற்பித்தல்<br>• கற்றல் வளங்கள், மாணவர் ஆதரவு மற்றும் முன்னேற்றம்<br>• மாணவர் மதிப்பீடு மற்றும் விருதுகள்<br>• ஊழியர் பலம் மற்றும் தரம்<br>• பட்டப்பின் கற்கைகள், ஆராய்ச்சி மற்றும் கண்டுப்பிடிப்பு<br>• சமூக ஈடுபாடு, ஆலோசனை மற்றும் எல்லை<br>• தர உத்தரவாதம் | 3<br><br>12<br>07<br>05<br>06<br>05<br>08<br>04<br>02<br>03 | 16 |
| 05 | VCIRS குழு உறுப்பினர்கள் | 12 | 19 |
| 06 | விளையாட்டு ஆலோசனை சபை குழு உறுப்பினர்கள் | 08 | 03 |
| 07 | செய்தித் தாள் குழு உறுப்பினர்கள் | 09 | 01 |
| 08 | தொழில் கண்காட்சி குழு உறுப்பினர்கள் | 15 | 05 |
| 09 | கட்டிட குழு உறுப்பினர்கள் | 06 | 05 |

## 19.7 சீர்திருத்தங்கள்

### 19.7.1 வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 969ஆவது கூட்டம் 03 ஆகஸ்ட் 2017 அன்று இடம்பெற்ற நிலையில், அதிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட வவுனியா வளாகத்தை முழுமையாக பூரணமடைந்த ஒரு பல்கலைக்கழகமாக வன்னிப் பல்கலைக்கழகம் என தரமுயர்த்தும் முன்மொழிவானது ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

### 19.7.2 பீடங்கள் மற்றும் துறைகளின் தாபிப்பு

| தாபிப்பு | விபரம் | நிலைமை |
|---|---|---|
| மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம் | முன்மொழிவுவானது வளாக சபையினால் 14 செப்தெம்பர் 2017 அன்று இடம்பெற்ற அதனது 211வது கூட்டத்திலும் 17 ஒக்தோபர் 2017 அன்று இடம்பெற்ற மூதவையின் 17வது கூட்டத்திலும் பரிந்துரை செய்யப்பட்டது. | மூதவையின் கருத்துக்களுடன் முன்மொழிவு பின்னர் திருத்தியமைக் கப்பட்டது. |
| தொழில்நுட்ப கற்கைகள் பீடம் | 02 நவம்பர் 2017 அன்று இடம்பெற்ற வளாக சபையின் 213வது கூட்டத்தில் திருத்தியமைக்கப்பட்ட முன்மொழிவை அபிவிருத்தி செய்யசென குழுவொன்று நியமிக்கப்பட்டது. குழுவானது தனது வேலைகளை ஆரம்பித்துள்ளது. | |
| ஆங்கில மொழி கற்பித்தல் துறை | முன்மொழிவானது உயர்கல்வியின் நியதிச்சட்ட பிரிவுகளின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டதுடன் இறுதியாக ஆங்கில மொழி கற்பித்தல் அலகு (ELTU) ஆங்கில மொழி கற்பித்தல் துறையாக (DELT) 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டமூலத்தின் 27(1) பிரிவின்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பரிந்துரை செய்த நிலையில் குறித்த சட்டமூலத்தின் பிரிவு 22இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட தரமுயர்த்தும் கட்டளை அட்டவனையை திருத்தியது. அது 18 நவம்பர் 2017 அன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. | |

### 19.7.3 நிகழ்வுகள்

| விபரம் | நிலைமை |
|---|---|
| புதிய துணை வேந்தரின் முதல் வருகை | 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14 ஆம் திகதி, பம்பைமடுவில் உள்ள தொழில்நுட்ப துறைக்கான புதிய கட்டிட வளாகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக கற்கை பகுதி மற்றும் விடுதி பகுதியில் இரண்டு நீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் (RO) திறந்து வைக்கப்பட்டன. அத்தோடு புதிய விளையாட்டு கட்டிட தொகுதியும் திறந்து வைக்கப்பட்டது. |
| செய்தித்தாள் | 2017 ஜனவரி தொடக்கம் ஜுன் வரையான காலப்பகுதிக்கான செய்தித்தாள் 2017 தொகுதி 02 வெளியீடு 01 வவுனியா வளாகத்தால் வெளியிடப்பட்டது. மாணவர்களுடன் தொடர்புடைய வளாக, பீட, துறைகள் மற்றும் அலகுகளின் அனைத்து முக்கியமான நிகழ்வுகளும் இதில் பதிப்பிக்கப்பட்டன. இது வெள்ளி விழா கொண்டாட்ட நாளில் வெளியிடப்பட்டது. |
| ஹெக்கின்றா –கருத்தரங்கு (Hackintra) | ”Twist N Turns” 2017 மற்றும் Hackintra – 2017 கருத்தரங்கு 7 மற்றும் 8 ஒக்தோபர் 2017ல் இடம்பெற்றது. |

| | |
|---|---|
| வெள்ளி விழா கொண்டாட்டம் | வவுனியா வளாகம் தனது வெள்ளி விழாவை 17 ஆகஸ்ட் 2017 அன்று கொண்டாடியது. கௌரவ. லக்ஸ்மன் கிரியெல்ல, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் பேரா.மொஹான் த சில்வா, தவிசாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் துணை வேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பல்வேறு விருந்தினர்கள் மற்றும் பங்காளர்கள் கொண்டாட்டத்தில் இணைந்து கொண்டனர். குறித்த தினத்தில் உயர்கல்வி அமைச்சரால் வவுனியா வளாகம் வன்னிப் பல்கலைக்கழகம் என சுயாதீனமான ஒரு பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டது. |
| Cisco வலைத்தள அக்கடமி அறிமுகக் கூட்டம் | 24 ஒக்தோபர் 2017 அன்று வவுனியா வளாகத்தில் நடைபெற்றது. செல்வி.கல்ஹாரி களுஆராச்சி, திட்ட முகாமையாளர், Cisco இலங்கை அவர்கள் Cisco வலைத்தள அக்கடமியின் தொழில் வழிகாட்டல் திட்டங்கள் பற்றியும் அதனால் மாணவர்கள் அடையும் நன்மைகள் பற்றியும் அமர்வொன்றை நடாத்தினார். |
| நினைவுப் பேருரை | காலஞ்சென்ற கலாநிதி.என். பாலகிருஸ்ணன் - வவுனியா வளாகத்தின் முதலாவது வளாக முதல்வர் அவர்களுக்கான நினைவுப் பேருரை 14 ஜுன் 2017 அன்று இடம்பெற்றது.இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக வணிகம் மற்றும் முகாமைத்துவ பீட, பொருளியல் துறை, சிரேஸ்ட விரிவுரையாளர், கலாநிதி.டி.பவன் அவர்களால் ‘‘மனிதவள மூலதனம் ஒரு வெற்றிகரமான பொருளாதாரத்தின் ஒரு நம்பிக்கைக்குரிய முக்கிய திறவுகோள்’’ எனும் தலைப்பில் விரிவுரையொன்றை வழங்கினார். |
| காலஞ்சென்ற கலாநிதி.என். பாலகிருஸ்ணன் தங்கப்பதக்கம் | காலஞ்சென்ற கலாநிதி.என். பாலகிருஸ்ணன் தங்கப்பதக்கத்தை வருடாந்த பட்டமளிப்பு விழாவில் வழங்குவதற்கென ஒரு அறக்கட்டளை தாபிக்கப்பட்டது. முதலாவது தங்கப்பதக்கத்தை வணிக பொருளியல் விசேட பட்டத்தில் சிறந்த செயல்தினை வெளிப்படுத்தியமைக்காக செல்வி.ஜி.வை.என். குணதிலக அவர்கள் 2017 திசெம்பர் 08ஆம் திகதி இடம்பெற்ற 33வது பட்டமளிப்பு விழாவில் பெற்றுக்கொண்டார். |
| இளைஞர் தலைமைத்துவ மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 2017 ம் ஆண்டு வவுனியா மாவட்டத்தில் சமூக அபிவிருத்திக்கு இளைஞர் தலைமைத்துவ மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றை வவுனியா வளாகத்தின் கைத்தொழில் சமுதாய ஊடாடும் அலகு (ICICVC) நடாத்தியதுடன், அதில் 35 மாணவர்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்ததுடன் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர். |
| Link Nature (Pvt)Ltd ற்கு கள விஜயம் | வணிக கற்கைகள் பீட 3ம் வருட மாணவர்கள் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி Link Nature Production (Pvt) Ltd ற்கு கள விஜயம் மேற்கொண்டதுடன் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி சிறியளவிலான தொழில்முனைவோர்களை சந்தித்துக் கலந்துரையாடவென புத்தளத்திற்கு விஜயம் செய்தனர். கள விஜயத்தில் மாணவர்கள், தொழில் முனைவோர் நடவடிக்கைகள், சிறப்பியல்புகள், தொழிலதிபர்களின் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு, மற்றும் தொழில்முனைவோர் மத்தியில் வேறுபாடுகள் போன்றவற்றை அடையாளம் கண்டறிந்துள்ளனர். மேலும் அவர்கள், குடும்ப வணிகம், |

| | |
|---|---|
| | பெண் தொழில்முனைவோர் மற்றும் அவர்களது வணிகத்தில் அவர்களது கலாச்சார செலுத்தும் தாக்கத்தையும் கற்றறிந்தனர். |
| தொழில் கண்காட்சி - 2017 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் நவம்பர் 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் வவுனியா வளாகத்தின் பம்பைமடு வளாகத்தில் தொழில் கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த வேலைவாய்ப்பின் நோக்கம் வருங்கால முதலாளிகளை ஒரே இடத்தில் கொண்டு வருவதோடு, மாணவர்கள் / முன்னாள் மாணவர்கள் மற்றும் சமுதாய உறுப்பினர்களுக்கு முதலாளிகளுடன் தொடர்புகொண்டு அவர்களின் எதிர்கால வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதாகும். |
| வர்ண இரவு | வர்ண இரவு - 2016 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 16 திசெம்பர் 2017ல் இடம்பெற்றது. வவுனியா வளாகத்தின் மாணவர்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீட மாணவன் எச்.ஆர்.வி.சி. செனவிரத்ன, பூப்பந்து விளையாட்டிற்கு முழு வர்ண விருதையும் வவுனியா வளாகத்தின் வணிக கற்கைகள் பீட மாணவன் ஆர்.ருக்ஸ்மன் கிறிக்கற் விளையாட்டிற்கு முழு வர்ண விருதையும் பெற்றுக்கொண்டனர். |
| மன்னார் UNOPS திட்ட தளங்களுக்கான கள விஜயம் | உண்மையான திட்ட தளங்களை வெளிக்காட்டவும் வெற்றிகரமான பயிற்சியாளர்களிடமிருந்து மாணவர்கள் கற்றுக்கொள்ளவுமான நோக்கத்தில் வணிக கற்கைகள் பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களுக்கான கள விஜயமொன்று 21 செப்டம்பர் 2017 அன்று ஒழுங்குசெய்யப்பட்டது.<br><br>அப்போது மன்னார் UNOPS திட்ட பொறியியலாளர் திரு. அனுதர்சன் அவர்கள் புயல் நீர் வடிகால் அமைப்புகள் பற்றிய கருத்தரங்கொன்றை மேற்கொண்டார். அத்தோடு மன்னாரில் UNOPS திட்டங்கள், எவ்வாறு வடிகாலமைப்பு பற்றிய சிந்தனை ஏற்பட்டது, திட்ட பங்காளர்கள் யாவர், எவ்வாறான வழிகளில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன, திட்டங்களை வெற்றிகரமாக எப்படி மதிப்பிடப்படுகின்றது, இதை செயல்படுத்தும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது எதிர்கால திட்டங்கள் போன்றனவும் தெளிவுபடுத்தப்பட்டன.<br>அதே நேரம், எதரின் சமுதாய அங்கத்தினர் மன்னார் நகரிலுள்ள கழுதைகள் மற்றும் உயிர் தாவரம் பற்றி சில சுவாரஸ்யமான கதைகளையும் சொன்னார். மாணவர்களின் அறிவையும் திறமையையும் திட்ட முகாமைத்துவ முறையில் வளர்க்க இவ் விஜயம் உதவியது. |
| மாணவர்களுக்கான ஆங்கில கல்விசார் எழுத்தாக்கத்திற்கு அறிமுகம் | “மாணவர்களுக்கான ஆங்கில கல்விசார் எழுத்தாக்கத்திற்கு அறிமுகம்” பற்றிய செயலமர்வொன்று Trinidad Hernandus, ஆங்கில மொழி விரிவுரையாளர், மாநிலங்களின் துறை, USA அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இது வவுனியா வளாகத்தின் ELTU ஆல் 18 மே 2017 அன்று பீடத்தின் மூன்றாம் வருட மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டது. |

| | |
|---|---|
| பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு விஜயம் செய்தல் | பரிவர்த்தனை நிறுவனத்திற்கு (SEC) பங்குகளை வர்த்தகம் செய்வதற்கான நடைமுறை அறிவை வளமாக்கும் வகையில் 26 மே 2017 அன்று விஜயம் மேற்கொள்ளப்பட்டது. |
| வணிக கற்கைகள் பீடத்தில் CMIC | பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (SEC) மூலதன சந்தை கல்வி மற்றும் பயிற்சி (CMET) வணிக கற்கைகள் பீடத்துடன் இணைந்து 22 பெப்ரவரி 2017 அன்று மூலதன சந்தை தகவல் நிலையத்தை (CMIC) திறந்து வைத்தது. இது இலங்கை பங்குச் சந்தையுடன் தொடர்புடைய சமகால தகவல்களை மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இலகுவில் பெற்றுக்கொள்ள வழிசமைக்கின்றது. |

### 19.7.4 சமுதாய மேம்பாட்டு நடவடிக்கைகள்

| விபரம் | நிலைமை |
|---|---|
| ஆங்கில மொழி கற்பித்தல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம் தெரிவு செய்யப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் அல்லாதோருக்கு மேம்படுத்தப்பட்ட ஆங்கில பயிற்சியினை வழங்குகின்றது. இதற்கான நிதி CHILDFUND ஆல் அளிக்கப்படுகின்றது. இப் பாடநெறி 8 ஏப்ரில் 2017 ஆரம்பித்து 29 ஒக்தோபர் 2017ல் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. குறித்த பாடநெறி ஆறு மாத காலத்திற்கு தொடர்ந்தது. |
| **வெள்ள நிவாரணத்திற்கான நன்கொடை** (வணிக கற்கைகள் பீடம்) | வணிக கற்கைகள் பீட மாணவர் ஒன்றியம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மற்றும் கலவான பகுதிகளுக்கு நேரடியாக சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு 03 ஜுன் 2017 அன்று ஆதரவளித்தனர்.<br><br>ரூ. 200,000.00 மதிப்புள்ள உலர் உணவுகள், சுகாதார பொருட்கள், மருந்துகள், எழுதுகருவிகள் மற்றும் ஆடைகள் 500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. |
| பிரயோக விஞ்ஞான பீடம் | பிரயோக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினர் இருநூறு புத்தகப் பைகள் மற்றும் அப்பியாச புத்தகங்களை கம்புரவல மகா வித்தியாலய மாணவர்களுக்கு 06 ஜுன் 2017 அன்று அன்பளிப்பு செய்தனர். |
| வவுனியா வளாக ஊழியர் சங்கம் | வவுனியா வளாகத்தின் ஊழியர் சங்கம் ரூபா.106,975.00 பெறுமதியான புத்தகப் பைகள் மற்றும் காகிதாதிகளை ஊவா மாகாண பிள்ளைகளுக்கு ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சூரியன் FM ஊடாக வவுனியா வளாக ஊழியர்களின் ஆதரவோடு அன்பளிப்பு செய்தனர். |
| விளக்குடன் நடைபயணம் சென்ற பாதசாரிகளுக்கு புத்துணர்ச்சி உணவு பானங்களை வழங்குதல் | வணிக கற்கைகள் பீட மாணவர்கள் மன்னாரில் இருந்து வவுனியா கல்வாரி தேவாலயத்திற்கு விளக்குடன் நடைபயணம் சென்ற பாதசாரிகளுக்கு புத்துணர்ச்சி உணவு பானங்களை வழங்கும் செயற்பாடென்றை வவுனியா வளாகத்திற்கு முன்னாள் மேற்கொண்டனர். |
| சிரமதானம் | வவுனியா வளாகத்தின் மாணவர் ஒன்றியத்தினர் சிரமதான செயற்திட்டமொன்றை 28 மார்ச் 2017 அன்று வவுனியா பம்பைமடு தேவாலயத்தில் மேற்கொண்டனர். |
| இரத்த தானம் | வவுனியா வளாகத்தின் வணிக கற்கைகள் பீட மாணவர் ஒன்றியத்தினர் இரத்த தான முகாமொன்றை 14 மார்ச் 2017 அன்று பீட வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தனர். இம் முகாமிற்கு 50 குருதிக் கொடையாளர்கள் பங்குபற்றியிருந்தனர். வவுனியா பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியினது தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் பொது வைத்திய நிபுணர்கள் முறையான ஏற்பாடுகளுடன் குறித்த நிகழ்விற்கு ஆதரவளித்தனர். |
| ஐஸ் கிறீம் தன்சல | வவுனியா வளாகத்தின் வணிக கற்கைகள் பீட மூன்றாம் வருட மாணவர்கள் வெசாக் பண்டிகையை முன்னிட்டு வவுனியா விகாரைக்கு அண்மையிலுள்ள மாணவர்களின் ஆதரவுடனும் பங்குபற்றுதலுடனும் ஐஸ் கிறீம் தன்சல ஒன்றை 10 மே 2017 அன்று ஒழுங்கு செய்தனர் அதே தினத்தில், வவுனியா விகாரைக்கு முன்பாக பொது மக்களின் பார்வைக்கென விசேட வெசாக் அலங்காரங்களை ஒழுங்கமைத்திருந்தனர். |

### 19.7.5 கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

| விபரம் | திகதி |
|---|---|
| க.பொ.த உ/த பொது ஆங்கிலத்திற்கான சுருக்கத் திறன் பற்றிய கருத்தரங்கு | 4 மற்றும் 12 மே 2017 |
| க.பொ.த உ/த பொது ஆங்கிலத்திற்கான மொழி கட்டமைப்பு பற்றிய கருத்தரங்கு | 2 மற்றும் 9 நவம்பர் 2017 |
| தொழில் வழிகாட்டல் பற்றிய கருத்தரங்கு | நேஷன் ட்ரஸ்ட் வங்கி (NTB) |
| பள்ளி மாணவர்களுக்கான பாலியல் துன்புறுத்தல் பற்றிய செயலமர்வு | 2 ஒக்தோபர் 2017. |
| IELTS பற்றிய திறந்த கருத்தரங்கு | மார்ச் 15, 2017 |
| மருத்துவமனை கழிவு முகாமைத்துவ ஆய்வு -2017 | 2017ல் |
| டெங்கு ஒழிப்பு பிரச்சாரம் - 2017 | (2017 மார்ச் மற்றும் ஏப்ரில் மாதங்களில்) |
| மாநகரசபை திண்மக் கழிவு முகாமைத்துவம் | 18.07.2017 |
| ஆக்கிரமிப்பு ஏலியன் இனங்கள் | 10 மார்ச் 2017 |
| மழைநீர் சேகரிப்பு | 19 திசெம்பர் 2016 |
| செயற்படு குடியுரிமை | 25 ஜனவரி 2017 |
| தர உத்தரவாதம் மற்றும் விரிவாக்கம் | 30 ஆகஸ்ட் 2017 |
| பதின்மபருவத்திற்கான பாதை | 13 செப்தெம்பர் 2017 |

### 19.7.6 விளையாட்டு நடவடிக்கைகள்

புதிதாக நிறுவப்பட்ட விளையாட்டு வளாகம் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி பம்பைமடுவில் வளாக விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் திறக்கப்பட்டது. வளாக மாணவர்கள் தங்களது விளையாட்டு திறன்களை விளையாட்டு வளாகத்தில் வெளிப்படுத்தி வருகின்றனர்.

வளாக நிர்வாகம் பின்வரும் விடயங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

- துடுப்பாட்டத் திடலின் மீள் நிர்மானம்
- துடுப்பாட்ட மைதானத்திற்கான பக்க திரை
- துடுப்பாட்ட வன்பந்து திடலுக்கான பாய்விரிப்பு
- துடுப்பாட்டப் பயிற்சி முற்றத்தின் கட்டுமானம்
- துடுப்பாட்டப் பயிற்சி முற்றத்திற்கு 4 குவிய விளக்குகளை (LED) பொருத்தி வெளிச்ச வசதிகளை வழங்குதல்.

| நடவடிக்கைகள் | திகதி | நிலைமை |
|---|---|---|
| சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி | 5 மார்ச் 2017 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம் மற்றும் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம். கிழக்குப் பல்கலைக்கழகம் 49 பந்து பரிமாற்றங்களில் 235/7 என இலக்கை எட்டியதுடன் வெற்றியையும் தனதாக்கியது. |
| பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகள் | 10 ஜுன் 16, 2017 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜ.புர பல்கலைக்கழகம் ஆகியன போட்டியிட்டன. பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகள் - 2017 ஆனது 2017 ஒக்தோபர் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் இடம்பெற்றது. திரு.டீ.பி.எப். சிந்தக ஒபயசேகர "டேக்வாண்டோ சண்டையில்" முதலிடத்தையும் "டேக்வாண்டோ கட்டாவில்" மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். |

| | | |
|---|---|---|
| பீடங்களுக்கிடையிலான புதுமுக மாணவர்களுக்கான போட்டிகள் | மார்ச் மற்றும் ஒக்தோபர் 2017 | மேசைப் பந்து (ஆண், மூன்றாம் இடம்) மற்றும் வலைபந்து (மூன்றாம் இடம்)<br>முதலாமிடம் |
| பீடங்களுக்கிடையிலான பூப்பந்து போட்டி<br>(வணிக கற்கைகள் பீடம்) | 6 மற்றும் 7 மே 2017 | வவுனியா வளாகத்தின் பதினைந்து மாணவர்கள் போட்டியில் பங்குபற்றினர். பிரயோக விஞ்ஞான பீடம் இரண்டாம் இடத்தையும் வணிக கற்கைகள் பீடம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். அத்தோடு பிரயோக விஞ்ஞான பீடம் பீடங்களுக்கிடையிலான சதுரங்க போட்டியில் (ஆண்) மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டனர். |
| பீடங்களுக்கிடையிலான புதுமுக மாணவர்களுக்கான எல்லே போட்டிகள்<br>(பிரயோக விஞ்ஞான பீடம்) | 27 மே 2017, மற்றும் 13 ஆகஸ்ட் 2017 | எல்லே (ஆண், இரண்டாம் இடம்), (பெண் மூன்றாம் இடம்) மற்றும் கேரம் (ஆண், இரண்டாம் இடம்) |
| தேசிய இளைஞர் மென்பொருள் போட்டி | 28 மற்றும் 29 ஒக்தோபர் 2017 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக, பிரயோக விஞ்ஞான பீடத்தின் ‘Psycoders’ அணி, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் UNV இலங்கை ஆகியவற்றின் உதவியுடன் Dialog மற்றும் Ideamart உடன் இணைந்து UNDP ஏற்பாடு செய்த “HackaDev 3.0 தேசிய இளைஞர் மென்பொருள் போட்டியில்” இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டனர். |

### 19.7.7 அழகியற் செயல்பாடுகள்

கிட்டார், வயலின், ஓகன், டிஜிற்றல் புகைப்படக்கருவி, ஒலிபெருக்கி, ஒலி அமைப்பு மற்றும் ஒலிவாங்கி என்பவற்றை கொள்வனவு செய்யவென 2017 ஆகஸ்ட் மாதம் ரூபா. 700,000.00 உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சினால் வவுனியா வாகத்திற்கு வழங்கப்பட்டது.

### 19.7.8 தகவல் தொழில்நுட்ப நிலையம்

Ms Office/ மென்பொருள் பிரயோகத்தில் தீவிர பயிற்சி பாடநெறி

2017 பெப்ரவரியில் தகவல் தொடர்பாடல் நிலையம் Ms Office மென்பொருள் பிரயோகத்தில தீவிர பயிற்சி பாடநெறியை ஆரம்பித்தது. இதற்கான வரவுசெலவு திட்டம் 28.12.2015 அன்று இடம்பெற்ற பேரவையின் 405ஆவது கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வவுனியா வளாகத்தின் உள்ளக சுற்று வீதியில் அமைந்துள்ள ஆய்வுகூடத்தில் 02.03.2017 அன்று ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிக்கு 26 பேர் பதிவுசெய்திருந்தனர். பரீட்சைக்கு தோற்றிய 13 மாணவர்களில் 11 பேர் பாடநெறியை நிறைவுசெய்தனர்.

### 19.7.9 வேலைவாய்ப்பு

இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் அதிக கவனம் செலுத்தும் பகுதிகளில் வேலைவாய்ப்பு முக்கியமாகின்றது. அதாவது இலங்கை பல்கலைக்கழக முறைமையிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளிடமிருந்து தேவையான திறன்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. கீழ்வரும் வரைபு 2017 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் 194 பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு பற்றிய விபரத்தை காட்டுகின்றது




## 19.8 உத்தியோகத்தர் மேம்பாட்டு மையம்

| நிகழ்ச்சித் திட்டம் | திகதி | வளவாளர் | இலக்கு குழு |
|---|---|---|---|
| "பல்கலைக்கழக முறைமையில் அலுவலக நிர்வாகம் மற்றும் ஒழுங்குவிதிகள்" | 31 மே 2017 | திரு.கே.பொகீந்திரன் (பிரதிப் பதிவாளர்) | வவுனியா வளாகத்தின் சிற்றூழியர்கள் |
| மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி | 13 ஜுன் 2017 | வைத்திய கலாநிதி.எஸ். சிவதாஸ் (ஆலோசகர் மனநல மருத்துவர்) | வவுனியா வளாகத்தின் கல்விசார், கல்விசாரா மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் |
| "நிலைமாறுகால நீதி மற்றும் ஜெனீவா தீர்மானம்" | 27 செப்தெம்பர் 2017 | பேரா.எம்.மூக்கையா (முன்னாள் துணைவேந்தர்-கிழக்குப் பல்கலைக்கழகம்), திரு.கே.ஜங்கரன் (சட்டத்தரணி), திரு.சாந்த டீ.பத்திரன (சிரேஸ்ட திட்ட அதிகாரி NPC) | வவுனியா வளாகத்தின் கல்விசார் ஊழியர்கள் |
| தலைமைத்துவ திறன்கள் | 29 நவம்பர் 2017 | திரு.ஆர். ஜெயக்குமார் (சி.உ.ப. பரீட்சைகள், வவுனியா வளாகம்) | வவுனியா வளாகத்தின் கல்விசாரா நிரந்தர ஊழியர்கள் |

| | | | |
|---|---|---|---|
| ஊழியர் திசைமுகப்படுத்தல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 28 ஜுன் 2017 | கலாநிதி.பூங்கோதை செல்வராஜன் (பணிப்பாளர், SDC, வவுனியா வளாகம்) | வவுனியா வளாகத்தின் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கல்விசார், கல்விசாரா மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் |

## 19.9 நிறுவன பெறுபேறுகள் கட்டமைப்பு (ORF)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு அரசிற்கு சொந்தமான தொழில் நிறுவனங்களின் (SOEs) நிறுவன முடிவுகளின் கட்டமைப்பு (ORF) அபிவிருத்திக்கான வழிகாட்டலை 06 நவம்பர் 2015 அன்று அனுப்பியது. திட்ட முகாமைத்துவ திணைக்களமானது அனைத்து SOE களினதும் காலாண்டு செயல்திறனை கண்காணிப்பதற்கும் அவற்றினது முன்னேற்றங்கள் மற்றும் பெறுபேறுகளை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கவென நியமிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினர் தங்களது இனை திட்ட முகாமைத்துவ கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் சமர்ப்பிக்கின்றது. அது வவுனியா வளாகத்தின் இலக்குகள் மற்றும் ஒட்டுமொத்த செயல்திறனை காண உதவியாகவுள்ள நிலையில் திட்ட முகாமைத்துவ கண்காணிப்பு திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான ORF ற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (தயவுசெய்து இணைப்பு 22.2 ஐ பார்க்கவும்)

வவுனியா வளாகம் திட்ட முகாமைத்துவ கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து 2016 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற சாதனைகளின் விடயங்களுக்காக பின்னூட்டங்களை பெற்றுக்கொண்டுள்ளதுடன் அவை பின்வருமாறு அமைகிள்றன:

i. ORF இன் 03 உந்துதல் பகுதிகளின் கீழ் 06 விளைவுகள் மற்றும் 10 வெளியீடுகள் உள்ளன. 2016ஆம் ஆண்டில் அனைத்து உந்துதல் பகுதிகள் ஊடாகவும் அடையப்பெற்ற சாதனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ii. அனைத்து வெளியீடு மற்றும் வெளியீட்டு இலக்குகள் ***கற்றல் மற்றும் கற்பித்தல் நிபுணத்துவத்தை அடைந்துள்ளது அதிகளவான பட்டதாரிகள் தனியார் துறையில் நிறைவேற்று தரங்களில் பணிபுரிகின்றனர்*** என்பதுடன் தொடர்புபடுகின்றன. இதன்படி தனியார் துறையில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க, பின்வருவன போன்ற பொருத்தமான வசதித் திட்டங்களை மேற்கொண்டுச் செல்ல பரிந்துரைக்கப்படுகிறது: முன்னணி நிறுவனங்களில் இளங்கலை பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு: வளாகத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் பொருத்தமான வேலை: திறன்கள் மற்றும் நடத்தை மேம்பாட்டுத் திட்டங்கள், போன்றவை.

iii. ***உந்துதல் பகுதி – 2 (ஆராய்ச்சி மற்றும் பரவல்)*** கீழான இலக்குகள் ***பகுதியளவில் அடையப்பட்டுள்ளன.*** ஆய்வுக் கட்டுரை வாசித்தலுடன் தொடர்புடைய 02 வெளியீட்டு இலக்குகள் மற்றும் இலக்கு ஆராய்ச்சிகளை பெற்றுக்கொள்ளுதலின் செயல்திறன் முழுமையாக அடையப்பட்டாலும் 50% ஆனஇலக்கு ஆராய்ச்சிகள் மட்டுமே வணிகமயமாக்கப்பட்டிருக்கின்றன. இவ் உந்துதல் பகுதியின் கீழ் ஒட்டுமொத்த சாதனைகளும் திருப்திகரமானது.

iv. சமுதாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய சாதனைகள் ***(உந்துதல் பகுதி - 3) உம் திருப்திகரமானது.***

ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளை அடைவதற்கான உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் சாதனைகளை கண்காணிப்பதற்கான தங்களது ஒத்துழைப்பு பெரிதும் பாராட்டப்படுகிறது.

**நிகழ்ச்சித் திட்ட மீளாய்வு – 2018**

வியாபார கற்கைகள் பீடத்தின் உள்ளக தர உத்தரவாத அலகு இரு பீடங்களினதும் ஊழியர்களுக்கான நிறுவன மீளாய்வு மற்றும் நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு தொடர்பிலான செயலமர்வொன்று 31 ஆகஸ்ட் 2017 அன்று ஏற்பாடு செய்திருந்தது. IQAU இணைப்பாளர் பேராசிரியர் ரி.மிகுந்தன் இதன் வளவாளராக கலந்து கொண்டார்.

## 19.11. தகவல் அறியும் உரிமை(RTI)

வவுனியா மாவட்ட அலுவலகத்தினால் 2017 செப்தெம்பர் 11ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்டு இடம்பெற்ற "தகவல் அறியும் உரிமை சட்டம் - 2017" செயலமர்விற்கு வணிக கற்கைகள் பீட, உதவி பதிவாளர், செல்வி.எஸ்.டனோஷனா பங்குபற்றினார். இச் செயலமர்வின் பிரதான குறிக்கோளானது, 2017 பெப்ரவரி மாதம் நடைமுறைப்படுத்தப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டம் பற்றி ஒவ்வொரு திணைக்களத்தையும் தெளிவுபடுத்தல் மற்றும் துறை வாரியாக இச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத் தன்மை என்பனவாகும்.

## 19.10 வவுனியா வளாகத்தின் அமைப்பு வரைபடம்

**ORGANOGRAM OF THE VAVUNIYA CAMPUS**




DR – *Deputy Registrar*, AR – *Assistant Registrar*, DB- *Deputy Bursar*, AB –*Assistant Bursar*, SAL- *Senior Assistant Librarian*, SSS- *Students & Staff Service*, SDC- *Staff Development Centre*, CGU- *Carrier Guidance Unit*

### 19.11 விரிவான சனத்தொகை

| | பீடம் | பாடநெறி | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | கல்விசார் ஊழியர்களின் எண்ணிக்கை | | | கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிரந்தரம் | தற்காலிகம் | ஆதரவு | |
| வவுனியா வளாகம் | பிரயோக விஞ்ஞான பீடம் | சூழலியல் விஞ்ஞானம் | 90 | 11 | 03 | Nil | 07 |
| | | பிரயோக கணிதம் மற்றும் கணினி | 118 | 08 | 04 | 02 | 04 |
| | | B.Sc in ICT | 17 | 08 | 05 | 03 | 04 |
| | | B.ICT | 184 | 02 | 05 | - | 02 |
| | | ICT (தொழில்நுட்ப துறை) | 72 | - | - | - | - |
| | வணிக கற்கைகள் பீடம் | BBM | 290 | - | - | - | - |
| | | நிதியியல் மற்றும் கணக்கியல் | 14 | 05 | - | - | 01 |
| | | பொருளியல் மற்றும் முகாமைத்துவம் | 29 | 13 | 03 | - | 01 |
| | | திட்ட முகாமைத்துவம் | 77 | - | - | - | - |
| | சுய நிதியிடல் பாடநெறிகள்: | | | | | | |
| | பிரயோக விஞ்ஞான பீடம் | | - | - | - | - | - |
| | வணிக கற்கைகள் பீடம் | | - | - | - | - | - |
| | உடற் கல்வி | | - | - | - | 01 | 01 |
| | ELTU | | - | 02 | 01 | - | 02 |
| வவுனியா வளாகத்தின் சேவை அலகுகள் | ஏனையவை | | | | | | |
| | ELTU | ஆங்கிலத்தில் சான்றிதழ் | - | - | - | - | - |
| | | ஆங்கிலத்தில் டிப்ளோமா | - | - | - | - | - |
| | | | - | - | - | - | - |
| | IT நிலையம் | | - | - | - | - | - |
| | நூலகம் | | - | 01 | - | - | 06 |
| **மொத்தம்** | | | **891** | **50** | **21** | **06** | **28** |

19.12 உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள்-2017

| பீடம் | | பாடநெறி | மொழி ஊடகம் | 2017ல் ஆட்சேர்ப்பு | வருடம் | | | | | 2017ல் பட்டம் பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1வது | 2வது | 3வது | 4வது | 5வது | |
| வவுனியா வளாகம் | பிரயோக விஞ்ஞானம் | பிரயோக கணிதம் மற்றும் கணினி | ஆங்கிலம் | 50 | 41 | 37 | 37 | - | - | 16 |
| | | B.Sc. கணினி விஞ்ஞானம் (சிறப்பு) | ஆங்கிலம் | | - | - | - | 03 | - | 03 |
| | | B.Sc. (சூழலியல் விஞ்ஞானம்) | ஆங்கிலம் | 50 | 26 | 26 | 30 | - | - | 09 |
| | | B.Sc. சூழலியல் விஞ்ஞானம் | ஆங்கிலம் | | - | - | - | 07 | - | 09 |
| | | BICT | ஆங்கிலம் | 75 | 61 | 60 | 60 | - | - | 31 |
| | | B.Sc. in ICT | ஆங்கிலம் | | - | - | - | 17 | - | 16 |
| | | ICT (தொழில்நுட்ப துறை) | ஆங்கிலம் | 75 | 72 | - | - | - | - | - |
| | வணிக கற்கைகள் | B.B.M | ஆங்கிலம் | 100 | 98 | 99 | 93 | 43 | - | 110 |
| | | B.P.M | ஆங்கிலம் | 50 | 40 | 37 | - | - | - | - |
| மொத்தம் | | | | **400** | **338** | **259** | **220** | **70** | **-** | **194** |

## 19.13 கல்விசார் மற்றும் கல்விசார் ஆதரவு உத்தியோகத்தர்களின் விபரங்கள்

| துறை | கல்விசார் ஊழியர்கள் | | | | | | கல்விசார் ஆதரவு ஊழியர் டியுடர் / போதனாசிரியர் |
|---|---|---|---|---|---|---|---|
| | சிரேஸ்ட பேராசிரியர் / பேராசிரியர் | இணை பேராசிரியர் | சிரேஸ்ட விரிவுரை யாளர் | விரிவுரையாளர் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | தற்காலிக. செய்முறையாளர் / தற்காலிக. உதவி விரிவுரையாளர் | |
| உயிர் விஞ்ஞானம் | - | - | 05 | - | 06 | 03 | - |
| பௌதீக விஞ்ஞானம் | - | - | 06 | 01 | 11 | 13 | 05 |
| நிதி மற்றும் கணக்கியல் | - | - | 03 | 01 | 01 | - | - |
| பொருளியல் மற்றும் முகாமைத்துவம் | - | - | 07 | 02 | 04 | 04 | - |
| நூலகம் | - | - | 01 | - | - | - | - |
| ஆங்கில மொழி கற்பித்தல் அலகு | - | - | 02 | - | - | 02 | - |
| மாணவர் மற்றும் உத்தியோகத்தர் சேவை | - | - | - | - | - | - | 01 |
| **மொத்தம்** | **-** | **-** | **24** | **04** | **22** | **22** | **06** |

## 19.14 நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத்தரமல்லாத ஊழியர்களின் விபரங்கள்

| பீடம் / கிளை | நிர்வாக ஊழியர்கள் | | | நிர்வாகமல்லா ஊழியர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அதி சிரேஸ்ட | சிரேஸ்ட | கனிஸ்ட | அதி சிரேஸ்ட | சிரேஸ்ட | கனிஸ்ட | கீழ்நிலை |
| பொது நிர்வாகம் | - | - | - | - | - | 1 | 2 |
| தாபனம் | 1 | - | - | - | 1 | 2 | 2 |
| பரீட்சை மற்றும் மாணவர் சேவைகள் | - | 1 | 1 | - | 1 | 4 | 2 |
| போக்குவரத்து | - | - | - | - | - | - | 3 |
| நிதியியல் நிர்வாகம் | - | - | 2 | - | 1 | 6 | 1 |
| நூலக சேவைகள் | - | - | - | - | 1 | 2 | 3 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | - | - | 1 | - | 4 | 6 | 11 |
| வணிக கற்கைகள் பீடம் | - | - | 1 | - | - | 2 | 4 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பராமரிப்பு | - | - | 1 | - | 1 | - | 8 |
| துணை சேவைகள் (விடுதிகள்) | - | - | - | - | - | 1 | 1 |
| ELTU | - | - | - | - | - | - | 1 |
| SDC | - | - | - | - | - | 3 | - |
| **மொத்தம்** | **1** | **1** | **6** | **-** | **9** | **27** | **38** |

* SAL – 01

## 19.15 உண்மையான மீண்டெழும் செலவு விபரங்கள்

| விடயம் | 2016 (Rs.) | 2017(Rs.) |
|---|---|---|
| தனிப்பட்ட ஊதியங்கள் | 152,516,805.89 | 182,485,876.59 |
| போக்குவரத்து | 333,521.47 | 364,055.00 |
| வழங்கல்கள் | 6,044,105.83 | 8,681,948.60 |
| பராமரிப்பு | 3,230,061.34 | 3,972,583.79 |
| ஒப்பந்த சேவைகள் | 36,709,879.49 | 48,395,549.11 |
| ஏனையவை | 8,411,481.94 | 8,841,349.04 |
| **மொத்தம்** | **207,245,855.96** | **252,741,361.13** |

## 19.16 உண்மையான மூலதன செலவு விபரங்கள்

| விடயம் | 2016 (Rs.) | 2017(Rs.) |
|---|---|---|
| காணி கையகப்படுத்தல் | - | - |
| கட்டிடங்கள் மற்றும் அமைப்புகளை கையகப்படுத்தல் | - | - |
| ஆலை மற்றும் இயந்திரங்களை கையகப்படுத்தல் | - | - |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கையகப்படுத்தல் | 54,877,074.32 | 25,389,434.93 |
| ஏனைய புனர்வாழ்வு வேலைகள் | 11,749,779.29 | 20,026,986.08 |
| **மொத்தம்** | **66,626,853.61** | **45,416,421.01** |

## 19.17 நிதிச் செயற்பாட்டு பகுப்பாய்வு - 2017

| விடயம் | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு |
|---|---|---|
| ஒரு மாணவருக்கான மீண்டுவரும் செலவீனம் (RE) | RE/மாணவர் எண்ணிக்கை | 170,540.72 |
| ஒரு மாணவருக்கான மூலதன செலவீனம் (CE) | CE/மாணவர் எண்ணிக்கை | 30,645.35 |
| **மொத்தம்** | | **201,186.07** |

# 20. பல்கலைக்கழகத்தின் செயற்திறன்

### 20.1.1 யாழ்ப்பாண பிரதான வளாகங்கள்

**நகரமாக்கல் திட்டம்**

திருத்தப்பட்ட நகரமாக்கல் திட்டம் கிளிநொச்சி, வவுனியா மற்றும் யாழ்ப்பாண வளாகங்களுக்காக தயாரிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. மார்ச் 2016ல் தே.தி.தி மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளுக்குமிடையில் கூட்டமொன்று இடம்பெற்ற நிலையில் தேசிய திட்டமிடல் திணைக்களம் நகரமாக்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்த வெளிநாட்டு உதவிகளை தேடித்தருவதாக உறுதியளித்தது. இது தொடர்பில் எந்தவொரு முன்னேற்றமும் 2017ஆம் ஆண்டில் ஏற்படவில்லை.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில்**

இப் பிராந்தியத்தின் கலாசாரம் மற்றும் பாரம்பரியம் வெளிப்படும் வகையில் பிரதான நுளைவாயிலின் கட்டுமானம் அமைக்கப்படுவதற்கான ஒப்பந்தம் மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) நிறுவனத்திற்கு வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் எனும் அடிப்படையில் ரூபா. 25.0 மில்லியனுக்கு வழங்கப்பட்டது. குறித்த வேலைகள் 2017 இறுதியில் நிறைசெய்யப்படும் தறுவாயில் இருந்தது.

**விடுதிகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சினால் 2016ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்பட்ட விடுதித் திட்டம் கட்டம் I, II மற்றும் III இன் கீழ் 8 விடுதிகளை (ஒவ்வொன்றும் 400 மாணவர்கள் தங்குவதற்காக) பெற்றுக்கொண்டது. (பிரதான வளாகத்திற்கு நான்கும் மற்றும் வவுனியா வளாகத்திற்கு இரண்டும் மற்றும் ஏனைய இரண்டும் கிளிநொச்சி வளாகத்திற்கு). குறித்த எட்டு விடுதிகளில் மூன்று 2015ஆம் ஆண்டிலும் மற்றைய மூன்று 2016ஆம் ஆண்டிலும் பூர்த்தி செய்யப்பட்டன.

ஐந்து விடுதிகளுக்கான தொடர்புடைய வேலைகள் யாவும் 2017ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. இவ் எட்டு விடுதிகளுக்கு மேலதிகமாக அமைச்சானது கிளிநொச்சி தொழில்நுட்ப பீடத்திற்கு இரண்டு விடுதிகளை 2016ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒதுக்கீடு செய்துள்ளதுடன் இவ் இரு விடுதிகளினதும் கட்டுமான வேலைகளின் 75% 2017 திசெம்பர் அளவில் நிறைவுசெய்யப்பட்டது. விடுதி வேலைத்திட்டத்தின் கீழ் அதிகப்படியான விடுதிகளை பெற்றுக்கொண்ட பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் காணப்படுவதுடன் இதற்காக உயர்கல்வி அமைச்சிற்கு அது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**பட்டப் படிப்புகள் பீடம்**

2016 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நான்கு அடுக்கு மாடி கட்டிடத்தில் இந்த பீடம் செயல்பட்டு வருகிறது. 2017 ஆம் ஆண்டில் உள்கட்டமைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான தகுந்த நிலத்தைக் கண்டுபிடிப்பதில் இந்த பீடம் ஈடுபட்டிருந்தது.

**முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்**

கட்டிட தொகுதி “C” நிர்மாணம் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. பிளாக் “D & E” க்கான சமநிலை வேலை மத்திய பொறியியல் சேவைகள் பிரைவேட் லிமிடெட் இடம் வழங்கப்பட்டதுடன் வேலைகள் 2017 செப்டம்பர் மாதம் முடிக்கப்பட்டது. M / S லிங்க் பொறியியல் சேவைகள் பிரைவேட் லிமிடெட் இற்கு வழங்கப்பட்டது, 2017 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வேலை முடிவடைந்த 55% ஆகும். முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்திற்கு தொகுதி B இற்கு முழுமையாக செல்ல முடியுமானதோடு, தண்ணீர் தாங்கி, உள்ளக பாதைகள் முடிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் அதனது திட்ட முன்மொழிவுகள் ப.மா.ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிர்வாகமானது முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் எதிர்கால விரிவுபடுத்தலுக்கு தேவையான காணிகளை கண்டறியும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

**கலைப்பீடம்**

கலை பீடத்தின் மூன்று மாடி பரீட்சை மண்டபத்தின் கட்டுமான இரண்டாம் கட்டம் செப்டம்பர் மாதம் 2016ல் வழங்கப்பட்டது. 30 மில்லியன் மற்றும் 80% வேலை டிசம்பர் 2017 ல் நிறைவு செய்யப்பட்டது.

**மருத்துவ பீடம்**

ரூ .700 மில்லியன் மதிப்பீட்டில் பேராசிரியர் அலகிற்கான எட்டு மாடி கட்டிடத்தினை அமைப்பதற்கான அமைச்சரவை ஒப்புதல் 2016 இல் பெறப்பட்டது. அதனை அமைக்க M / S லிங்க் பொறியியல்

(பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் 2017ல் வழங்கப்பட்டது. இது 2018 ஜனவரியில் UDA அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் வேலைகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளது.

**விஞ்ஞான பீடம்**

இயற்கை விஞ்ஞான தொகுதி - படி II கட்டம் 5 கட்டிடத்திற்கான கட்டுமானம் முடிக்கப்பட்டது. இந்த கட்டிடத்தை பயன்படுத்த ஆய்வக தளபாடங்கள் வழங்குவதற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2017 ஆகஸ்ட் மாதத்தில் இரு தரப்பு இணக்கத்துடன் முடக்கப்பட்டது. அத்தோடு இது மீளவும் கேள்வி கோரல் செய்யப்படவும் வேலைகள் 2018ல் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சரவையானது கணினி விஞ்ஞான துறைக்காக மூன்று மாடிக் கட்டிடத்தை அமைப்பதற்கான திட்டத்திற்கு TCEல் ரூபா.240.0 மில்லியனுக்கு 2016 திசெம்பரில் அனுமதியளித்தது. இது 2017 வரவுசெலவு திட்டத்தில் உள்ளடக்கப்படாததால் பல்கலைக்கழகம் இதற்கான கொள்முதலை ஆரம்பிக்க முடியாது காணப்படுகின்றது. 2018ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு திட்டத்தில் போதியளவு நிதி ஒதுக்கப்படுமாக இருப்பின் அடுத்த வருடத்தில் கொள்முதலை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

**சித்த மருத்துவ அலகிற்கான ஐந்து மாடிக் கட்டிடம்**

ஐந்து மாடிக் கட்டிடத்தில் மூன்று மாடிகளின் கட்டுமானம் 2015ல் நிறைவுசெய்யப்பட்டு 29.01.2017ல் சம்பிரதாயபூர்வமாக திறக்கப்பட்டது. நான்காம் மற்றும் ஐந்தாம் மாடிகளுக்கான திட்ட முன்மொழிவுகள் வெகு விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

### 20.1.2 கிளிநொச்சி வளாகங்கள்

**விடுதிகள்**

இரண்டு விடுதிகளின் தொடர்புடைய வேலைகள் ரூபா.20.0 மில்லியன் பெறுமதியில் 2017ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டதுடன் விடுதிக்கான தளபாடங்களுக்கென உயர்கல்வி அமைச்சினால் ரூபா.40.0 மில்லியன் 2017ல் வழங்கப்பட்டது. அத்தோடு அமைச்சானது மேலும் இரு விடுதிகளை கிளிநொச்சி தொழில்நுட்ப பீடத்திற்கென 2016ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் ஒதுக்கீடு செய்ததுடன் அவ்விரு விடுதிகளின் 75 கட்டுமான பணிகள் 2017 திசெம்பரில் நிறைவுசெய்யப்பட்டன.

**உத்தியோகத்தர் குடியிருப்புகள்:**

ரூபா 166.0 மில்லியன் செலவில் ஊழியர் குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்கான ஒரு திட்ட முன்மொழிவு 2016 ம் ஆண்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டதுடன் திருமணமாகாதோர் மற்றும் குடும்பத்தவர்களுக்கென 2 அடுக்கு மாடிகளை கொண்ட 2 கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2017 ஆம் ஆண்டு மே மாதத்தில் M / S சங்கன் கட்டுமான நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இவற்றின் கட்டுமான பணிகளை ஒரு வருடத்திற்குள் பூர்த்திசெய்ய எதிர்பார்ப்பதுடன் 36 ஊழியர்கள் மற்றும் 8 குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதிகளை 2018 இறுதியில் கட்டிடங்களின் பணிகள் நிறைவுசெய்யப்படும் நிலையில் வழங்கப்படவுள்ளது.

இக் குடியிருப்புகளுக்கு மேலதிகமாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கிளிநொச்சியில் குடியிருப்பு அலகுகளை (வீடுகளை) அமைக்க 2016ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ரூபா.25.0 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான கட்டுமான ஒப்பந்தம் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு (மத்திய) வழங்கப்பட்டுள்ளதுடன் பெரும்பாலும் வேலைகள் 2017 திசெம்பரில் நிறைவுசெய்யப்பட்டன. குறித்த நான்கு வீடுகளும் அடுத்த வருட முதற் பகுதியிலிருந்து பயன்படுத்தலாம்.

**விவசாய பீடம்**

திறன்கள் அபிவிருத்தி மையத்திற்கான கட்டிட வளாகம் இரு மாடிகளை கொண்ட நூலகம் மற்றும் த.தொ.தொ கட்டிடம், மாநாட்டு மண்டபம், விளையாட்டு தொகுதி மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதோடு, அது 2016ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிறைவு செய்யப்பட்டு 30.06.2017 அன்று கௌரவ. லக்ஸ்மன் கிரிஎல்ல அப்போதைய உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர், அதிமேதகு தரன்ஜித் சிங் இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் கௌரவ. ரெஜினோல்ட் குரே வட மாகாண ஆளுநர் ஆகியோர் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தனர். இந்திய நிதியுதவியுடனான மூன்று வாகனங்கள், உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் தளபபபாடங்கள் ஆகியவற்றின் கொள்முதல் 2017 இறுதியில் மேற்கொள்ளப்பட்டன.

2016ஆம் ஆண்டில் ஜப்பான் சர்வதேச ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் (JICA) ஊடாக வழங்கப்பட்ட யென் 1,667,000,000 (ஏறக்குறைய ரூபா.2,100 மில்லியன்) ஜப்பானிய நிதியுதவியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கட்டிடத் தொகுதியை தாபிப்பதற்கான திட்டம் அமைச்சரவையால் அனுமதியளிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் ரூபா.315.0 மில்லியனை இலகுபடுத்தல் வேலைகள் மற்றும் வரிப்பணத்திற்காக பங்களிப்பு செய்தது. ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கட்டிடத் தொகுதியின் கட்டுமான ஒப்பந்தம் ஜப்பானிய நிறுவனமான M/S Sumitomo Mitsui Construction Co.Ltd நிறுவனத்திற்கு 976.0 மில்லியன் ஜப்பானிய யென்னிற்கு 2017 செப்தெம்பரில் வழங்கப்பட்டதுடன் உபகரண வழங்கலிற்கான ஒப்பந்தம் M/S Mitsubishi Corporation நிறுவனத்திற்கு 376.0 மில்லியன் ஜப்பானிய யென்னிற்கு 2017 நவம்பரில் வழங்கப்பட்டது. 2019 ஏப்ரில் அளவில் கட்டிடங்களின் கட்டுமானம் நிறைவுசெய்ய எதிர்பார்ப்பதுடன் அதன் பின்னர் ஆய்வுகூட உபகரணங்களின் வழங்கல் மேற்கொள்ளப்படும்.

**பொறியியல் பீடம்**

இயந்திரவியல் மற்றும் செயற்பாட்டு பொறியியல் துறைக்கான கட்டிட தொகுதி 2016 கடைசிப் பகுதியில் இந்திய நிதியுதவியுடன் நிறைவு செய்யப்பட்டு கௌரவ. லக்ஸ்மன் கிரிஎல்ல அப்போதைய உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர், அதிமேதகு தரன்ஜித் சிங் இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் கௌரவ. ரெஜினோல்ட் குரே வட மாகாண ஆளுநர் ஆகியோர் இணைந்து 30.06.2017 அன்று சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தனர். இந்திய நிதியுதவியுடனான மூன்று வாகனங்கள், உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் தளபபபாடங்கள் ஆகியவற்றின் கொள்முதல் 2017 இறுதியில் மேற்கொள்ளப்பட்டன.

**தொழில்நுட்ப பீடம்**

தொழில்நுட்ப பீடம் அதனது இரண்டாவது தொகுதி மாணவர்களை (200ற்கும் அதிகமான) உள்வாங்கிக்கொண்டது. இதில் உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய இரண்டு பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் உள்ளடங்குகின்றன. இப் பீடம் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் முன்னர் பொறியியல் பீடத்தால் பயன்படுத்தப்பட்ட அரை-நிரந்தர கட்டிடங்கள் உடன் மேலுமிரு அரை-நிரந்தர கட்டிடங்கள் மற்றும் பொறியியல் பீடத்தினதும் விவசாய பீடத்தினதும் வசதிகளை பகிர்ந்து கொண்டவாறு இயங்கி வருகின்றது. தற்போதைய விவசாய பீடத்தினது சிற்றுண்டிச்சாலை ரூபா.10.0 மில்லியன் செலவில் தொழில்நுட்ப பீட மாணவர்களின் தேவையை ஈடுசெய்யும் வண்ணம் 2017ல் விரிவுபடுத்தப்பட்டது. பண்டகசாலை மற்றும் விரிவுரை மண்டபமாக பயன்படுத்தவென மேலும் இரு கட்டிடங்கள் ரூபா. 25.0 மில்லியன் செலவில் பீட மாணவர்களின் அவசர தேவைகளை ஈடுசெய்வதற்காக அமைக்கப்பட்டது.

2016ல் அமைச்சரவையின் TEC இனால் ரூபா.525.0 மில்லியனுக்கு அனுமதியளிக்கப்பட்ட கட்டிடத் தொகுதியின் கட்டம் I இன் கட்டுமானம் மேற்கொள்ளவென M/S Link Engineering (Pvt) Ltd நிறுவனத்திற்கு 2017 ஆகஸ்ட்டில் வழங்கப்பட்டது. குறித்த கட்டிடம் மார்ச் 2019ல் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

### 20.1.3 வவுனியா வளாகம்

**பிரதான நுழைவாயில்**

பிரதான நுளைவுவாயிலின் கட்டமைப்பு நிர்மாணம் கட்டிடங்கள் திணைக்களத்தால் (வ.மா) திசெம்பர் 2017ல் ரூபா.11.0 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டது.

**உத்தியோகத்தர் குடியிருப்புகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ரூபா.25.0 மில்லியனை 2016ன் இறுதிப் பகுதியில் நான்கு வீட்டு அலகுகளை வவுனியா வளாகத்தில் அமைப்பதற்கு நிதியை ஒதுக்கீடு செய்தது. இதற்கான கட்டுமான ஒப்பந்தம் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு (மத்திய) வழங்கப்பட்டதுடன் 50 கட்டுமானம் 2017 திசெம்பரில் பூர்த்தி செய்யப்பட்டன.

**விளையாட்டு தொகுதி கட்டிடம் -**

சிறிய உடற்பயிற்சி கூடத்தின் கட்டம் II கட்டுமானம் 2017ல் நிறைவு செய்யப்பட்டதுடன் மாணவர்களின் உள்ளக விளையாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. மைதானத்தின் பார்வையாளர் அரங்கின் கட்டுானம் ரூபா.10.0 மில்லியன் செலவில் 2017 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் திணைக்களத்தினால் பூர்த்திசெய்யப்பட்டது.

**விடுதிகள்**

உயர் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் துரிதமான விடுதி திட்டத்தில் 800 மாணவர்களுக்கு இடமளிக்க வவுனியா வளாகத்திற்கு இரண்டு விடுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த விடுதிகளுடன் தொடர்புடைய வேலைகள் 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு மாணவர்கள் ஏற்கனவே இந்த விடுதிகளில் தங்கியுள்ளனர்.

**வியாபாரக் கற்கைகள் பீடம்**

வணிகக் கற்கைகள் பீடத்திற்கான கட்டடங்களை நிர்மாணித்தல் 2017 ஆம் ஆண்டில் கட்டம் III இன் இருப்பு பணிகள் முடிந்தவுடன் நிறைவு செய்யப்பட்டது. திட்ட முகாமைத்துவ பட்ட நிகழ்ச்சி திட்டத்திற்கான கட்டம் I கட்டடங்கள் திணைக்களத்திற்கு (மத்திய) ரூ. 30.0 மில்லியனுக்கு வழங்கப்பட்டதுடன் மேலாக 2017 டிசம்பரில் முன்னேற்றமடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கட்டம் I நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

**பிரயோக விஞ்ஞான பீடம்**

2017 ஆம் ஆண்டில் உயிரியல் கட்டிடத்தின் இரண்டு அடுக்கின் இரண்டாவது கட்டம் நிறைவு செய்யப்பட்டது. மேலும், 2017 ஆம் ஆண்டில் பௌதீக விஞ்ஞான கட்டிடத்தின் முதல் கட்ட நிர்மாணப் பணிகளும் (NP) பிரிவுக்குட்பட்ட கட்டடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரூபா 200.0 மில்லியன் அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற ICT தொழில்நுட்ப பட்டப்படிப்புக்கு இரண்டு அடுக்கு மாடி கட்டடம் நிர்மாணிக்க M / S Focus மார்க்கெட்டிங் மற்றும் இன்ஜினியரிங் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் மே மாதம் 2017 வழங்கப்பட்டது. 45% வேலைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டியதுடன் இந்த கட்டடம் ஜூன் 2018 ல் நிறைவு செய்யப்பட வேண்டும்.

**வவுனியா வளாக விரிவுரை மண்டபத்திற்கான கட்டிடம்:**

அமைச்சரவையின் TEC ஒப்புதல் பெற்ற விரிவுரை அரங்குகளுக்கான இரண்டு அடுக்கு கட்டிடம் ரூ. 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் M / S VVV.Ramanathan & Co Ltd க்கு 59.37 மில்லியன் ரூபாவுக்கு வழங்கப்பட்டதுடன், டிசம்பர் 2017ம் ஆண்டளவில் 50% வேலைகள் முடிவடைந்தன.

**விரிவாக்கத்திற்கான காணிகள்:**

இராமநாதன் நுண்கலைப்பீடம் (4 லார்ச்சம் 8.1 குளி), மருத்துவ பீடம் (5 லார்ச்சம்) மற்றும் விளையாட்டு விஞ்ஞான அலகு (3 லார்ச்சம் 9.92 குளி) ஆகியவற்றை விரிவுபடுத்த ரூ. 20.8 மில்லியனுக்கு காணிகள்.எதிர்கால உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காக 2017 ல் கொள்வனவு செய்யப்பட்டன. இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு விரிவாக்கத்திற்காக இரு நிலங்களை வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது (இரு நிலங்கள் ஒவ்வொன்றும் 3 லார்ச்சம் 11 குளி)
முல்லைத்தீவில் முன்மொழியப்பட்ட சமுத்திர விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடத்தை நிறுவும் பொருட்டு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் சம்மதத்துடன் முல்லைத்தீவில் மூன்று காணிகள் அடையாளம் காணப்பட்டடுள்ளன. 25 ஏக்கர் ‘‘முள்ளிவாய்க்காலில்’’ (பனையடி) கல்வியியல் மற்றும் நிர்வாக கட்டிடங்கள், 50 ஏக்கர் ‘‘வட்டுவாகலில்’’ மாணவர் விடுதிக்கும், மற்றுமொரு 25 ஏக்கர் ‘‘உப்புமாவெளியில்’’ ஆராய்ச்சி நிலையத்திற்கும் அடையாளம் காணப்பட்டுள்ளன. காணிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்குவதற்கான செயற்பாடுகள் மாகாண காணி ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாக எதிர்கால விரிவாக்கம் தொடர்பில் அக்கறை செலுத்தப்பட்டு வருகின்றது, 330 ஏக்கர் காணியுடன் இணைந்ததாக மேலதிகமான 70 ஏக்கர் காணி அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 2017 ஆம் ஆண்டில் அதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்குவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழகமானது முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்திற்கு அருகாமையில் 4 காணித்துண்டுகள் (33 லார்ச்சம்) அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் சித்த மருத்துவ அலகின் விரிவாக்கத்திற்கு 3 காணித்துண்டுகள் (70 லார்ச்சம்) அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றை அடுத்த ஆண்டளவில் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திட்ட முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்**

பேரவையின் துணை குழு என்ற வகையில் திட்ட முகாமைத்துவ குழு ஒவ்வொரு மாதமும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களின் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு கண்காணித்து வருகிறது.

## 20.2 கல்விசார் செயல்திறன்

### 20.2.1 ஆராய்ச்சி, கண்டுப்பிடிப்பு மற்றும் வெளியீடுகளின் விபரங்கள் (பீட வாரியாக)

| விடயம் | வெளியிடப்பட்டது | வணிகமயப்படுத்தப்பட்டது | சமர்ப்பிக்கப்பட்டது |
|---|---|---|---|
| ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 284 | 01 | 130 |

| | | | |
|---|---|---|---|
| கண்டுப்பிடிப்புகளின் எண்ணிக்கை | 05 | - | - |
| சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 56 | - | - |
| புத்தகங்களின் எண்ணிக்கை | 14 | - | - |
| கட்டுரைகளின் எண்ணிக்கை | 44 | - | 01 |
| ஏனையவை | 55 | - | 13 |
| **மொத்தம்** | **458** | **01** | **144** |

20.2.2 பட்டப்படிப்புகள் பீடம்

| **விடயம்** | **வெளியிடப்பட்டது *** | **வணிகமயப்படுத்தப்பட்டது** | **சமர்ப்பிக்கப்பட்டது** |
|---|---|---|---|
| ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | Ph.D. – 01<br>M.Phil. - 12 | - | - |
| கண்டுப்பிடிப்புகளின் எண்ணிக்கை | - | - | - |
| சஞ்சிகைகளின் எண்ணிக்கை | - | - | - |
| புத்தகங்களின் எண்ணிக்கை | - | - | - |
| கட்டுரைகளின் எண்ணிக்கை | - | - | - |
| ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **13** | - | - |

| **கலாநிதிப் பட்டம் (Ph.D.)** | | | |
|---|---|---|---|
| **தொ இ** | **ஆராய்ச்சியாளரின் பெயர்** | **விடயம்** | **ஆராய்ச்சியின் தலைப்பு** |
| 1 | திரு.சரவணமுத்து ஜெயராஜா | பொருளியல் | மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிய அளவிலான மீனவர் குடும்பங்களின் வாழ்வாதார பாதுகாப்பு. |

| **முது தத்துவமானிப் பட்டம் (M.Phil.)** | | | |
|---|---|---|---|
| **தொ இ** | **ஆராய்ச்சியாளரின் பெயர்** | **விடயம்** | **ஆராய்ச்சியின் தலைப்பு** |
| 1 | வண.ஜோன் பெப்டிஸ்ட் அந்தோனி | கிறிஸ்தவ நாகரீகம் | ஆயர் தியோகுப்பிள்ளையின் சமய சமூகப் பங்களிப்புகளூடாக தலைமைத்துவம் |
| 2 | திரு.முத்துலிங்கம் ரமணன் | கணினி விஞ்ஞானம் | ஒரு கலப்பின முடிவு மரத்தை பயன்படுத்தி மற்றும் தமிழ் OCR க்கு பிந்தைய செயலாக்க பிழை திருத்தும் நுட்பத்தால் அச்சிடப்பட்ட எழுத்துக்களை அங்கீகரிப்பதற்கான ஒரு அணுகுமுறை |
| 3 | திரு.சிற்றம்பலம் சோதீஸ்வரன் | கணினி விஞ்ஞானம் | வாகன சின்ன அங்கீகரிப்பிற்கான ஓர் Coarse-to-fine உபாயம் |
| 4 | திரு.லோஸன் ரெஜினோல்ட் | பொருளியல் | இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் அறிவுசார் பொருளாதாரத்தின் பங்கு |
| 5 | செல்வி. ராஜினி மங்கலேஸ்வரசர்மா | கல்வியியல் | இலங்கையில் துறைசார் அபிவிருத்தி நடைமுறைகள் பற்றிய ஆசிரியர்களின் |

| | | | |
|---|---|---|---|
| | | | கருத்தியல்: யாழ் மாவட்ட ஆசிரியர்களை அடிப்படையாக கொண்ட ஆய்வு |
| 6 | திருமதி.சுமதி ஸ்ரீசுந்தரராஜா | கல்வியியல் | பாடசாலை பாடவிதானத்தின் ஊடாக மென் திறன்களை அபிவிருத்தி செய்யும் போதுள்ள பிரச்சினைகள் (யாழ் வலயத்தின் கனிஸ்ட இரண்டாம் நிலை மாணவர்களை அடிப்படையாக கொண்ட ஆய்வு) |
| 7 | திரு.சிவசுப்பிரமணியம் முகுந்தன் | கல்வியியல் | யாழ் மாவட்ட பாடசாலைகளில் போதனா மொழியாக ஆங்கில மொழியை மீள அறிமுகம் செய்யும் போது காணப்படுகின்ற பிரச்சினைகள் |
| 8 | திரு.சதாசிவம் அமிர்தலிங்கம் | கல்வியியல் | இடைநிலைப் பாடசாலை மாணவர்களின் கேத்திர கணிதக் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் பாடசாலை சார்ந்த காரணிகளின் தாக்கம் - யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வு |
| 9 | திரு.சின்னராஜா ரமணராஜா | இந்து நாகரீகம் | யாழ்ப்பாணத்தில் வீரசைவ பண்பாடு – தாக்கமும் செல்வாக்கும் |
| 10 | திரு.ராஜேந்திரன் கஜநாதன் | முகாமைத்துவம் (கணக்கீடு) | மூலதனம், மூலதன அமைப்பு மற்றும் நிறுவனம் செயல்திறன் : இலங்கையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான சிறப்பு குறிப்பு |
| 11 | திரு.மோகனநாதன் கோகுலன் | கணிதம் | குவாட்டர்நியோனிக் ஹில்ட்பெர்ட் இடைவெளிகள் பற்றிய சட்டக கோட்பாடு |
| 12 | திரு.சியாமசுந்தரம் கஜந்தன் | கணிதம் | Implicit Runge - Kutta Methods to Stiff Differential Equations ஆகியவற்றிற்கான நடைமுறைப்படுத்தல் திட்டங்கள் |

### 20.2.3 நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் (பீட வாரியாக)

அட்டவணை 1 : நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் (பீட வாரியாக)

| **Subject** | **பங்குபற்றியது** | **நிறைவு செய்யப்பட்டது** | **நிகழ்த்தப்பட்டது** |
|---|---|---|---|
| பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 12 | 1 | - |
| பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 03 | - | - |
| டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 12 | - | - |
| சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 06 | 1 | - |
| ஏனையவை | 10 | 19 | - |
| **மொத்தம்** | **43** | **21** | **-** |

### 20.2.4 பட்டப்படிப்புகள் பீடம்

| **விடயம்** | **பங்குபற்றியது** | **நிறைவு செய்யப்பட்டது** | **நிகழ்த்தப்பட்டது** |
|---|---|---|---|
| பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | - | - | * See below |
| பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | - | - | - |

| *Name of the candidate | Conference Presented / Published | Title of the paper |
|---|---|---|
| திருமதி.சாதனா வைகுந்தவாசன் (முகாமைத்துவ சந்தைப்படுத்தலில் கலாநிதி.) | மேம்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் பற்றிய சர்வதேச மாநாடு 2017, அறிவு முகாமைத்துவத்திற்கான சர்வதேச நிறுவனம், கொழும்பு | போருக்கு பிந்திய சந்தையில் MSMES இன் சந்தைப்படுத்தல் உபாயங்கள்: ஓர் கருத்துரு கட்டமைப்பு |

| | | |
|---|---|---|
| திருமதி.கமலாகுமாரி கருணாநிதி. (பொருளியலில் கலாநிதி.) | EPRA சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகை மற்றும் அபிவிருத்தி (IJRD), ISSN : 2455-7838, Volume 2, Issue 1, January 2017 | இளைஞர் சேமிப்பு நடத்தையினை புரிந்துகொள்ளல் மற்றும் பதிலளித்தல்: சான்றுகள், இலங்கையின் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை சேர்ந்த இளங்கலை மாணவர்களிடமிருந்து |
| திரு. சின்னமணி ஸ்ரீதரன் (விவசாய உயிரியலில் முதுதத்துவமாணி.) | சுதேச மருத்துவம் தொடர்பான தேசிய ஆராய்ச்சி மாநாடு மற்றும் கண்காட்சி 2017, சித்த மருத்துவ அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். | Wild Kodo millet, Paspalum spp. : இலங்கையின் வட மாகாண வயல் நிலங்களில் காணப்படும் ஓர் ஒல்லியான மூலிகை |
| | ஆக்கிரமிப்பு ஏலியன் இனங்கள் பற்றிய தேசிய மாநாடு, 2017 | இயல்பற்ற சிக்கலான களைகளில் ஆரம்பகால கலாச்சார நடைமுறைகளின் தாக்கம்: Paspalum scrobiculatum, இலங்கையின் வட மாகாண வயல் நிலங்களில் காணப்படும் ஓர் ஒல்லியான மூலிகை |
| திரு.நாகையா வாமன் (இந்து நாகரீகத்தில் முதுதத்துவமாணி.) | 2வது சர்வதேச சைவ மாநாடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 2017 | இலங்கையின் சைவசித்தாந்த வளர்ச்சியில் சைவப்புலவர் கா.அருணாசலதேசிகரின் வகிபங்கு |
| திரு.கந்தையா பிறட்லி ஜெனட் (மனிதவள முகாமைத்துவத்தில் முதுதத்துவமாணி.) | யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் மே 2017ல் இடம்பெற்ற 24வது வருடாந்த அமர்வில் முன்னிலைப் படுத்துகை செய்தல். | முகாமைத்துவம் மற்றும் அவர்களது அர்ப்பணிப்பு பற்றிய வெளிப்படைத் தன்மையின் ஊழியர் கருத்து: வடக்கு மாகாண பள்ளி கல்வி துறைக்கானதொரு சிறப்பு குறிப்பு |
| | அட்டவணைப் படுத்தப்பட்ட உற்று நோக்கு திறனாய்வு இதழில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது. EPRA சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகை மற்றும் அபிவிருத்தி (IJRD); ISSN(Online) 2455-7838, Impact factor 4.1444 Volume 2 Issue 7 July 2017. | முகாமைத்துவம் மற்றும் அவர்களது அர்ப்பணிப்பு பற்றிய வெளிப்படைத்தன்மையின் ஊழியர் கருத்து: கல்வியியல் முகாமைத்துவத்திற்கானதொரு சிறப்பு குறிப்பு |
| திரு.அந்தோனிப்பிள்ளை அன்டன் கமிலஸ் (புவியியலில் முதுதத்துவமாணி) | JSA, 24வது வருடாந்த அமர்வு மே 2017, ISSN 1800-1289 | நிலப்பயன்பாட்டு திட்டமிடலிற்கான நிலத்தகவல் ஒழுங்கு – யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி நகரசபை பிரதேசத்திற்கான ஓர் ஆய்வு. |
| திரு.ரட்ணசிங்கம் சகுந்தராஜ் (கணினி விஞ்ஞானத்தில் முதுதத்துவமாணி.) | JSA, 24வது வருடாந்த அமர்வு மே 2017 | தமிழ் எழுத்துப்பிழை வார்த்தைகளின் பரிந்துரைகளை உருவாக்குவதற்கு ஹாஷ் அட்டவணையுடன் N-gram நுட்பத்தை பயன்படுத்துதல் |
| திரு.பாலசந்திரன் முரளீதரன் (கணிதத்தில் முதுதத்துவமாணி.) | கணித பௌதீகவியல் சஞ்சிகை, அமெரிக்க பௌதீகவியல் நிறுவனம் (AIP) | ஒத்திசைவான நிலை குவாட்டர்னியன்ஸ் இன் குவாண்டமாக்கல் |
| திருமதி.மேனகா சிவகரன் (உளவியலில் முதுதத்துவமாணி.) | வடிவியல் மற்றும் பௌதீகவியல் சஞ்சிகை, எல்சேவியர் | குவாட்டர்னியன் துண்டுகள் மற்றும் ஹில்ட்பெர்ட் இடைவெளிகளில் அளவிடத்தக்கதொரு துறை பற்றிய ஒத்திசைவான நிலை |
| | பௌதீகவியல் சஞ்சிகை, எல்சேவியர் | குவாட்டர் நியோனிக் அமைப்பில் வெய்ல்-ஹெய்ஸன்பெர்க் லை அல்ஜிப்ராவின் பிரதிநிதித்துவம் |
| | 2வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, திருகோணமலை வளாகம், EUSL செப்தெம்பர் 2017 | யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களிடையே மன அழுத்தத்தை ஏற்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| | | மற்றும் சம்பந்தப்பட்ட காரணிகள் |
| திரு.ரொக் பெர்ணான்டோ ரொசான் (தமிழில் முதுதத்துவமாணி.) | 22வது வருடாந்த மாநாடு மற்றும் சர்வதேச கருத்தரங்கு, கலைப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2017 நவம்பர் 28 - 30 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பதற்றம்: "ஒரு குறுக்கு வெட்டு ஆய்வு |
| | 22வது வருடாந்த மாநாடு மற்றும் சர்வதேச கருத்தரங்கு - 2017, கலைப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2017 நவம்பர் 28 - 30 | யாழ்ப்பாணக் கரையோரக் கத்தோலிக்க மீனவர்களின் வாய் மொழிப் பாரம்பரியத்தில் நடைசாரிகள் |
| திருமதி.சாதனா வைகுந்தவாசன் (முகாமைத்துவ சந்தைப்படுத்தலில் கலாநிதி.) | மேம்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் பற்றிய சர்வதேச மாநாடு 2017, அறிவு முகாமைத்துவத்திற்கான சர்வதேச நிறுவனம், கொழும்பு | போருக்கு பிந்திய சந்தையில் MSMES இன் சந்தைப்படுத்தல் உபாயங்கள்: ஓர் கருத்துரு கட்டமைப்பு |

### 20.2.5 பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகளின் விபரங்கள் (பீட வாரியாக)

அட்டவணை 2 : பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள் (பீட வாரியாக)

| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்வியாளர்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்நாட்டு | - | 01 | - |
| தேசிய | 04 | 03 | - |
| சர்வதேச | 02 | - | - |
| ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **06** | **04** | **-** |

### 20.2.6 நிதிச் செயற்பாடு

அட்டவணை 3 : உண்மையான மீண்டெழும் செலவு

| விடயம் | 2016(ரூ) | 2017(ரூ) |
|---|---|---|
| தனிப்பட்ட ஊதியங்கள் | 1,544,384,950 | 1,745,715,096 |
| போக்குவரத்து | 4,441,637 | 7,837,707 |
| வழங்கல்கள் | 69,878,679 | 73,126,157 |
| பராமரிப்பு | 33,441,808 | 36,363,752 |
| ஒப்பந்த சேவைகள் | 207,266,968 | 257,847,151 |
| ஏனையவை | 79,429,041 | 98,006,149 |
| **மொத்தம்** | **1,938,843,083** | **2,218,896,012** |

### 20.2.7 மூலதன செலவு விபரங்கள்

அட்டவணை 4 : உண்மையான மூலதன செலவு

| விடயம் | 2016 (Rs.) | 2017(Rs.) |
|---|---|---|
| a. தளபாடங்கள், அலுவலக உபகரணம் மற்றும் புத்தகங்களை கையகப்படுத்தல் | 439,005,157 | 752,676,049 |
| b. இயந்திரங்களை கையகப்படுத்தல் | - | - |
| c. கட்டிடங்கள் மற்றும் அமைப்புகளை கையகப்படுத்தல் | 471,820,899 | 450,115,664 |
| d. ஏனையவை (புனர்வாழ்வு) | 266,979,008 | 228,200,525 |
| e. அறிவு மேம்பாடு மற்றும் நிறுவன அபிவிருத்தி ஆராய்ச்சி வலுபபடுத்தல் | 12,083,747 | 22,389,398 |
| **மொத்தம்** | **1,189,888,811** | **1,453,381,636** |

### 20.2.8 திட்டங்களின் விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியுதவி)

அட்டவணை 5 : திட்டங்கள் விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியுதவி)

| பெயர் மற்றும் விபரங்கள் | கடன்/உதவி 2016/2017 | நிதியளிக்கும் நிறுவனம் | TEC ரூபா | RFA ரூபா |
|---|---|---|---|---|
| தேசிய விஞ்ஞான சங்கம்-ஆராய்ச்சி | 8,442,395 | NSF | 5,892,020 | - |
| ஆராய்ச்சி உதவி – பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 6,605,594 | UGC | 13,006,800 | - |
| இயற்கையை பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் (IUCN/MFF/07) | 2,044,409 | IUCN | 2,653,834 | - |
| நீர் இணக்கம் | 860,359 | நோர்வே உயிர் விஞ்ஞான பல்கலைக்கழகம் | - | - |
| HRNCET - NORTPART திட்டம் | 4,742,699 | மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞான பல்கலைக்கழகம் | 16,934,434 | - |
| சொட்டு நீர்ப்பாசன திட்டம் | 2,482,400 | தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் | 6,774,154 | - |
| உணவு பாதுகாப்பு பற்றிய தேசிய தணிக்கை ஆராய்ச்சி திட்டம் | 2,403,900 | NSF | 6,945,000 | - |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அடைகாக்கும் மையத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கல் / இலங்கை கண்டுப்பிடிப்பாளர்கள் ஆணைக்குழு | 9,664,805 | இலங்கை கண்டுப்பிடிப்பாளர்கள் ஆணைக்குழு | - | - |
| தேசிய விஞ்ஞான சங்கம்-ஆராய்ச்சி | 136,491 | நிதி அனுசரணையாளர்கள் | - | - |
| ஆராய்ச்சி உதவி – பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 1,957,704 | நிதி அனுசரணையாளர்கள் | RM 50,000 | - |
| இயற்கையை பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் (IUCN/MFF/07) | 10,000 | தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் | - | - |
| தேசிய விஞ்ஞான சங்கம்-ஆராய்ச்சி | 623,350 | மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம் | 8,418,575 | - |
| ஆராய்ச்சி உதவி – பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 1,256,227 | Norad - Asia திட்டம் | 45,059,557 | - |
| இயற்கையை பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் (IUCN/MFF/07) | 1,617,422 | களணி கேபல்ஸ் PLC | 837,000 | - |

### 20.2.9 திட்டங்களின் செலவு விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியுதவி)

அட்டவணை 6 : திட்டங்களின் செலவு விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியுதவி)

| பெயர் மற்றும் விபரங்கள் | TCE ரூபா | 2016ல் செலவு | 2017ல் செலவு | 31.12.2017 ஆகும் போது ஒன்றுதிரட்டிய செலவு |
|---|---|---|---|---|
| தேசிய விஞ்ஞான சங்கம்- ஆராய்ச்சி | | 6,636,529 | 5,620,692 | 12,257,221 |
| ஆராய்ச்சி உதவி – பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | | 3,744,920 | 5,125,137 | 8,870,057 |
| இயற்கையை பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் (IUCN/MFF/07) | | 1,477,814 | - | 1,477,814 |
| சொட்டு நீர்ப்பாசன திட்டம் | | 2,482,400 | - | 2,482,400 |
| உணவு பாதுகாப்பு பற்றிய தேசிய தணிக்கை ஆராய்ச்சி திட்டம் | | 1,564,281 | 1,359,502 | 2,923,783 |
| பெண் தொழில்முயற்சியாளர் மீதான திட்டம் | | - | - | - |
| UNDP | | 3,751,183 | - | 3,751,183 |
| Narod Waso திட்டம் | | 2,664,399 | 3,634,749 | 6,299,148 |
| களணி சவிய நிகழ்ச்சித் திட்டம் | | 237,172 | 316,970 | 554,142 |
| HRNCET - NORTPART திட்டம் | | - | 219,450 | 219,450 |
| போக்குவரத்து ஆய்வு | | - | 742,600 | 742,600 |
| "தேசிய ஒற்றுமை மற்றும் உயர் கல்வித்திட்டத்தின் மூலம் நல்லிணக்கம்" என்ற நிகழ்ச்சியை ஆரம்பித்தல் | | - | 100,000 | 100,000 |

### 20.2.10 நிதியியல் முன்னேற்றத்தின் விபரங்கள் (செலவு)

அட்டவணை 7: நிதியியல் முன்னேற்றம் (செலவு)

| விடயம் | 2017ல் ஒதுக்கீடு செய்யப்பட்டது (ரூபா) | 2017ல் செலவு செய்யப்பட்டது (ரூபா) | சேமிப்புகள்/மிகை (ரூபா) |
|---|---|---|---|
| மீண்டெழும் திட்டம் தவிர்ந்த | 2,263,999,000 | 2,218,896,013 | 45,102,987 |
| மூலதன திட்டம் தவிர்ந்த (உள்நாட்டு நிதி) | 1,350,000,000 | 1,453,381,636 | 103,381,636 |
| வெளிநாட்டு நிதி திட்டம் | - | - | - |
| உள்நாட்டு நிதி திட்டம் | - | - | - |
| **மொத்தம்** | **3,613,999,000** | **3,672,277,649** | **58,278,649** |

### 20.2.11 நிதியியல் முன்னேற்றத்தின் விபரங்கள் (உருவாக்கப்பட்ட வருமானம்)

அட்டவணை 8: நிதியியல் முன்னேற்றம் (உருவாக்கப்பட்ட வருமானம்)

| விடயம் | 2017ல் மதிப்பிடப்பட்டது (ரூபா) | 2017ல் உண்மையானது (ரூபா) |
|---|---|---|
| பட்டக்கற்கைகள் கற்கைள் | 4,150,000 | 4,825,035 |
| பட்டப்பின் கற்கைள் | 4,600,000 | 4,728,850 |
| கலந்தாலோசனைகள் | - | - |
| ஏனையவை | 21,360,000 | 39,629,409 |
| **மொத்தம்** | **30,110,000** | **49,183,294** |

### 20.2.12 நிதிச் செயற்பாட்டுப் பகுப்பாய்வு -2017

அட்டவணை 9 : நிதி செயற்பாட்டுப் பகுப்பாய்வு -2017

| விடயம் | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு |
|---|---|---|
| ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவு (RE) | RE/மாணவர் எண்ணிக்கை | 252,376.71 |
| ஒரு மாணவருக்கான மூலதன செலவு (CE) | CE/மாணவர் எண்ணிக்கை | 165,307.28 |
| **மொத்தம்** | | **417,683.99** |

### 20.2.13 2017ல் பெற்றுக்கொள்ளப்பட்ட உட்கட்டுமான வசதிகளின் விபரங்கள்

அட்டவணை 10: 2017ல் பெற்றுக்கொள்ளப்பட்ட உட்கட்டுமான வசதிகள்

| **உட்கட்டுமானங்களின் விபரங்கள்** | **2017ல் செலவு (ரூபா மில்லியனில்)** | **பௌதிக முன்னேற்றம் (வீதம் அல்லது தொகை)** |
|---|---|---|
| யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இயற்கை விஞ்ஞான தொகுதியின் கட்டுமாணம் - படி 11 (கட்டம் 5) | 5.47 | 100 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான முன்மொழியப்பட்ட கட்டிடம் வவுனியா பம்பைமடுவில் கட்டுமாணம் மற்றும் முடிவுறுத்தல் | 39.91 | 80 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் வணிக பீடத்திற்கான முன்மொழியப்பட்ட கட்டிடங்கள் வவுனியா பம்பைமடுவில் கட்டுமாணம் மற்றும் முடிவுறுத்தல் | - | 100 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்திற்கான பல்தேவை கட்டிட நிர்மாணம் | 55.88 | 92 |
| கிளிநொச்சி, அறிவியல் நகர், விவசாய பீடத்திற்கான கட்டிடங்களின் கட்டுமாணம் பூர்த்தி. | 4.67 | 90 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவ அலகிற்கான ஐந்து மாடி கட்டிடத்தின் கட்டுமாணம் - கட்டம் - 1 | 6.36 | 95 |
| திருநெல்வேலி, யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடத்திற்கான கட்டிட நிர்மாணத்தின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்தல் | 0.049 | 99 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி, அறிவியல் நகர், பொறியியல் பீடத்திற்கான முன்மொழியப்பட்ட கட்டிடங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமாணம் | 70.0 | 100 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உடற்பயிற்சி கூடத்தின் கட்டுமாணம் | 75.22 | 59 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின், மருத்துவ முறை துறைகளுக்கான எட்டு மாடி கட்டிடத்திற்கான வடிவமைப்பு, கட்டுமாணம் மற்றும் தரகு | 111.94 | 5 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி, அறிவியல் நகர், பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் என்பவற்றிற்கான தொடர்புடைய கட்டமைப்புகள் மற்றும் கட்டிடங்களுக்கான வடிவமைப்பு, கட்டுமாணம் மற்றும் தரகு | 97.58 | 5 |
| வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் இரு மாடிக் கட்டிடத்திற்கான வடிவமைப்பு, கட்டுமாணம் மற்றும் தரகு, சேவைகள் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகள் | 56.95 | 30 |

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி, அறிவியல் நகர், பொறியியல் பீடத்தின் பணியாளர் குடியிருப்பிற்கான வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் தரகு | 30.56 | 35 |
| வவுனியா, பம்பைமடுவில் முழுமைப்படுத்தப்படாத இரு மாடி விரிவுரை மண்டபங்களின் கட்டுமானம் | 18.49 | 40 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி, அறிவியல் நகர், விவசாய பீடத்தில் திறன்கள் அபிவிருத்தி நிலையத்திற்கான கட்டிட வளாக நிர்மாணம் **(இந்திய நிதியுதவி)** | 109.82 | 100 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி, அறிவியல் நகர், பொறியியல் பீடத்தில் சிவில் பொறியியல் மற்றும் இயந்திர பொறியியல் வளாகத்தை நிறுவுதல் **(இந்திய நிதியுதவி)** | 109.89 | 100 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வளாகத்தை நிறுவுதல் | 88.88 | 5 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 4 மாடிகளில் 100 அறைகளை கொண்ட விடுதிக் கட்டுமானம் | (கொடுப்பனவு நிரல் அமைச்சால் மேற்கொள்ளப்பட்டது) | 8 விடுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன, 2 விடுதிகளின் வேலைகள் இடம்பெறுகின்றன. |
| **மொத்தம்** | **881.669** | |